www.onlineuthayan.com

# உதயன்

பக்கங்கள் : 24

சுடர் 27
கதிர் 209

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 08 வெள்ளிக்கிழமை (22/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## ஜனாதிபதி மஹிந்தவை கியூபாவில் சந்தித்தார் தமரா குணநாயகம்

ஹவானா,ஜூன் 22

ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கைத் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கியூபாவின் ஹவானா நகரில் இடம்பெற்றுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக இருந்த தம்மை சுவிட்ஸர்லாந்துக்கான தூதுவராக மாற்றம் செய்தமைக்குத் தமரா தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். இந்த நிலையிலேயே, இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எதுவும் தெரியவரவில்லை. (த)

# நவிப்பிள்ளைக்குப் பணிந்தது அரசு

## இலங்கை வருமாறு உத்தியோகபூர்வ அழைப்பு

கொழும்பு,ஜூன் 22

இலங்கையில் தற்போதுள்ள உண்மை நிலைமைகளை நேரில் ஆராய்ந்து அறிந்துகொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையை (நவநீதம்பிள்ளை) இலங்கைக்கு வருமாறு இலங்கை அரசு உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளைக்கு ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட இந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொள்வார் எனத் தாம் நம்புவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆணையாளர் நவிப்பிள்ளையால் அறிந்துக் கொள்ளமுடியும் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் இந்த வாரம் அறிவிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட 04↘

### இந்தோனேஷியக் கடற்பரப்பில் நேற்றுக்காலை பரிதாபம்

# ஆஸி. சென்ற படகு கவிழ்ந்து 75 தமிழர்கள் மூழ்கிச் சாவு

### உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென அச்சம்

கான்பரா, ஜூன் 22

இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் 200 பேருடன் ஆஸ்திரேலியா சென்ற படகொன்று இந்தோனேஷியாவின் கடற்கரைப் பிராந்தியத்துக்கு அப்பாலுள்ள கிறிஸ்மஸ்தீவின் வடக்கே கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது அந்தப் படகில் பயணித்த இலங்கையர்களில் 75 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்களில் அனேகமாக எல்லோரும் தமிழர்களே என ஆஸ்திரேலிய அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். படகிலிருந்த 40 பேர் ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேஷியக் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். ஏனையோரின் கதி என்னவென்று தெரியவில்லை.

இந்தத் தகவலை ஆஸ்திரேலியச் சுங்கப் பிரிவு நேற்று மாலை உறுதிப்படுத்தியது. இலங்கை நேரப்படி நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

கிறிஸ்மஸ்தீவின் வடக்கே ஏறத்தாழ 110 கடல்மைல்களுக்கு அப்பால் கவிழ்ந்த படகை வேவுப்பணியில் ஈடுபட்டிருந்த விமானமொன்று நேற்று வியாழக்கிழமை ஆஸ்திரேலிய நேரப்படி பிற்பகல் 04↘




## வவுனியா சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே மோதல்

### ஏழு பேர் வைத்தியசாலையில்

வவுனியா,ஜூன் 22

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த 7 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை 9 மணியளவில் அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக்கு உறவினர்களைப் பார்வையிடுவதற்காக அழைத்து வரப்பட்ட கைதி ஒருவர் அரசியல் கைதிகளுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து உறவினர்களைப் பார்வையிடும் நேரத்தில் அரசியல் கைதிகள் மீது சாதாரண கைதிகள் தாக்குதல்களை மேற் 04↘

## படையினரின் நில ஆக்கிரமிப்புக் குறித்து இந்தியாவிடம் முறையிடுவார் சம்பந்தன்

சென்னை, ஜூன் 22

தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை அரசினாலும் அரச படைகளினாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவிடம் முறையிடவுள்ளார் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மருத்துவ சிகிச்சைக்காக சென்னை சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புதுடில்லியில் இந்திய முக்கிய அரசி 04↘

### 90 அரச நிறுவனங்களில் 1000 கோடி ரூபா மோசடி

கொழும்பு, ஜூன் 22

அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் பல செலுத்தாது இரகசியமாக பல்வேறு வீண் விரயங்களுக்கு செல 04↘

## அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதித் தீர்வை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 22

அத்தியாவசியப் பொருள்களுக்கான இறக்குமதி வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன. அந்தவகையில் உருளைக்கிழங்கு, 04↘

| | |
|---|---|
| ஒரு கிலோ சீனிக்கு | ரூ.10 |
| 1 கிலோ டின் மீனுக்கு | ரூ. 85 |
| வெங்காயத்துக்கு | ரூ. 25 |
| வெள்ளைப்பூண்டுக்கு | ரூ. 40 |
| மாசி | ரூ. 250, |
| கருவாடு | ரூ. 100 |
| உருளைக்கிழங்குக்கு | ரூ. 30 |

## சொந்த இடத்தில் மட்டுமே நாம் மீளக்குடியேறுவோம்

### கேப்பாப்புலவு மக்கள் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 22

"எங்களை எங்கள் சொந்த இடத்திலேயே குடியமர்த்த வேண்டும் வேற எந்த இடத்திலும் நாங்கள் மீளக் குடியமர மாட்டோம்" இவ்வாறு முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்கள் 04↘

## சம்பிக்கவின் கொடும்பாவி நேற்று சென்னையில் எரிப்பு

### இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூன் 22

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் பேச்சை விமர்சித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க வெளியிட்டிருந்த கருத்துக்கு எதிராக நேற்று 04↘

### ஜயலத் எம்.பியிடம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணை

கொழும்பு,ஜூன் 22

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணை நடத்தியுள்ளனர். கோட்டையில் அமைந்துள்ள தேசிய சேவைச் சங்கத்தின் 04↘

## குடாநாட்டில் அரசு இப்போது கழிவு எண்ணெய் வர்த்தகம்

### கிண்டலடிக்கிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 22

மக்களைக் காவல் காப்பதற்கு இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் துறையினரும், கண்ணுக்குப் புலனாகாத துறையினரும் தற்போது யாழ்ப்பாணத்தில் முழுநேரத் தொழிலாக கழிவு எண்ணெய் வர்த்தகம் செய்கிறார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவர்களைப் பயன்படுத்தி இன்று அரசு வடக்கில் கழிவு எண்ணெய் அரசியல் செய்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மன்னார் கடலில் எண்ணெய் ஆய்வு நடத்தும் இந்திய நிறு 04↘




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதத்தில் மட்டும் 1000 பேர் கிறிஸ்மஸ் தீவில் தரையிறக்கம்

## ஆஸி. செல்லும் அகதிகள் எண்ணிக்கை உயர்கிறது

கான்பரா,ஜூன் 22

சுமார் 100 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய படகொன்று ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளதாக ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றுமுன்தினம் இரவு ஆஸ்திரேலிய கடற்படையினர் குறித்த படகை கைப்பற்றியுள்ளனர்.

ஒரு மாதத்தில் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்றவர்களின் தொகை இரண்டாவது தடவையாக ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதற்கு முன்னர் 2001ஆம் ஆண்டு டம்பா கலவரத்தில் ஒரு மாதத்தில் 1000 பேர் அகதி அந்தஸ்துக் கோரி ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தனர்.

**ஒரு மாதத்தில் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்றவர்களின் தொகை இரண்டாவது தடவையாக ஆயிரத்தை எட்டியுள்ளது.**

கிறிஸ்மஸ் தீவின் 'பிளையிங் பிஷ்' குடாவில் உள்ள இறங்குதுறை உள்நாட்டு நேரம் பி.ப. 10 மணிக்கு மூடப்பட்ட பின் கடற்படையினர் புகலிடம் கோருவோரைப் படகுகளில் கொண்டு வந்து இறக்கத் தொடங்கினர். வழமையாக இவர்கள் பகல் நேரத்தில் தான் கரைக்குக் கொண்டுவரப்படுவர். கடற்படையினர் புகலிடம் கோருவோரை இறங்குதுறைக்கு கொண்டுவந்த போது அங்கு முதல் நாள் இரண்டு படகுகளில் வந்து சேர்ந்த புகலிடம் கோருவோர் இருந்தனர்.

கரைக்கு கொண்டுவரப்பட்டவர்கள் ஆண்கள் எனவும் அவர்கள் தோற்றத்தில் இலங்கையர் போல் காணப்பட்டதாகவும் இதனைக் கண்டவர்கள் ஆஸ்திரேலிய இணையத்தளத்துக்குக் கூறினர். கடற்பகுதி இருட்டாக இருந்தபோது இறங்குதுறை நல்ல வெளிச்சமாக காணப்பட்டது. கரைக்கு வந்ததும் ஆண்கள் உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் பஸ்களில் ஏற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பஸ் பணியாளர்களுக்கு 'டிமிக்கி'; இளம் ஜோடிக்கு விளக்கமறியல்

பல்வேறு பாதைகளில் பஸ் ஊழியர்களை ஏமாற்றி வந்த ஓர் இளம் ஜோடியை ஜூன் 25 வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் நேற்றுப் பணித்துள்ளார்.

பஸ் ஒன்றில் பணிபுரியும் சாரதி, நடத்துநர் ஆகியோரைக் கொழும்பு பல்கலைக்கழத்துக்கு அண்மையில் ஏமாற்ற முயன்றபோதே கறுவாத்தோட்டப் பொலிஸார் இந்தத் தம்பதியைக் கைதுசெய்து கொழும்பு பிரதம நீதவானிடம் முன்னிலைப்படுத்தினர்.

பொதுவாக பஸ்ஸில் ஏறும் இந்த ஜோடி தூர இடத்தில் உள்ள மரணவீட்டுக்குச் செல்வதற்குப் பஸ்ஸை வாடகைக்கு விடமுடியுமா எனக் கேட்பர். கட்டணம் தொடர்பாக பேரம் முடிந்தபின் மரண வீட்டுக்குச் செல்லவுள்ள பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றுவதற்குப் பஸ்ஸைக் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு விடுமாறு இந்தத் தம்பதியினர் கூறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பல்கலைக்கழகம் செல்லும் வழியில், உணவுப் பொதிகளை வாங்க வேண்டுமெனக் கூறி நடத்துநரிடமிருந்து கடனாகப் பணம் பெற்றுக்கொள்வர். கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்ததும் பஸ் பணியாளர்களை வாசலில் காத்திருக்குமாறும், தாம் மாணவர்களுடனும் பணத்துடனும் வருவதாகக் கூறி பல்கலைக்கழக வளாகத்தினுள் சென்றவர்கள் திரும்புவதில்லை.

இந்த வகையில் இவர்கள் பஸ் பணியாளர்கள் பலரை ஏமாற்றியுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

இந்த விடயம் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து கறுவாத்தோட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரி கபில பிரேமதாஸ, சந்தேகநபர்களைப் பிடிப்பதற்காக நிறுத்தியிருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் மூலம் பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை ஜூன் 25 வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (த)

## தமிழக மீனவர்கள் 9 பேரும் விடுவிப்பு

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட நாகபட்டினம் - அக்கரப்பேட்டை மீனவர்கள் 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டம் அக்கரைப் பேட்டை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 9 பேர் கடந்த 16ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, கடல் சீற்றம் காரணமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்துள்ளனர்.

இதனையடுத்து, இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்துள்ளனர். யாழ். மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே மன்றினால் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்கள் 9 பேரும் தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இரண்டு நாள்களில் அவர்கள் தமிழகம் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சட்டவிரோத கருக்கலைப்பு சங்கானையில் பெண் சாவு

### அதிக இரத்தப் போக்கு காரணமாக

யாழ்ப்பாணம், ஜூன் 22

சட்டவிரோதக் கருக்கலைப்பு மேற்கொண்டதால் அதிக இரத்தப் போக்குக்கு உள்ளான தாயார் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் அது பயனளிக்காது மரணமானார்.

இந்தக் கருக்கலைப்புச் சம்பவம் சங்கானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சந்திரதாஸ் பேபி (வயது-42) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு மரணமானார்.

அவரது வயிற்றில் 6 மாத சிசு இருந்துள்ளது. அதனைச் சட்டவிரோதமாகக் கருக்கலைப்புச் செய்தபோதே அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டுள்ளது. உடனடியாகவே அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது சில நிமிடங்களில் மரணமானார்.

இரவது கணவர் வெளிநாட்டில் உள்ளார், இரண்டு பிள்ளைகள் தாயாருடன் வசித்து வருகின்றனர். சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த4)




பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் ரியோ - 20 மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் புதன்கிழமை உரை நிகழ்த்தினார். இந்த மாநாட்டில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், அநுர பிரியதர்ஷன யாப்பா, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, மஹிந்த அமரவீர மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தேரர் உள்ளிட்ட ஐவர் மீதான வெடிபொருள் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூன் 22

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மாளிகாவத்தை - போதிராஜாராம விகாரையில் வெடிபொருள்கள் மற்றும் துப்பாக்கி மீட்கப்பட்டமை தொடர்பில் ஊவதென்னெ சுமண தேரர் உள்ளிட்ட ஐவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஊவதென்னெ சுமண தேரர் உள்ளிட்ட ஐவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது வழக்கு விசாரணையை எதிர்வரும் நபம்பர் 23ஆம் திகதி ஒத்திவைப்பதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ அறிவித்தார்.

அன்றையதினம் அனைத்து சாட்சியாளர்களையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார். (த)

## புலிகளுக்குத் தகவல் வழங்கிய இராணுவ அதிகாரி மீது வழக்கு

கொழும்பு,ஜூன் 22

விடுதலைப் புலிகளுக்கு உளவுத் தகவல்களை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டி இராணுவ மேஜர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பதுளைப் பிரதேசத்தைச் சேர்ந்த திஸாநாயக்க முதியன்சேலாகே தசநாயக்க என்பவருக்கு எதிராகவே இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகளைக் கொலை செய்யும் திட்டத்துக்குத் தேவையான உளவுத் தகவல்களை இராணுவ மேஜர் வழங்கியுள்ளதாகவும் இதற்காக விடுதலைப் புலிகளிடமிருந்து 16 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இராணுவ மேஜருக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, துவான் முத்தலிப் மற்றும் மஜீட் ஆகிய இராணுவ உயரதிகாரிகளைக் கொலை செய்வதற்குத் தேவையான உளவுத் தகவல்களை குறித்த மேஜர் தசநாயக்க வழங்கியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் பயணம் செய்யும் இடங்கள், தங்குமிடங்கள் தொடர்பிலான புகைப்படங்கள், வீடியோ தகவல்கள் போன்றவற்றைக் குறித்த மேஜர் புலி உறுப்பினருக்கு வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

## சிமெந்து விலை 30 ரூபாவால் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

சிமெந்தின் விலை மீண்டும் பைக்கற் ஒன்றுக்கு 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச பொது முகாமையாளர் எஸ். கெங்காதரன் தெரிவித்தார்.

இந்தப் புதிய விலை அதிகரிப்புக்கு அமைவாக சங்க கிளை விற்பனை நிலையங்களிலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. சங்க கிளை விற்பனை நிலையங்களில் 840 ரூபாவாக விற்கப்பட்ட சிமெந்து பைக்கற் தற்போது 870 ரூபாவாக அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம் யாழ். குடாநாட்டில் சிமெந்தின் நுகர்வும் அதிகரித்துள்ளது.

கட்டட நிர்மாணப்பணிகள் மற்றும் புனர் நிர்மாணப் பணிகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாலேயே நுகர்வு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாதம் ஒன்றுக்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிமெந்துப் பைக்கற்றுகளைத் தென்பகுதியில் இருந்து தருவிப்பதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுகாதாரத் தொழிலாளர்கள் நகர சபைக்கு கால அவகாசம்

வவுனியா, ஜூன் 22

தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஒருவார காலத்தினுள் தகுந்த பதில் கிடைக்கா விட்டால் மக்களை ஒன்று திரட்டித் தொடர் பட்டினிப் போரில் குதிக்கப் போவதாக வவுனியா சுகாதார தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன் நிறுத்தி வவுனியா நகர சபையைச் சேர்ந்த சுகாதார ஊழியர்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதை அடுத்து தம்முடன் பேச்சு நடத்திய நகரசபையின் பதில் தலைவர் தீர்க்கமான முடிவு எதையும் தெரி[illegible] [illegible] காசம் வழங்கினார் என்று ஊழியர்கள் கூறினர். ஒரு வாரகாலத்திற்குள் தீர்க்கமான தொரு பதில் கிடைக்கா விட்[illegible]டத்தில் [illegible]தாக தொழிற் சங்கத் தலைவர் ஆர். சித்திரன் தெரிவித்தார்.

**கோரிக்கைகளுக்கு ஒருவார காலத்தினுள் தகுந்த பதில் கிடைக்கா விட்டால் மக்களை ஒன்று திரட்டித் தொடர் பட்டினிப் போர்**

இது தொடர்பான அவசர கடிதமொன்றை வவுனியா நகரசபைத் தலைவர், பதில் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளோம். அதன் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அரச அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், நகரசபை உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆடைத் தொழிற்சாலைக்கு கிளிநொச்சியில் அடிக்கல்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற எம்.ஏ.எஸ் குழுமம் இந்த இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளையும் நிறுவவுள்ளது. ஏற்கனவே 32 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள இந்த நிறுவனம் 33, 34 ஆவது தொழிற்சாலைகளைக் கிளிநொச்சியில் அமைக்கவுள்ளது.

இதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக எம்.ஏ.எஸ். குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிபுண டயஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமையவுள்ள 34 ஆவது தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. அத்துடன் 33 ஆவது தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் 4 ஆம் திகதி நடைபெற்றதுடன் பயிற்சி நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. (த)



முசலிப் பிரதேச பிரஜைகள் குழுக் கூட்டம் அதன் தலைவர் எம்.சரோரூபன் குரூஸ் தலைமையில் சவேரியார்புரம் மீள்எழுச்சித் திட்டக் கட்டடத்தில் இடம்பெறுகின்றது. (2)

## உயர்ந்தது முருங்கைக்காயின் விலை

துணுக்காய், ஜூன் 22
மல்லாவி பொதுச் சந்தையில் முருங்கைக்காயின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மல்லாவியின் புறநகர்ப் பகுதிகளில் உள்ள முருங்கை மரங்களில் முருங்கைக் காய்கள் போதியளவு காய்த்துக் குலுங்குகின்ற போதிலும் சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காய் 200 ரூபாவுக்கு மேலாக விற்பனையாவதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ங-க-415)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் 'அன்பே சிவம்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணியளவில் கல்லூரியின் அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இதயராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக அன்பே சிவம் அமைப்பின் தலைவர் அருளானந்தசோதி, கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராசகுலசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக அன்பேசிவம் அமைப்பின் இணைப்பாளர் கே.குமணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ங-க-405)

## முன்பள்ளிச் சிறாரின் மனமகிழ் சுற்றுலா

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயங்கன் குளம் கிராமத்தில் அமைந்துள்ள பாபு முன்பள்ளிச் சிறார்கள் கடந்த 15 ஆம் திகதி முன்பள்ளி ஆசிரியை செல்வி புண்ணியமூர்த்தி லதாவின் வழிகாட்டலில் மகிழ்வுச் சுற்றுலா சென்றனர்.

இதன்போது ஐயங்கன் குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள புராதன ஆலயங்கள், குளங்கள், வயல் நிலங்கள், வற்றிய தாமரைக் குளங்கள் என்பவற்றைச் சிறார்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். (ங-க-415)

# முன்னாள் எல்லைப்படையினருக்கு படைப்புலனாய்வாளர்கள் தொல்லை

## விவரங்கள் திரட்டப்படுவதால் மக்கள் அச்சம்

நெடுங்கேணி, ஜூன் 22

**இறுதிப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட மக்கள் படையணியான எல்லைப் படையில் இருந்தவர்களை குறி வைத்து அவர்களின் விவரங்களை படைப் புலனாய்வாளர்கள் திரட்டத் தொடங்கி உள்ளனர். குறிப்பாக வவுனியா வடக்கிலுள்ள பல கிராமங்களில் படைப் புலனாய்வாளர்கள் இத்தகைய முன்னாள் எல்லைப் படையினரின் தகவல்களைத் திரட்டி வருவதால் மக்களிடையே அச்ச நிலை உருவாகியுள்ளது.**

இறுதிப்போர் நடைபெற்ற காலப் பகுதியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் எல்லைப் படை என்ற மக்கள் படையணியை உருவாக்கி இருந்தனர். ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல்களில் இருந்து மக்களை காத்தல் , காயப்பட்ட மக்களை மருத்துவ மனைகளுக்கு கொண்டு செல்லல், குண்டு வீச்சுகளில் இருந்து மக்களை காக்கும் பொருட்டு பொது இடங்களில் பதுங்கு குழிகளை அமைத்தல் என்பன போன்ற பணிகளில் இந்த எல்லைப் படையினர் ஈடுபட்டிருந்தனர். எல்லைப் படையினர் நேரடியாக போர்களில் ஈடுபட்டது கிடையாது. தற்போது உள்ள விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகளை ஒத்ததாகவே எல்லைப் படையினரின் நடவடிக்கைகளும் இருந்தன. அப்பாவி மக்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகளில் இருந்து அவர்களாகவே மீள்வதற்காகவே இந்த எல்லைப் படை உருவாக்கப்பட்டிருந்தது. இவர்களில் அநேகருக்கு ஆயுதப் பயிற்சிகள் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் முன்னாள் எல்லைப் படையினரின் விவரங்களை படைத்தரப்பினர் துருவித் துருவி அறிந்து வருகின்றனர். வவுனியா வடக்கில் உள்ள பட்டிக் குடியிருப்பு, துவரங்குளம், கற்குளம், கீரிசுட்டான், பட்டறைப் பிரிந்த குளம், மருதோடை ஆகிய கிராமங்களில் படைப் புலனாய்வாளர்கள் இவ்வாறு எல்லைப் படையினரின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் முடிவடைந்து, முன்னாள் போராளிகள் கூட புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில்,மக்கள் நலன் சார் அமைப்பொன்றில் இருந்தமைக்காக எல்லைப் படையினரின் விவரங்களை ஏன் இப்போது புலனாய்வாளர்கள் திரட்டுகின்றார்கள்? என்பது புரியாமல் மக்கள் குழப்பத்திலும் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். (ங-க-435)

## டிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, நெடுங்கேணியில் டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்தார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபைக்குச் சொந்தமான டிப்பர் வாகனம் ஒன்று நெடுங்கேணி இறம்பைக் குளம் சந்தியில் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு வழிவிடுவதற்காக டிப்பர் வாகனத்தின் சாரதி அதனை திடீரென நிறுத்தினார். டிப்பர் வாகனத்துக்கு பின்னால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் இந்தத் திடீர் நிறுத்தத்தை எதிர்பார்க்க வில்லை. இதனால் மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது. அதனைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். காயமடைந்தவர் 'சோ ஆ' நிறுவனப் பணியாளர் என்று தெரிவிக்கப்பட்டது. (ங-க-435)

## முத்துஐயன் கட்டு, நெடுங்கேணியில் குறைந்தளவில் வெங்காயச் செய்கை

விதை வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதால் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.

வழக்கமாக வருடத்தின் வைகாசி மாதத்தில் சின்ன வெங்காயச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறுவார்கள். இதனால் அதிகளவு இலாபமும் இவர்களுக்குக் கிடைக்கும். விவசாயிகள் தமக்குத் தேவையான விதை வெங்காயத்தை யாழ்ப்பாணத்திலிருந்து கொள்வனவு செய்வர். ஆனால் யாழ்ப்பாணத்தில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதால் அதிகளவானோர் விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்யவில்லை. இதனால் வெங்காயம் பயிரிடும் நிலப்பரப்பு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் வெங்காயம் உள்ளிட்ட மரக்கறிப் பயிர்களின் விலை உயர்ந்து காணப்படுகின்றது.

முத்துஐயன் கட்டு மற்றும் நெடுங்கேணி ஆகியன வெங்காயச் செய்கைக்குப் பெயர்போன பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-500)

# வவுனியா அரச ஊழியருக்கு காணிகள் வழங்கவும்

## அரச அதிபருக்குப் பொது ஊழியர் சங்கம் மனு

வவுனியா, ஜூன் 22
வவுனியா பிரதேசத்தில் நீண்டகாலமாக வசிக்கும் காணிகளற்ற அரச ஊழியர்களுக்குக் காணிகளை வழங்க வவுனியா மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச பொது ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன், வவுனியா அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக அரச திணைக்களங்களில் கடமை யாற்றிவரும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வீடமைப்பதற்கு காணிகளற்ற நிலையில் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சொந்த இடமில்லாத நிலையிலும் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு காணிகள் அற்ற நிலையிலும் பலர் வாழ்கின்றனர். இவர்களில் பலர் வாடகை வீடுகளிலும் பல வருடங்களாக வசிப்பதால் பல சிரமங்களையும் உளரீதியான தாக்கங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த காலப் போர் இடர்கள், இடப்பெயர்வுகள் என்பவற்றுக்கு முகம் கொடுத்து பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இருப்பதையும் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை என்பதையும் வவுனியா பிரதேச செயலரின் கவனத்துக்குப் பலதடவைகள் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் புதிய அரச அதிபரான நீங்கள் காணிகளை வழங்கி தீர்வினை தருவீர்கள் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ங-க-400)

## பொலிஸ் காவலில் போதைப்பொருள் சந்தேகநபர்கள்

மன்னார், ஜூன் 22
மன்னாரில் போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை ஏழு நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு மன்னார் மாவட்ட நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

மன்னார்- தலை மன்னார் பிரதான வீதியிலுள்ள நடுக்குடா என்னும் கிராமத்துக்கு அருகிலுள்ள கொன்னையன் குடியிருப்பு என்னும் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 773 கிராம் நிறையுடைய 'வைற்சுகர்' என அழைக்கப்படும் போதைப் பொருளை மன்னார் புலனாய்வுப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கைப்பற்றினர்.

இதனையடுத்து இந்தியப் பிரஜையொருவரையும், கொன்னையன் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

அத்துடன் இரு சந்தேக நபர்களையும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு நீதவானின் அனுமதியைக் கோரும் வகையில மன்னார் நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

இருவரையும் ஏழுநாள்கள் தடுத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை மன்னார் நீதிவான் ஏ. யூட்சன் பொலிஸாருக்கு வழங்கினார். (க-12)

## குறைந்தது தனியார் பஸ் வருமானம்

முல்லைத்தீவு,ஜூன் 22
முல்லைத்தீவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடுவதால் தனியார் பஸ் உரிமையாளர்கள் தமக்கு வருமானம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மக்கள் இங்கு மீளக் குடியமர்ந்தபோது தனியார் பஸ்கள் மட்டுமே ஓடின. அவற்றின் உரிமையாளர்கள் வங்கிக் கடன்களைப் பெற்றும், வாடகை அடிப்படையிலும் பஸ்களைக் கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்தினர்.

ஆனால்தற்போது இ.போ.ச. பஸ்கள் இங்கு தாராளமாக சேவையில் ஈடுபடுவதால் தனியார் பஸ்களின் வருமானம் குறைவடைந்து கட்டுப் பணங்களைச் செலுத்த முடியாத நிலைக்கு தாம் வந்துள்ளதாக பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ங-க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை நிறைவேற்றாமல் சர்வதேசத்தை ஏமாற்றுகிறது அரசு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தும் எண்ணம் அரசிடம் இல்லை. அதனால் தமது வழமையான பாணியைக் கடைப்பிடித்து சர்வதேச சமூகத்திற்கு விடை கொடுக்க அரசு முயற்சிக்கின்றது எனத் தெரிவித்த ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தொடரில் அரசு சர்வதேசத்திற்கு காத்திரமான பதிலளித்தே ஆகவேண்டும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேசம் நமது நாட்டுக்கு எதிராக இதுவரையில் எந்த ஒரு பிரேரணையையும் கொண்டுவந்ததில்லை. தற்போதைய அரசின் ஆட்சியில்தான் அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது சர்வதேச ரீதியில் நமது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு அரசு செயற்படுமானால் நாடு சுபீட்சமான பாதையை நோக்கிப் பயணிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ளன. அத்துடன், கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடரிலும் அமெரிக்காவால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அழுத்திக் கூறப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்துவது குறித்து சர்வதேச நாடுகள் கவனம் செலுத்திக் கொண்டே இருக்கின்றன.

## அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி...

சீனி, வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான உணவுப்பொருள்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ கிராம் சீனியின் இறக்குமதி வரி 10 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் செமன் டின் மீனின் இறக்குமதி வரி 85 ரூபாவாலும், ஒரு கிலோ கிராம் நெத்தலியின் இறக்குமதி வரி 30 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உருளைக் கிழங்கிற்கான இறக்குமதி வரி 30 ரூபாவினாலும், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி 35 ரூபாவாலும், ஒரு கிலோ சிறிய வெங்காயத்தின் இறக்குமதி வரி 25 ரூபாவாலும், ஒரு கிலோ வெள்ளைப்பூண்டின் இறக்குமதி வரி 40 ரூபாவாலும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஒரு கிலோ மாசியின் இறக்குமதி வரி 250 ரூபாவினாலும், ஒரு கிலோ கருவாட்டின் இறக்குமதி வரி 100 ரூபாவாலும் உயர்த்தப்பட்டுள்ளன.

## சொந்த இடத்தில்...

வடமாகாண ஆளுநரிடம் தெரிவித்துள்ளனர். கேப்பாப்புலவு மக்களின் சார்பில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை நேற்றுச் சந்தித்தனர். இதன்போதே தம்மை தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துமாறு அவர்கள் வற்புறுத்தினர்.

ஆளுநரிடம் அவர்கள் தெரிவித்த விடயம் வருமாறு-

''நாங்கள் ஏற்கனவே வறுமையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். வேறு இடங்களில் எங்களை மீளக் குடியமர்த்தும் போது இன்னும் மோசமான நிலைக்கே எமது வாழ்க்கை தள்ளப்படும் அபாயம் உண்டு. அதனால் நாம் எமது தொழில், வாழ்க்கை முறை, குடும்பச் சூழல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு எங்களைச் சொந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்துங்கள். வேறு இடங்களில் ஒருபோதும் நாம் குடியேறமாட்டோம்''- என்று தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்புலவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை தற்காலிகமாக வேறு மூன்று இடங்களில் மீளக்குடியமர்த்துவது என கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகவே தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள கேப்பாப்புலவு மக்கள் தமது சொந்த இடத்தைத் தவிர வேறு இடங்களில் குடியமர மாட்டோம். என்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உடாக ஆளுநருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (ங-15-400)

## நவிப்பிள்ளைக்குப் பணிந்தது...

இலங்கை மீதான தீர்மானத்தின்படி இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்பி வைத்தல் தொடர்பில் நவிப்பிள்ளை இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், தனது இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பயணம் அமையும் எனவும் அவர் இலங்கை அரசுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜெனிவாவில் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 20ஆவது அமர்வில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி, இலங்கை மீதான தீர்மானத்துக்கு அப்பால், ஐ.நாவுடன் தொடர்ந்தும் இணக்கமாகச் செயற்படவே அரசு விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகளால் ஐ.நா. ஆணையாளர் நவிப்பிள்ளைக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொள்வார் எனவும் அது கூறியுள்ளது.

## ஆஸி. சென்ற ...

3 மணியளவில் கண்டுபிடித்துள்ளது என ஆஸ்திரேலியச் சுங்கப்பிரிவு தெரிவித்தது.

இப்படகில் ஏறத்தாழ 200 பேர்வரை பயணித்திருக்கக் கூடும் எனவும் முழுமையான விவரங்கள் இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை என்றும் சுங்கப் பிரிவு குறிப்பிட்டது. தலைகீழாகக் கவிழ்ந்த படகின் மேற்பாகத்தில் தங்கள் உயிரைக் கையில் பிடித்தவாறு தத்தளித்துக் கொண்டிருந்த சுமார் 40 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஏனையோர் நீரில் மூழ்கிவிட்டார்கள். இதில் 75 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் எனவும் ஏனையோரின் கதி தெரியவில்லை எனவும் மேற்கு ஆஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர் கார்ள் ஓ கலஹன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எத்தனை பேர் பலியாகியிருப்பர் என உறுதியாகக் கூறமுடியாது. அப்படகில் 200 உயிர்காப்பு அங்கிகளும் இருக்கவில்லை. நீரில் சடலங்கள் மிதந்து கொண்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிரைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருப்போர் குறித்து நாம் அச்சப்படுகிறோம் என்றும் அவர் கூறினார்.

படகில் இருந்த அனைவரும் இலங்கையில் இருந்து புறப்பட்ட புகலிடக்கோரிக்கையாளர்கள் எனவும் அவர்களில் பெரும் பாலானோர் தமிழர்கள் எனவும் ஆஸ்திரேலியா சுங்கப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியத் தேடுதல் கண்காணிப்புக் கடற்பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மீட்புப் பணிகளில் ஆஸ்திரேலியக் கடற்பாதுகாப்பு அதிகார சபையும் ஈடுபட்டுள்ளது. இந்தோனேஷிய தேடுதல் மீட்பு அதிகார சபையான பஸார்னஸ் முழு வீச்சில் தேடுதல் பணியை மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய கடற்பாதுகாப்பு அதிகார சபையின் தகவல் படி இன்னமும் பலர் கடலில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பதாகவும் ஆயினும் அவர்களின் தொகையை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிய வருகிறது.

உயிருக்குப் போராடுவோரை காப்பாற்றுவதற்காக ஆஸ்திரேலிய, இந்தோனேஷிய கடற்படைக் கப்பல்களும் அனர்த்தம் நடந்த இடத்துக்கு விரைந்துள்ளனர். அத்துடன் இரு நாடுகளின் விமானப் பறப்பிரிவும் மீட்புப் பணிக்கு உதவி அளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பான முழுமையான தகவல்களை அறிய தாம் காத்திருப்பதாக இந்தோனேஷிய தேடுதல் மீட்பு அதிகார சபையான 'பஸர்நாஸ்' பிரிவின் பேச்சாளர் ஹகா பிரகோசோ தெரிவித்தார். கவிழ்ந்த படகு இலங்கையைச் சேர்ந்தது என ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இதை ஆஸ்திரேலிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே சுமார் 238 புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றி வந்த மேலும் மூன்று படகுகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே கடந்த 24 மணி நேரமாக கடலில் இடைமறித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இந்த மூன்று படகுகளில் பயணித்தோரும் இந்த விபத்துச் சம்பவம் குறித்து தகவல் தெரிவித்துள்ளனர். (த)

## 90 அரச...

விடுவதுடன், சுமார் 1000 கோடி ரூபா பெறுமதியான தொகை வங்கிகளில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது என கணக்காய்வு விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சுமார் 90 கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் இவ்வாறு அரசுக்கு தெரியாதவாறு நிதி கொடுக்கல் வாங்கல் மோசடியில் ஈடுபட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

## படையினரின்...

யல் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இதன்போதே அவர் இந்த முறைப்பாட்டைத் தெரிவிப்பார் என்றும் இதனைத் தடுத்து நிறுத்த இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கோருவார் எனவும் அறியவருகிறது. ஆயினும் சம்பந்தன் யார் யாரைச் சந்திப்பார் என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை எனப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் இரா.சம்பந்தன் நிகழ்த்திய உரையை அடுத்து அவரைக் கைது செய்யுமாறு சிங்களப் பேரினவாதக் கட்சிகள் குரல் எழுப்பி வருகின்றன. இந்த நிலையில் இரா.சம்பந்தன் மருத்துவ சிகிச்சை ஒன்றுக்காகச் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவர் சென்னையில் இருந்து கொழும்பு திரும்புவதற்கு முன்னதாக புதுடில்லியில் இந்தியாவின் முக்கிய அரசியல் தலை வர்கள் பலரையும் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் இந்தச் சந்திப்புக்களில் தமிழர் தாயகப் பகுதியில் தற்போது அரசினால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்புக் குறித்து அவர் கடும் விசனத்தை வெளியிடுவார் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)

## வவுனியா...

கொண்டனர் எனவும் இதன்போது ஏற்பட்ட களேபரத்தில் சாதாரண கைதிகள் ஏழு பேர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை உயரதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்டு வருவதாகவும் காயமடைந்த கைதிகளுக்கு வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் சிறையதிகாரிகள் மேலும் கூறினர். (த-400)

## ஜயலத் எம்....

தலைமையகத்தில் வைத்து இந்த விசாரணை நடத்தப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத்தின் ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பு, புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் இணைந்து அரசுக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸாரிடம் பதிலளித்துள்ள ஜயலத், 'இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது தன் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப் புகை பிரயோகம் காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றதோடு, இதனால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அதற்கெதிராக உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த மனு மீதான பரிசீலனை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும்' தெரிவித்துள்ளார். (த)

## சம்பிக்கவின் கொடும்பாவி...

வியாழக்கிழமை சென்னையில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர், அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கொடும்பாவியை எரித்ததுடன் இலங்கையின் தேசியக் கொடியையும் கிழித்தெறிந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தியதை அடுத்து அவர்களில் 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

அமைச்சர் சம்பிக்கவின் கருத்து இலங்கைத் தமிழ் மக்களை அச்சுறுவத்துவதாக அமைந்துள்ளது என்றும், அமைச்சரின் கருத்தைக் கண்டித்தும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

அமைச்சர் சம்பிக்கவின் பேச்சுக்கு இந்திய நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இலங்கை அரசுடனான உறவை இந்தியா துண்டிக்க வேண்டும். அமைச்சர் சம்பிக்கவைக் கைது செய்ய இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோஷம் எழுப்பியுள்ளனர். அத்துடன், ஆர்ப்பாட்டத்தின் போது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கொடும்பாவியையும் எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இலங்கையின் தேசியக் கொடியையும் கிழித்தெறிந்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களில் சுமார் 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

## குடாநாட்டில் அரசு...

வனங்கள் இனிமேல் யாழ்ப்பாண நிலப்பரப்பிலும் எண்ணெய் அகழ்வு வேலைகளை ஆரம்பிக்கலாம். அடுத்த வாரம் இலங்கை வரும் சிவசங்கர் மேனனுக்கு இந்த ஆலோசனையை நாம் வழங்க வேண்டும் .இந்த விவகாரம் இன்று சந்தி சிரிக்கும் உண்மையாகிவிட்டது எனவும் அவர் கூறியுள்ளார். மக்களின் ஜனநாயக சாத்வீக போராட்டங்களுக்கு எதிரான, இந்த வெட்கங்கெட்ட கழிவு எண்ணெய் அரசியலை இந்த அரசு நிறுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் பொதுமக்கள் மீது கழிவு எண்ணெய் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

தமது மண் உரிமைக்காக சாத்வீக போராட்டம் செய்ய விளையும் மக்கள் மீது கழிவு எண்ணெய் வீசப்படுகிறது. அவர்கள் பயணம் செய்யும் வாகனங்கள் தாக்கப்படுகின்றன. ஊழல்களை வெளிக்கொணரும் , அரசு அதிகாரிகள், வைத்தியர்கள் வாழும் வீடுகள் மீது கழிவு எண்ணெய் வீசப்படுகிறது.

தமது சமுதாயத்தின் நாளைய தலைவர்களான பல்கலைக்கழக மாணவர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்களது மண்டைகள் உடைக்கப்படுகின்றன. இது தொடர்ச்சியாக நடக்கின்றது.

வெட்கம்கெட்ட முறையில் கழிவு எண்ணெய் வீசுவது, முகமூடி போட்டுக்கொண்டு சந்தியில் வைத்துத் தாக்குவது, வாகனங்களின் கண்ணாடிகளை உடைப்பது, மாணவர்களின் மண்டைகளை உடைப்பது, தொலைபேசியில் அழைத்து பயமுறுத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும். தெற்கிலும் இதுதான் இரண்டு தினங்களுக்கு முன்னர் அம்பந்தோட்டையிலும் நடந்தது. எதிர்க்கட்சி கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட ஒரு பெண்ணும், இளைஞனும் சுட்டு கொல்லப்பட்டுள்ளார்கள்.

நாடு முழுக்க நடைபெறும் அனைத்துச் சம்பவங்களிலும், அரசின் நிலைப்பாடுகளை எதிர்க்கும் பொது மக்களும், எதிர்கட்சி ஆதரவாளர்களும் தான் தாக்கப்படுகின்றார்கள். எனவே இந்த அரசு இனியும், இவற்றை யார் செய்கிறார்கள் என்பது எமக்கு தெரியாது, நாம் விசாரணை செய்கிறோம் என்ற பதில்களைக் கூறமுடியாது.

இத்தகைய கோழைத்தனமான தாக்குதல்கள், தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்தி விட முடியாது. இதன்மூலம் நமது ஜனநாயக போராட்டம் மென்மேலும் வலுப்பெறும் என்பதை விரைவில் அரசு உணரும் -என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் இலங்கை வருகை

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்க ஆதரவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டபோது அதனை ஆதரித்து வாக்களித்ததன் பின்னர் இலங்கைக்கு இந்திய அரசின் சார்பில் அதன் உயர்மட்ட அதிகாரி ஒருவர் வருவது இதுதான் முதல் தடவையாக இருக்கும். இந்திய நாடாளு மன்ற எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையில் வந்து சென்ற குழுவின் நோக்கம் வேறு, ஆனால் மேனனின் நோக்கம் இந்திய அரசின் கருத்தை பிரதிபலிப்பதாகவே இருக்கும்.

மேனனின் வருகையை இலங்கை அரசு தரப்புகள் இன்னமும் உறுதிப்படுத்தாத நிலையில், அவர் வருவது வெறும் ஊகம்தானா என்றும் எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் கொழும்பிலுள்ள இந்திய ஸ்தானிகர் பணியகம் மேனனின் வருகையை உறுதிப்படுத்தியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

போர் முடிவுற்றதன் பின்னர் தேசியப் பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைப்பதாக இலங்கை அரசு அவ்வப் போது வழங்கிவந்துள்ள உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையால் இந்தியா கவலையடைந்திருந்தது. அந்த வகையில் இலங்கையைத் தூண்டி செயற்பட வைப்பதற்கு இந்தியா பல வகைகளிலும் முயற்சி செய்து வந்தது.

இந்திய அரசின் முயற்சியினால் இலங்கையின் அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது இந்தியாவின் அக்கறையாக இருந்து வந்ததுடன் இலங்கை அரசிடமும் அதனைப் பல சந்தர்ப்பங்களிலும் வற்புறுத்தி வந்தது. இந்தியா வற்புறுத்தியது ஒருபுறமிருக்க இலங்கைத் தலைவர்களும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதிகள் அளித்திருந்தார்கள்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் கடைசியாக இலங்கை வந்தபோது விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் 13ஆவது அரசமைப்பு திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்றபோதும் 13ஆவது திருத்தம் மட்டுமல்ல அதற்கு மேலாகவும் சென்று தமிழர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று பத்திரிகைகளுக்கு பேட்டியளித்திருந்தார். இந்த வாக்குறுதிகளின் மீது இந்தியா நம்பிக்கை வைத்து காத்துக்கொண்டிருந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலம்தான் தீர்வு என்ற அறிவித்தலை ஜனாதிபதி திடுதிப்பென்று விடுத்தார்.

அதற்குப் பிறகும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திய பின்பு விடுத்த அறிக்கையிலும் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அறிவித்திருந்தார். அதேபோல் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வந்து திரும்பிய போதும் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தமக்கு உறுதியளித்திருப்பதாக அறிக்கை விடுத்திருந்தார்.

இவை அனைத்தையுமே இலங்கை மறுதலித்துவிட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமே தீர்வு என்று ஒற்றை காலில் நிற்கின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிக்க நேர்ந்தது. போருக்கு முன்னரும், போர் நடந்தபோதும் அமெரிக்கா போன்ற உதவி வழங்கிய நாடுகளுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததன் விளைவாகவே ஜெனிவா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. போர் முடிந்த பிறகும் கூட வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையால் அந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்தது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜிய உறவுகள் இதனால் பின்னடைவு கண்டுள்ள இந்தப் பின்னணியில் இந்திய அரசின் தேசியப் பாதுகாப்புத்துறைச் செயலரின் வருகை முக்கியத்துவமுடையதாகவே இருக்கும் என்று கருதலாம்.

இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினை விடயத்தில் அக்கறை கொண்டிருப்பது ஒரு புறமிருக்க இந்திய மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது, திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடமிருந்து திரும்பப் பெறும் உத்தேசம் மற்றும் போருக்குப் பின்னர் இலங்கையின் கட்டுமானப் பணிகளில் இந்தியா ஈடுபட்டிருப்பது போன்ற விடயங்களும் இருக்கின்றன.

பொதுவில் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்ததன் பின் விளைவுகளை, அந்த சமிக்ஞையை இலங்கை அதிகாரிகள் எந்த அளவு புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சுண்டிப் பார்த்து அறிந்து கொள்வதாகவும் மேனனின் இந்தப் பயணம் அமையக்கூடும் என்று கருத இடமுண்டு.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கான இணைப்பு விரிவுரையாளர் நியமனம் ரத்து

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியதை அடுத்து ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு இணைப்பு அடிப்படையிலான விரிவுரையாளர்களாக உள்வாங்கப்பட்டுள்ள நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்து வடக்கில் கல்வி விடயங்களில் இடம்பெற்றுவரும் முறைகேடுகளைப் பட்டியல்படுத்தியுள்ளது.

அதன்போதே இணைப்பு அடிப்படையிலான விரிவுரையாளர்களை முறையற்ற விதமாக கலாசாலை தெரிவுசெய்து நியமித்துள்ளது என்ற விடயத்தை ஆளுநரின் கவனத்துக்கு ஆசிரியர் சங்கம் கொண்டு வந்தது.

பகிரங்கமாக விளம்பரம் செய்யாமல் குறிப்பிட்ட சில ஆசிரியர்களை மட்டும் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்து அவர்களுக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இணைப்பு அடிப்படையிலான விரிவுரையாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களை இரத்துச் செய்து சுற்றறிக்கையின் பிரகாரம் பகிரங்க விண்ணப்பம் கோரப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்யுமாறு ஆளுநர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு உரிய முறையில் நேர்முக தேர்வை நடத்தி இணைப்பு நிலை விரிவுரையாளர்களை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆசிரியர் சங்கத்துக்கு ஆளுநர் உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யக் குழு

யாழ்ப்பாணம், ஜூன் 22

கிராமிய வங்கிகள் மற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களையும் மேற்பார்வை செய்வதற்கு என்று தேசிய, மாகாண, மாவட்ட மட்டங்களில் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் கூட்டுறவு வங்கி நடவடிக்கையில் ஈடுபடும் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய கூட்டுறவுச் சட்டத்துக்கு அமைவாக வங்கியின் மேற்பார்வைக்கென ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

இந்த வங்கியில் ஏற்படும் பாதிப்புக்கள் கூட்டுறவு திணைக்களத்துக்கு தெரிந்தால் அவை சம்பந்தமான உடனடி வேலைத் திட்டங்கள் கண்டுபிடிக்கப்படும்.

இதில் கூட்டுறவு வங்கி மற்றும் வங்கி நடவடிக்கையில் ஈடுபடும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களையும் கண்காணிப்பதற்கென ஒரு தலைமை அலுவலகம் உருவாக்கப்பட்டு அந்தக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கென மாகாண, மாவட்ட மட்டத்திலும் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

இந்த உத்தியோகத்தர், கிராமிய வங்கிகளின் தற்போதைய நிலைமை பற்றி அடையாளம் கண்டு அதற்கான நிதி நிலைமைகள் பற்றி பரிசீலித்து தகவல்களை மீளாய்வு செய்து மாகாண ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

வங்கிகளின் நடவடிக்கைகள் மற்றும் சேமிப்பு, இலாபம் தொடர்பான விடயங்களை மத்திய அரசு மாகாண, மாவட்ட ரீதியில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, கூட்டுறவுக் கிராமிய வங்கி மற்றும் வங்கி நடவடிக்கையில் ஈடுபடும் 24 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளும் முகமாக யாழ். மாவட்டத்தில் 3 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (ம-13)

## பாடசாலை அபிவிருத்திக்கு மக்கள் வங்கியின் உதவிகள்

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 2 பாடசாலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திக்கு என்று தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் குறித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர்களிடம் இந்த நிதி கையளிக்கப்படவுள்ளது என்று கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார். (ம-9)

# இடமாற்றப் பட்டியலை விரைந்து வெளியிடுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமாகாண அரச திணைக்கள அலுவலர்களை 2011 இறுதியில் இடமாற்றுவதற்கான பட்டியல் தயார் செய்யப்பட்ட போதும் இடமாற்றம் வழங்கப்படவில்லை.

இதனால் குறித்த அலுவலகத்தில் 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அலுவலர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2011 இன் இறுதியில் வடமாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் 5 வருடங்களுக்கு மேல் வளர்ச்சிப்பிரதேசம், கஷ்டபிரதேசம், அதிகஷ்டப் பிரதேசம், என்ற அடிப்படையில் கடமையாற்றியவர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

2012 ஜனவரியில் இந்தப் பட்டியல் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் ஜூன் மாதம் முடிவடையவுள்ள நிலையிலும் இது வெளியிடப்படாதது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த மாதம் முதல் வாரத்திலாவது இடமாற்றப் பட்டியலை வெளியிடுமாறு பாதிக்கப்பட்ட வடமாகாண அரச அலுவலர்கள் மாகாண பொது நிர்வாக செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-41)

# குழந்தைகளின் போசாக்குத் தொடர்பில் அக்கறை எடுக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 22

சர்வதேச போஷாக்கு மாதமான ஜூன் மாதத்தில் போசாக்கு குறைந்த மற்றும் மெலிந்த ஒரு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளின் போஷாக்கு தொடர்பாக அக்கறையுடன் செயற்படுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரலேந்தி குபேரா, சகல பிரதேச பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

போஷாக்குக் குறைந்த குழந்தைகளின் உணவு வகை தொடர்பாக அனைத்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

சிறுவர்[illegible] போஷாக்கு உணவுகள் தொடர்பாகவும் அறிவூட்டல்களை வழங்குவதுடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவை தொடர்பான கண்காட்சிகளையும் பிரதேச ரீதியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிள்ளைகளதும் போஷாக்குக் குறைபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவை கிடைக்கும் முறைகள் தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், 'தகுந்த நேரத்தில் என் பிள்ளைக்கு தரமான உணவு தரும் நல நிறைவு' எனும் தொனிப்பொருளில் போஷாக்கு செயற்திட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் சிறுவர் போஷாக்கு விழிப்படையச் செய்யும் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் மேற்கொள்வதுடன் சத்துணவு தொடர்பான போஷாக்கு கண்காட்சிகளையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் சாவகச்சேரிப் பிரதேச சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட போஷாக்கு உணவுகள் தொடர்பான கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-9-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பித்தும் இயங்காது கிடக்கும் முரசுமோட்டை பொதுச் சந்தை

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி முரசுமோட்டைப் பொதுச் சந்தை புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ள போதிலும் பொது மக்களுக்குப் பயன்தருவதாக இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கரைச்சிப் பிரதேச சபையின் கண்டாவளை உப-அலுவலகத்தின் கீழ் இந்தச் சந்தை இயங்கி வருகிறது.

அண்மையில் சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட்டது.

சந்தை திறந்து வைக்கப்பட்டபோது சந்தைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் மரக்கறி வகைகள் விற்பனை செய்யக் கூடாதென்று கண்டிப்பான அறிவித்தல் பிரதேச சபையால் விடுக்கப்பட்டது. இதனால் அந்த வர்த்தக நிலையங்களில் மரக்கறி விற்பனை நிறுத்தப்பட்டது.

தற்போது ஒருவர் மட்டுமே சந்தையில் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டுள்ளார். அவர் 11 மணிக்கு முன்பதாகவே விற்பனையை நிறுத்தி விடுகின்றார். அத்துடன் போதியளவு மரக்கறியும் இங்கு கிடைப்பதில்லை.

இதனால் இங்குள்ள மக்கள் தமது மரக்கறித் தேவைகளுக்கு சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள தர்மபுரம் அல்லது பரந்தன் சந்தைக்கே செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பாகப் பிரதேசசபை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறிய போதிலும் பயன் ஏதும் கிடைக்கவில்லை என்று மக்கள் குறைப்படுகின்றனர்.

இனியாவது சந்தையின் குறைபாடுகளைக் களைந்து மக்களுக்குக் குறைவில்லாத சேவைகளை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

## கௌதாரிமுனைப் பகுதியில் அதிகளவில் மணல் அகழ்வு

அக்கராயன், ஜூன் 22

பூநகரிப் பிரதேசத்திலுள்ள கௌதாரிமுனைப் பகுதியில் களவாக மணல் ஏற்றும் செயற்பாடுகள் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்த பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுகின்ற நிலையில் இந்த மணல் அகழ்வு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது அதிகளவில் மணல் ஏற்றப்படும் இடமாகக் கௌதாரிமுனை மாறியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வகை தொகையின்றி இடம்பெற்று வரும் மணல் அகழ்வைத் தடுக்காது விட்டால் கடல் நீர் உட்புகும் அபாயத்தைத் தடுக்க முடியாதெனக் கடைசியாக இடம்பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மணலை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

ஆனால் மேலிடத்துச் செல்வாக்குப் பெற்ற பலர் எந்தவிதமான அச்சமுமின்றி மணல் ஏற்றிச் செல்வதைக் காண முடிந்தது.

தனியார் சிலர் கொள்ளை இலாபம் ஈட்டும் போது மணல் அள்ளும் இடங்களிலுள்ள மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருவதாகவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (க-18)

## கரைச்சிப் பிரதேச சபையால் பத்திரிகைகள் விநியோகம்

அக்கராயன், ஜூன் 22

கரைச்சிப் பிரதேசசபைக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் பத்திரிகைகளைப் பார்வைக்கு வைப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப்பிரதேச சபைப் பிரிவில் சுமார் 40 கிராமங்கள் உள்ளன. இந்த நிலையில் மீளக்குடியமர்வின் பின்னர் பத்திரிகைகளைப் பார்வையிடும் வாய்ப்பைக் கிராமங்களில் வாழுகின்ற மக்கள் இழந்துள்ளனர். இதனால் பத்திரிகைகளை மக்கள் வாசிக்கும் நிலையைக் கரைச்சிப் பிரதேச சபை மீண்டும் உருவாக்கியுள்ளது.

இதனால் கிராம மக்கள் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்க முடியுமென்பதுடன் உலக நடப்புக்களையும் அறிந்து கொள்ள இயலும். (க-18)



மன்னார் தலைமன்னார் பிரதான வீதியின் புதுக்குடியிருப்பு - ஓலைத்தொடுவாய் சந்தியில் இருந்து கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதியில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட விரானா என அழைக்கப்படும் வெளிச்சவீடு பாழடைந்த நிலையில் பரிதாபமாகக் காட்சியளிக்கின்றது. (க- 12)

## கடும் காற்றால் அவலப்படும் மெனிக்பாம் வாசிகள்

வவுனியா, ஜூன் 22

அண்மைக் காலமாக வீசிவரும் கடும் காற்றினால் மெனிக்பாம் நலன்புரி முகாம் மக்களும், பாடசாலைச் சமூகமும் புழுதியால் அவலப்படுகின்றனர்.

கடந்த சில நாள்களாக கடுமையாக வீசும் காற்றினால் அந்தப் பகுதி எங்கும் புழுதிப் படலமாகக் காட்சி தருகின்றது. இதனால் பாடசாலையில் சீரான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. அத்துடன் பாடசாலையை நேரத்துடன் மூட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காற்றுக்கு மத்தியில் இருந்து கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்களும், கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களும் புழுதியில் இருந்து பாதுகாப்பதற்காக தமது முகத்தை கைக்குட்டை, சேலை மற்றும் புத்தகங்களால் மூடிக் கொண்டே தமது நாளாந்தக் கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் தற்போது வீசும் கடும் காற்றினால் பாடசாலைக் கூரைகள் சேதமடைந்து வருவதுடன் தற்காலிக கொட்டகைகளின் கூரைத்தகடுகள் கழன்று காற்றில் பறந்து விடுகின்றன.

இதனால எதிர்வரும் பருவ மழைக்கு தாம் பாரிய நெருக்கடியைச் சந்திக்கும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக முகாமில் வசிக்கும் பொது மக்களும், ஆசிரியர் சமூகத்தினரும் தெரிவிக்கின்றனர். (க-400)

## மணலை விற்பனை செய்வதற்கு கி.அ.சங்கங்களுக்கே அனுமதி

### கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

அக்கராயன், ஜூன் 22

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மட்டுமே மணலை விற்பனை செய்வதற்கு அனுமதியுண்டு. தனிப்பட்ட நபர்கள் மணலை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற மண் அகழ்வு தொடர்பான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மணலை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தில் கிராமத்தினை அபிவிருத்தி செய்யவும் மண் அகழும் இடத்தைச் சீர் செய்யவும் முடியும். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். அத்துடன்இயற்கைவளத்தைப் பாதுகாத்துப் பேண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## மல்லாவியின் வீதிகளும் அகலப்படுத்தப்படுகின்றன

துணுக்காய், ஜூன் 22

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவி நகரின் உள்ளக வீதிகள் கனரக வாகனங்களின் மூலம் அகலப்படுத்தப்பட்டுப் புனரமைக்கப்படுகின்றன.

மல்லாவியில் இருந்து யோகபுரம், திருநகர் செல்லும் வீதிகள் அகலமாக்கப்பட்டுள்ளதுடன் நீர் பாய்ந்து செல்லும் வாய்க்கால்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளில் பிரதேச சபை உறுப்பினர்களும் பங்கு கொண்டு வருகின்றனர்.

மக்களின் விரைவான பயணத்துக்கு வகை செய்யும் பொருட்டே இந்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வகையில் மங்கை நகர் கிராமத்து வீதிகளும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (க-415)

# மக்களைத் தடுக்கும் இராணுவச் செயற்பாடுகள் மீள்குடியமர்வைத் தடுக்கும் அரசின் வெளிப்பாடு

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. அறிக்கை

மன்னார், ஜூன் 22

காணி அனுமதிப் பத்திரங்களுடன் வந்தால் மட்டுமே காணியைத் துப்புரவு செய்ய அனுமதிப்போம் எனக் கூறி மீளக்குடியமரச் செல்லும் மக்களை இராணுவத்தினர் திருப்பியனுப்பும் செயற்பாடு தமிழ் மக்களின் மீளக்குடியமர்வைத் திட்டமிட்டுத் தடுக்கின்ற அரசின் வெளிப்பாடே ஆகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

காணி அனுமதிப்பத்திரங்களுடன் வந்தால்தான் காணியைத் துப்புரவு செய்ய அனுமதிப்போம் என்று தெரிவிக்கப்பட்டு இராணுவத்தினரால் மக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். மிக நீண்டகால போர் காரணமாக, இம்மக்கள் [illegible] அனுமதிப்பத்திரம் உட்பட இதர ஆவணங்களைப் பெற முடியாமலும் அதிலும் சிலர் அவற்றை இடப்பெயர்வின் போது தொலைத்துள்ள நிலையில் கிராம அலுவலர் ஊடாகக் காணி அனுமதிப் பத்திரம் பெற்று பிரதேச செயலரிடம் அதற்கான ஒப்புதலைப் பெறமுடியாது அரச நிர்வாகத்திலும் குளறுபடிகள் நிலவுகின்றன.

இந்த நிலையில் போர் ஓய்வுக்கு வந்தும் மீளக்குடியமர முடியாதவாறு மக்கள் தமது காணிகளுக்குள் உட்புக முடியாது தடுக்கப்பட்டு வருகின்றனர்.

போர் இடம்பெற்ற கடந்த முப்பது வருடகாலமாக வவுனியா மாவட்டத்திலும் ஏனைய இடங்களிலும் பெரும்பாலான காணிகளுக்குப் பிரதேச செயலகங்களால் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், தற்போது வட மாகாண ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுக்கமைய காணி அனுமதிப்பத்திரங்கள் [illegible] மாற்றுவதோ மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய மக்களின் கழுத்தை இறுக்கிப்பிடிக்கும் அரசின் நிகழ்ச்சி நிரலால் மீள்குடியமர்வோர் எங்கிருந்து காணி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவது? அவர்கள் தமது காணிகளில் மீள்குடியேறுவது எவ்வாறு?

அத்துடன் தனியார் காணிகளுக்கு மட்டுமன்றி, பொதுக்காணிகளான கோயில்கள், முன்பள்ளிகள் முதலானவற்றுக்கும் இவ்வாறே இராணுவத்தினால் காணி அனுமதிப் பத்திரங்கள் கோரப்படும் நடைமுறையே நடைமுறையில் உள்ளது. இவ்வாறான பொதுக்காணிகள் மிக நீண்டகாலமாக மக்களின் பாவனையிலிருப்பவையே.

வன்னி மாவட்ட மக்கள் விவசாயத்தையே தமது பிரதான ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளதனால் அவர்களிடம் குடியிருப்புக் காணி, மேட்டுக்காணி மற்றும் வயல்காணிகள் பரம்பரை பரம்பரையாகக் காணப்படுகின்றன. இவைகளையே தமது வாரிசுகளுக்கும் பிரித்து வழங்குகின்றனர்.

இவ்வாறான நிலையில் சிவில் நிர்வாக முறைமைக்குப் புறம்பாகப் பாதுகாப்புப் பரிவினரால் இம்மக்களிடம் சொந்தக் காணிகளுக்கும் பொதுக்காணிகளுக்கும் காணி அனுமதிப்பத்திரம் கோரப்படுவதானது அரசு தமிழ் மக்களின் மீளக்குடியமர்வைத் திட்டமிட்டுத் தடுக்கும் நடவடிக்கையாகவே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போதைக்கு கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்திச் சங்கம், வணக்கத்தல நிர்வாகத்தினர் ஆகியோரின் உறுதிப்படுத்தலைக் காணிச் சொந்தக்காரர் பெற்று அதனடிப்படையில் காணிக்குரியோர் மீளக்குடியமர இலகுவான நடவடிக்கை பின்பற்றப்பட வேண்டும்.

மேலும், எத்தகைய சிவில் நிர்வாகத்திலும் இராணுவத்தினரின் தலையீடு விலக்கப்படவும் வேண்டும் என்றும்சிவசக்தி ஆனந்தன்மேலும் தெரிவித்துள்ளார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு கடற்பாதை சேவை அடுத்த ஆண்டிலேயே சாத்தியம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

குறிகாட்டுவான் துறைக்கும் நயினாதீவுக்கும் இடையிலான கடற்பாதைச் சேவை ஒன்று அடுத்த ஆண்டிலேயே சாத்தியமாகும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் இருந்து கொண்டு வரப்பட்ட கடற்பாதை ஒன்று குறிகாட்டுவான் துறைக்கு அருகே சேவையில் ஈடுபடுத்தப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்படுகிறது.

இந்தக் கடல் பாதைக்கான இயந்திரமும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் செயற்பாடின்றிக் கிடக்கிறது.

குறிகாட்டுவான்துறை மற்றும் நயினாதீவு இறங்கு துறை என்பவற்றை ஆழமாக்கி சீர் செய்த பின்னரே இந்தக் கடற்பாதைச் சேவையை ஆரம்பிக்க முடியும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போது இந்த இறங்கு துறைகள் ஆழம் குறைந்து காணப்படுவதனாலும் துறையின் கரைக்கு கடற்பாதையை கொண்டு வரக்கூடிய வசதி இல்லாமையாலும் இந்தச் சேவையை உடன் ஆரம்பிக்க முடியாது. இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னரே அது சாத்தியமாகும் என அவர் மேலும் கூறினார்.

அடுத்த ஆண்டிலே இந்தச் சேவையை ஆரம்பிக்க கூடியதாக இருக்கும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த-17)

# திவிநெகும திட்டத்தில் தையல் பயிற்சிகள்



வலி வடக்கு, ஜூன் 22

திவிநெகும திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வந்த தையல் போதனாசிரியர்களால் முதலாவது தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இப் பயிற்சி வகுப்பில் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த இருபத்தைந்து பயனாளிகள் கலந்துகொண்டனர். யாழ். பண்ணை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க மேல் மாடியில் இந்த பயிற்சி வகுப்புஇடம்பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கைத்தொழில் பொருள் கண்காட்சியில் வழங்கப்பட்ட படிவங்களின் அடிப்படையில் இடம் பெற்ற நேர்முகத்தேர்வில் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது.

தையல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மேலதிகமான பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான தையல் பொருள்கள் வழங்கப்படுவதுடன் வங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்கான உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஐந்து கட்டங்களாக இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளதாகவும் முதல் கட்ட பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவித்தனர். (ம-86)

# கசூரினாக் கடற்கரைப் பகுதிக்கு தனியான பொலிஸ் பிரிவு தேவை

## யாழ். செயலகக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதிக்கு தனியான பொலிஸ் பிரிவு ஒன்றை நியமிக்குமாறு காரைநகர் பிரதேச செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காரைநகருக்கென்று தனியான பொலிஸ் நிலையம் இல்லாத காரணத்தால், காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது.

அங்கு ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்காக தனியாக பொலிஸ் அலகொன்றை நியமிக்குமாறு காரைநகர் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டார்.

மருதங்கேணி பிரதேசத்தில் சட்டவிரோதமாக மண் அகழப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டது. இது தொடர்பில் பொலிஸிடம் முறையிடப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது.

பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படாத முறைப்பாடுகள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் உறுதியளித்தனர். (ம-5)

# நயினாதீவு செல்வதற்கு மேலதிக படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 22

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு குறிகாட்டுவானுக்கும் நயினாதீவு இறங்கு துறைக்கும் இடையில் மேலதிக படகுகள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளன.

தற்போது வீசும் கடும் காற்றை அடுத்து படகுகளில் ஏற்றப்படும் பயணிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

படகுகளில் பயணம் செய்யும் மக்கள் பாதுகாப்பு அங்கிகள் அணிவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தற்போது 30 இற்கும் மேற்பட்ட படகுகள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக படகோட்டிகள் தெரிவித்தனர்.

இதனை விட ஆலயத்தில் தேர், தீர்த்தத்திருவிழாக்களின் போதும் படகுச் சேவை மேலும் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)



கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் செயலாளர் தமிந்த டி. சொய்ஷா பாஷையூருக்கு அண்மையில் சென்றிருந்தபோது, கடல் கொந்தளிப்பின் தாக்கத்தைத் தவிர்க்க பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு கோரி பாஷையூர் கடற்றொழிலாளர் மனுவைக் கையளிக்கின்றனர். (ம)

# கோழிப் பண்ணையில் திருட்டு

மருதனார்மடம் விவசாயப் பாடசாலைக்கு அருகில் உள்ள கோழிப் பண்ணையில் புகுந்த திருடர்கள் மோட்டார் சைக்கிள் உட்பட கையடக்கத் தொலைபேசியையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு மருதனார்மடம் விவசாயப் பாடசாலைக்கு அருகில் உள்ள கோழிப் பண்ணையில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று கையடக்கத் தொலைபேசிகள் என்பன திருடப்பட்டுள்ளன என்று இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# குடியமர்ந்து 3 வருடங்களாகியும் வீட்டுத்திட்டம் எதுவும் இல்லை

## காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாமையே காரணம்

கொழும்புத்துறை, ஜூன் 22

கொழும்புத்துறை வசந்தபுரம் கிராம மக்கள் மீளக்குடியமர்ந்து 3 வருடங்களாகியும் இதுவரை வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள குடியிருப்பாளர்களின் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாமையே அரச மற்றும் பொது நிறுவனங்களின் வீட்டுத் திட்ட உதவிகள் கிடைப்பதற்கு தடையாக உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இந்தப் பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

பின்னர் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்த இவர்கள் 3 ஆண்டுகளுக்கு முன்னர் மீளக்குடியமர்ந்து குடிசைகளை அமைத்து வசித்து வருகின்றனர்.

இதுவரை இந்தக் குடும்பங்கள் வாழ்ந்துவரும் காணிகளுக்குரிய உரிமங்கள் அரசால் வழங்கப்படுவதில் தாமதம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

> எமக்கும் இந்த உதவிகள் கிடைக்காதா என கொழும்புத்துறை வசந்தபுரம் கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அயலில் உள்ள மீளக் குடியமர்வுக் கிராமங்களில் வீடமைப்பு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துப்படும் போது எமக்கும் இந்த உதவிகள் கிடைக்காதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அடுத்து வரும் மழை காலத்துக்கு இடையில் பாதுகாப்பான வீட்டு வசதிகளை ஏற்படுத்தித்தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

# அச்சுக்கூட ஒழுங்கையில் கழிவு நீரால் துர்நாற்றம்

சுண்டுக்குளி அச்சுக்கூட ஒழுங்கையில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் நீண்ட காலமாக கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார பாதிப்புக்களையும் ஏற்படுத்துவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடிமனைகள் செறிந்து காணப்படும் இந்தப் பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாது உள்ளது. இந்த நிலையில் [illegible] ஏற்பட்டு கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது.

இந்தக் கழிவு நீர் பிரதான கால்வாய்க்குச் செல்லும் பகுதி உயரமாக உள்ளதால் நீர் வடிந்தோட வாய்ப்பில்லாது காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிவு நீர் தேக்கத்திலிருந்து உருவாகும் நுளம்புகளால் டெங்கு மற்றும் மலேரியா நோய்கள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-135)

# மண்டிகைக்குளத்தில் தாமரை: விவசாயம் பாதிப்பதாக விசனம்

சங்கானை, ஜூன் 22

சங்கானை மண்டிகைக் குளத்தில் தாமரைக் கொடி படர்ந்துள்ளதால் விவசாயிகள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குளத்தில் தேக்கி வைக்கப்படும் மழைநீர் இதற்கு அண்மித்த பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு மழை இல்லாத காலங்களில் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் இறைக்கப்படுவது வழமை.

இந்த நிலையில் தற்போது இக் குளத்தில் தாமரைச் செடிகள் வளர்ந்து குளத்தை நிரப்பிக் காணப்படுகின்றது. இதனால் குளத்திலிருந்து விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டு தாமரைச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தும் இதற்கான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ம-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டையரின் உடல்கள் வெற்றிகரமாகப் பிரிப்பு



மத்திய பிரதேசத்தில் இரட்டைப் பெண்குழந்தைகளின் உடல்கள் 12 மணிநேர அறுவைச் சிகிச்சைக்கு பின்பு வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டன. மத்திய பிரதேச மாநிலத்தில் ஸ்துதி மற்றும் ஆராதாணா ஆகிய குழந்தைகள் பிறக்கும் போதே உடல்கள் ஒட்டிப் பிறந்தன. இந்தக்குழந்தைகளின் இருதயம் மற்றும் கல்லீரல் ஆகியவை ஒட்டிய நிலையில் காணப்பட்டன.

இந்தநிலையில் இந்தக்குழந்தைகளை தனித்தனியே பிரிக்க மருத்துவர்கள் முடிவு செய்ததையடுத்து இந்திய வைத்தியர்களுடன் ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த வைத்தியர்கள் உட்பட மொத்தம் 34 பேர் அடங்கிய குழுவினர் 12 மணி நேரம் அறுவைச் சிகிச்சை நடத்தி குழந்தைகளைத் தனித்தனியாகப் பிரித்துள்ளனர்.

நான்கு கட்டங்களாக அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டு குழந்தைகள் தனித்தனியே பிரிக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதேவேளை இந்தச் சிகிச்சைக்காக ரூ.20 லட்சத்தை நிவாரண நிதியிலிருந்து வழங்குவதாக அந்த மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார். மேலும் மருத்துவர்களின் சாதனைக்கும் பாராட்டும் தெரிவித்தார். (வ)

# இந்தியாவின் நிர்ப்பந்தங்களுக்கு இலங்கை செவிசாய்க்கவில்லை

## இறுதிப் போர் குறித்து ஞானதேசிகன் விளக்கம்



ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்திய அரசு ஆதரவு வழங்கியது

சென்னை, ஜூன்22

இலங்கையில் போர் நடைபெற்றவேளை போர் நிறுத்தம் செய்யுமாறு இந்தியா விடுத்த வேண்டு கோளை இலங்கை அரசு செவிசாய்க்கவில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்தி ஈழத்தமிழரைக் காப்பாற்றத் தவறியது, முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் நீதியை நிலைநாட்டத் தவறியது போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டி, இந்திய ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் அறிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் போரை நிறுத்துமாறு இந்தியா மட்டுமன்றி ஏனைய பல நாடுகள் விடுத்த வேண்டுகோள்களுக்கும் கூட இலங்கை அரசு செவிசாய்க்கவில்லை.

அத்துடன் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிர்ான தீர்மானத்துக்கு இந்திய அரசு ஆதரவு வழங்கியது -என்று அதில் மேலும்சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

## அகதிமுகாம் வரைபடங்களை தயாரிக்க தமிழக அரசு உத்தரவு

அகதிகள் முகாம்களை அடையாளம் காண, 'நிலவரை படங்கள்' தயாரிக்க வேண்டும் என்று முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில், 110 அகதிகள் முகாம்களில், 1.25 லட்சம் பேர் வசிக்கின்றனர்.

தமிழக அரசு சார்பில் இவர்களுக்கு, இலவச மின்சாரம், அகதிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை உள்ளிட்ட, அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இருப்பினும், பெரும்பாலான முகாம்களில் வசிக்கும் அகதிகள், கடல் மார்க்கமாக, ஆஸ்திரேலியா தப்பிச் செல்கின்றனர். அங்கிருந்தும் தமிழகத்துக்கு வருவதாக, பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதைத்தவிர்க்க, கியூ பிரிவு, மத்திய புலனாய்வுத்துறை, மற்றும் அகதிகள் பிரிவு அதிகாரிகள், மாநில அளவில் திடீர் பயணம் மேற்கொள்ள வசதியாக, அகதிகள் முகாம் உள்ள இடங்களை எளிதில் கண்டறிய, 'நிலவரைபடம்' தயாரிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. (வ)

## ஜனாதிபதித் தேர்தலில் சங்மாவின் போட்டி உறுதி



ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதில் உறுதியாக உள்ள முன்னாள் மக்களவை சபாநாயகர் ப.ஏ.சங்மா நேற்றுமுன்தினம் தேசியவாத காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்.

ப.ஏ.சங்மா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடாதென்று தேசியவாத காங்கிரஸ் அவரை வற்புறுத்தி வந்தது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தேசியவாத காங்கிரஸ் இடம்பெற்றிருப்பதால் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் அந்தக் கட்சி இருந்தது இதற்கு முக்கிய காரணமாகும்.

மேலும் ஜனாதிபதி பதவிக்கு சங்மா போட்டியிட்டால் கட்சியிலிருந்து நீக்குவோம் என்று அந்தக்கட்சி எச்சரிக்கையும் விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நண்பகலில் சங்மாவை சுப்ரமணியன சுவாமி சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுப்ரமணியனசுவாமி, சங்மா தேசியவாத காங்கிரஸில் இருந்து ராஜிநாமாச் செய்துள்ளார் என்று தெரிவித்தார்.

தேசியவாத காங்கிரஸில் இருந்து ராஜிநாமாச் செய்துள்ளதன்மூலம் ஜனாதிபதித் தேர்தலில் சங்மா போட்டியிடுவது உறுதியாகி உள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்துக்கு இந்தியா 1000 கோடி வழங்கும்

## மன்மோகன் தெரிவிப்பு



இந்தியா, ரஷ்யா, பிரேசில் தலா 1000 கோடி டொலரும், சீனா 4300 கோடி டொலரும், தென்னாபிரிக்கா 200 கோடி டொலரும் வழங்கவுள்ளன.

ஐரோப்பிய பொருளாதார சரிவை மீட்க, சர்வதேச நாணய நிதியத்துக்கு (ஐ.எம்.எப்) இந்தியா ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கும் என்று இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மெக்சிகோவில் ஜி20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டுக்கு இடையே பிரிக்ஸ் அமைப்பு நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா நாடுகளின் தலைவர்கள் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

இதன்போது, ஐரோப்பிய பொருளாதாரச் சரிவைத் தடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் அளிக்கும் 43 ஆயிரம் கோடி அமெரிக்க டொலருடன், பிடிரிக்ஸ் நாடுகளும் உதவ வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதன்படி இந்தியா, ரஷ்யா, பிரேசில் தலா 1000 கோடி டொலரும், சீனா 4300 கோடி டொலரும், தென்னாபிரிக்கா 200 கோடி டொலரும் அளிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் பிரதமர் மன்மோகன் சிங் இந்தியா சார்பில் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார். (வ)

## ஆந்திராவில் நிலநடுக்கம்

சித்தூர், ஜூன்22

ஆந்திர மாநிலத்தில் கிருஷ்ணா, குண்டூர், நலகொண்டா, கம்மம் ஆகிய 4 மாவட்டங்களில் நேற்று முன்தினம் மாலை நில நடுக்கம் ஏற்பட்டது.

கிருஷ்ணா நதியோரத்தில் உள்ள இந்த 4 மாவட்டங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். வீடுகளில் இருந்தவர்கள் பீதியுடன் வீதிகளில் தஞ்சமடைந்தனர். குண்டூர் மாவட்டத்தில் நத்தனப்பள்ளி, குண்டூர், கம்மம் மாவட்டத்தில் சிந்தகாணி, எர்ரபாளையம், மஜீரா, கம்மம், நலகொண்டா மாவட்டத்தில் மிரியாலகூடா, வேமுலபள்ளி, தாமரைசெர்லா, உசூர் நகர், கிருஷ்ணா மாவட்டத்தில் நந்திகாம், ஜெக்கய்யபேட்டை, பெனுகண்டிபாலு போன்ற இடங்களில் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த பகுதிகளில் 3.7 ரிச்டர் அளவு பதிவானது.

# ஜெயலலிதா, சுஷ்மா ஆதரவு சங்மாவுக்கு



சென்னை, ஜூன்22

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பி.ஏ.சங்மாவுக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ முதல்வர் ஜெயலலிதாவும் பாரதீய ஜனாதாக்கட்சியின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ்ஜும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலையில் கொட நாடு செல்லும் முன்னர் முதல்வர் செய்தியாளர்களுக்குக் பேட்டி அளித்தார். இதன் போது அவர் தெரிவித்ததாவது:-

கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் பி.ஏ.சங்மாவை அ.தி.மு.க. ஆதரிப்பதாகக் கூறி அவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பல்வேறு கட்சித்தலைவர்களிடம் பேசி ஆதரவு திரட்டி வந்தேன். என்னிடம் பல்வேறு கட்சித் தலைவர்கள் பேசி வருகிறார்கள். எனவே எனது முடிவில் எந்த மாற்றமும் இல்லை - என்றார்.

இதேவேளை சுஷ்மா சுவராஜ் தெரிவித்ததாவது:-

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஐக்கிய ஜனதாதளமும், சிவசேனையும் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்க முடிவுசெய்துள்ளன. எனினும் சங்மாவை ஆதரிக்க பா.ஜ.க. முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக கூட்ட ணிக் கட்சிகளிடையே கருத்தொற்றுமை ஏற்படுத்த முயற்சித்தோம். ஆனால் அது தோல்வி அடைந்து விட்டது -என்றார். (வ)

# நித்திக்கு குருதிப் பரிசோதனை

நித்தியானந்தா மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் அவரது குருதி மற்றும் குரல் போன்றவற்றை பரிசோதனை செய்வதற்கு கர்நாடக மாநில ராமநகரம் நீதிமன்றம் உத்தர்விட்டுள்ளது. நடிகை ரஞ்சிதாவுடன் நித்தியானந்தா இருப்பது போன்ற காட்சி இறுவட்டு வெளியீடு விவகார வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனைக்கு சமுகமளிக்குமாறு ஏற்கனவே 6 முறை கர்நாடக இரகசியப் பொலிஸார் சார்பில் நித்தியானந்தாவுக்கு மனு அனுப்பப்பட்டது. இருப்பினும் நித்தியானந்தா அந்த மனுக்களை நிராகரித்திருந்தார். இதனையடுத்து இரகசியப் பொலிஸார் ராமநகரம் நீதிமன்றத்தை நாடினர். இந்த நிலையில், நித்தியானந்தா இந்தப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



சில ஆண்டுகளுக்கு முன்பு நித்தியானந்தாவும், நடிகை ரஞ்சிதாவும் படுக்கையறையில் இருப்பது போன்ற காட்சிகளை தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. இந்த இறுவட்டை லெனின் கறுப்பன் என்கிற நித்தியானந்தாவின் முன்னாள் சீடர்தான் தயாரித்து வெளியிட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. இந்த இறுவட்டு விவகாரம் தொடர்பாக கர்நாடக இரகசியப் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்தனர். இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்தபோதே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆயிரம் அகதிகள்

## மியன்மாரில் உள்நாட்டுக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நிர்க்கதி நிலையில்

மியன்மாரின் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக சுமார் 90,000 மக்கள் அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பெண்ணொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தும் 3 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்தும் ரக்கினி மாநிலத்தில் வன்முறைகள் வெடித்தன.


இரு குழுக்களுக்கிடையிலான தாக்குதல்கள் - பதில் தாக்குதல்கள் காரணமாக 50 பேர் உயிரிழந்தனர்.



பெருமபாலான அகதிகள் பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது அந்நாட்டு எல்லை மூடப்பட்டுள்ளது. கடந்த வாரம் இடம்பெயர்ந்த மூன்றில் இரண்டு பங்கு மக்களில் சுமார் 66,000 பேருக்கு அவசர உணவு விநியோகத்தை மேற்கொண்டதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

பெண்ணொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தும் 3 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்தும் ரக்கினி மாநிலத்தில் வன்முறைகள் வெடித்தன.

# வழி மறித்த வாத்துக்கள்



பண்ணையாளர் ஒருவர் தனது 5,000 வாத்துக்களை நகர் பகுதிக்கூடாக அழைத்துச் செல்ல முயன்றபோது வீதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது சீனாவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர், சீனாவின் கிழக்கு மாகாணமான செய்ஜியாங்கின் டெய்ஸோ நகர வீதியில் தனது 5,000 வாத்துக்களையும் அழைத்துக்கொண்டு உதவியாளருடன் சென்றதை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துள்ளனர்.

மேற்படி வாத்துகளுக்கு உணவு தேடுவதற்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள குளமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டன.

பெரும் எண்ணிக்கையிலான வாத்துக்களின் வரவினால் பாதசாரிகள் மிகவும் சிரமப்பட்டு தமது பயணத்தை தொடர்ந்துள்ளனர்.

தான் அடிக்கடி தனது வாத்துக்களை அழைத்துக்கொண்டு நகருக்கூடாக செல்வதாகவும் ஆனால் ஒருபோதும் தனது வாத்து எதுவும் தொலைந்ததில்லையென்றும் எனவும் மேற்படி பண்ணையாளர் தெரிவித்துள்ளார்.

# அகதிகளுக்கு உதவியளித்தார் ஹொலிவூட் நடிகை அஞ்சலினா

பிரபல ஹொலிவூட் நடிகையான ஏஞ்சலினா ஜூலி சிரிய அகதிகளுக்காக 100,000 அமெரிக்க டொலர்கள் உதவித் தொகை அளித்துள்ளார் என அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் தெரிவித்துள்ளது.

யு.என்.எச்.சி.ஆர்.எனும் ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் பீடத்தின் விசேட இராஜ தந்திரியும், சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை வென்றவருமான ஏஞ்சலினா ஜூலி, உலக அகதிகள் தினத்தில் இந்த உதவித் தொகையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2001 ஆம் ஆண்டு முதல் யு.என்.எச்.சி.ஆர். இற்கான தன்னார்வத் தூதுவராகத் தொண்டு புரிந்து வந்த



இவர், இந்த வருடத் தொடக்கம் முதல் அதன் விசேட இராஜ தந்திரியாகப் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

இந்த நிலையில் இவர் ஊடகங்களுக்குப் பேட்டியளிக்கையில், உலகில் அதிகரித்து வரும் அகதிகள் பிரச்சினைக்கான தீர்வு என்பது அரசியல் ரீதியானது மட்டுமல்ல, மனிதாபிமான ரீதியானதும்கூட என்றார்.

மேலும் இந்தப் பிரச்சினைகள் அதிகரிக்கும்போது சர்வதேச சமூகம் களத்தில் இறங்கி அகதிகளுக்கான தீர்வை உடனடியாகக் கொண்டு வர பாடு பட வேண்டும் எனவும், அதுதான் மிக நீண்ட காலம் நிலைக்கக் கூடியதும் கலவரங்களைத் தடுக்கக் கூடியதுமான தீர்வுத் திட்டத்தை அகதிகளுக்கு வழங்கும் எனவும் கூறினார்.

சிரியாவில் மக்கள் எழுச்சி ஏற்பட்ட பின்னர் சுமார் 10, 000 இற்கும் அதிகமான மக்கள் அயல் நாடுகளான துருக்கி மற்றும் லெபனானுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.



எகிப்தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை வெளியிடக்கோரி அந்த நாட்டு மக்களும் எதிர்க்கட்சியினரும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை அடக்க பொலிஸார் கெய்ரோவின் ஒவ்வொரு சந்திகளிலும் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

# சூகிக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியது ஒக்ஸ்போர்ட்



மியன்மாரின் ஜனநாயகத் தலைவி, ஆங் சாங் சூகிக்கு, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நேற்றுமுன்தினம், கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.

மியன்மாரின், தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர், ஆங் சாங் சூகி. கடந்த, 1990ஆம் ஆண்டு நடந்த, ஜனநாயகத் தேர்தலில், இவர் அமோக வெற்றி பெற்றும், அவரை ஆட்சியில் அமர விடாமல் வீட்டுச் சிறையில் அடைத்தது இராணுவ அரசு.

பல ஆண்டு காலம் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சூகி, தற்போது விடுதலையாகி, நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார். இந்த நிலையில், சூகி வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணத்தைத் தற்போது மேற்கொண்டு வருகின்றார். தற்போது அவர் பிரிட்டனில் உயர்மட்டக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றார். லண்டனில், இவரது கணவர் மைக்கேல் ஆரிஸ், 1999ஆம் ஆண்டு, புற்று நோயால் இறந்தார். நாட்டை விட்டுச் சென்றால் மீண்டும் தாயகம் திரும்ப முடியாது என்ற காரணத்தால் கணவரது இறுதிச் சடங்கில்கூட இவர் கலந்து கொள்ளவில்லை. நேற்றுமுன்தினம், அவர் தனது 67ஆவது பிறந்த நாளை மகன்களான அலெக்சாண்டர் மற்றும் கிம்முடன் சேர்ந்து கொண்டாடினார். பிரிட்டன் நாடாளுமன்றத்தில் சூகி நேற்று உரையாற்றினார். பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனையும், இளவரசர் சார்ள்ஸ், கமீலா ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசினார்.

மியன்மார் ஜனநாயகத்துக்காகப் போராடும் சூகிக்கு, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், கடந்த 1993ஆம் ஆண்டு, கௌரவ கலாநிதிப் பட்டத்தை அறிவித்தது. ஆனால், அவர் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால், இந்தப் பட்டத்தை பெற முடியவில்லை. இந்த நிலையில், நேற்று முன்தினம் அவர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில், கௌரவ கலாநிதிப் பட்டத்தைப் பெற்று உரையாற்றினார்.

# பிரான்ஸில் அல்குவைதா ஆயுததாரி கைது

வெளிநாடுகளில் அல்குவைதா ஆயுததாரிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களை நடத்துபவரான நாமென் மஸிசி கைது செய்யப்பட்டார்.

இவர் பிரான்ஸைச் சேர்ந்தவர். பிரான்ஸில் அந்த இயக்கத்தின் தலைவராகவும் இருந்தார்.

இவர் பாகிஸ்தான்-ஈரான் எல்லைப்பகுதியில் கைது செய்யப்பட்டார் என அந்த நாட்டு இராணுவத்தினர் தெரிவித்தனர். ஆனால் எப்போது கைது செய்யப்பட்டார் என்பதைத் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

பாகிஸ்தான் அரசால் தேடப்பட்ட நபரான இவர், அல்குவைதா இயக்கத்தின் தலைவர் யுனில் அல்-மெரிதனிக்கு மிகவும் நெருக்கமானவர்.

ஆபிரிக்க நாடுகளில் தாக்குதல்களை நடத்த ஒசாமா பின்லேடனால் நியமிக்கப்பட்டவர்தான் இந்த மெரிதனி. நாமெனுக்கு, ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஜிகாதிகளுடன் தொடர்பு இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் மெரிதனி உள்ளிட்ட அல்குவைதா இயக்கத்தின் தலைவர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அப்போது, நாமென் பாகிஸ்தானிலிருந்து ஈரானுக்குத் தப்பிச் சென்று விட்டார்.

இப்போது இவர் கைது செய்யப்பட்டிருக்கின்றமையானது அல்குவைதா இயக்கத்துக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அடுத்த வாரம் முடிவுகள்

எகிப்து நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலின் இறுதி முடிவுகள் அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் அந்தப்பதவிக்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் முகம்மது முர்ஷி மற்றும் முன்னாள் பிரதமர் அகமது ஷபீக் ஆகியோர் போட்டியிட்டனர். தேர்தல் நீதிபதி பாரூக் சுல்தான் தலைமையில் நடைபெற்றது. தேர்தலின் முடிவுகள் இன்று அறிவிக்கப்பட இருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளமை உட்பட பல்வேறு காரணங்களால் தேர்தல் முடிவுகள் அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

# பொறுப்பின்றி ஊர் சுற்றும் பிரிட்டன் இளவரசர்

பிரிட்டன் இளவரசர் ஹரிக்கு, இளம்பெண்களுடன் ஊர் சுற்றிப் பொழுதைக் கழிப்பதில் மகிழ்ச்சி உண்டு.

பிரிட்டன் இளவரசர் சார்ளஸ்- டயானா தம்பதியரின் இரண்டாவது மகன் இளவரசர் ஹரி இவர் [illegible] இளவரசர்களில் 3ஆவது இடத்தில் உள்ளார். சம்பவத்தன்று இவர் தென்மேற்கு லண்டனில் உள்ள புட்னி பாலத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் 160 கி.மீட்டர் வேகத்தில் பறந்து சென்றார்.

அந்த மோட்டார் சைக்கிளில் அவருக்குப் பின்னால் அழகிய இளம்பெண் ஒருவர் அமர்ந்திருந்தார். அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்ததும் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இளவரசர் ஹரியைத் தடுத்து நிறுத்தினர். விசாரணை நடத்திய போது தான் அவர் இளவரசர் ஹரி என தெரிய வந்தது.

தன்னுடன் பயணம் செய்த இளம்பெண்ணை குஷிப்படுத்தி அவரை மயக்கவே இதுபோன்று வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியதாக அவர் கூறினார்.

அப்போது அவர் தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை. அதற்காகவும், வேகமாக மோட்டார் சைக்கிள் செலுத்தியதற்காகவும் பொலிஸ் அதிகாரிகளிடம் வருத்தம் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பெண் யார் என்பது இதுவரை மர்மமாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரதமருக்கான தேர்வு நடக்கிறது

## பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவருக்கு வாய்ப்பு

இஸ்லாமாபாத்,ஜூன் 22

புதிய பிரதமரைத் தேர்வு செய்வதற்காகப் பாகிஸ்தான் நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது.

பாகிஸ்தானின் தற்போதைய பிரதமரான கிலானியை அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தகுதி நீக்கம் செய்தது. இதைத் தொடர்ந்து புதிய பிரதமரைத் தேர்வு செய்வதற்காகப் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் கூட்டம் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது என பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவரும், மத விவகார அமைச்சருமான குர்ஷீத் ஷா தெரிவித்தார்.



பிரதமர் பதவிக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று நடைபெற்றது. கட்சியின் வேட்பாளரை ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவு செய்தார்.

புதிய பிரதமர் பதவிக்கான போட்டியில் கட்சியின் மூத்த தலைவர் மக்தூம் சஹாபுதீன் முன்னிலையில் இருக்கின்றார் எனப் பாகிஸ்தான் மக்கள் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அவரைத் தவிர, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் செத்ரி அகமது முக்தார், முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹீனா ரப்பானிகர், லாகூரைச் சேர்ந்த பாகிஸ்தான் மக்கள் கட்சிப் பிரமுகர் சாமினா குர்கி ஆகியோரின் பெயர்களும் பிரதமர் பதவிக்குப் பரிசீலிக்கப்படுகின்றன.

புதிய பிரதமர் பதவிக்கான போட்டியில் கட்சியின் மூத்த தலைவர் மக்தூம் சஹாபுதீன் முன்னிலையில் இருக்கின்றார் என பாகிஸ்தான் மக்கள் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே, பிரதமரைத் தேர்வு செய்வது தொடர்பாக விவாதிப்பதற்காக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது.

# பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அதிகளவு பெண்கள் பதவி வகிக்கின்றனர்

பாரிஸ், ஜூன் 22

பிரான்சின் நாடாளுமன்றத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு பெண்கள், சிறுபான்மை இனத்தவர்களுக்கு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியாக விளங்கும் சோசலிசக் கட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட 280 உறுப்பினர்களில் 106 பேர் பெண்களாவர். பசுமைக்கட்சியில் வெற்றி பெற்ற 18 பேரில் சரிபாதி பெண்களாவர்.

சாக்கோசியின் வலதுசாரிக் கட்சியில் 194 பேரில் 27 பேர் மட்டுமே பெண்கள் இருந்தனர். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் பெண்களுக்கான பங்களிப்பில் (27%) பிரான்ஸ் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய சராசரிப் பங்களிப்பு 24.6% ஆகும்.

அந்நிய நாட்டில் வாழும் பிரான்சியக் குடிமக்களில் 11 பேர் உறுப்பினர் பதவியைப் பெற்றனர். அந்நிய நாட்டிலிருந்து பிரான்சுக்கு வந்து குடியுரிமை பெற்றவர்கள் 8 உறுப்பினர் பதவியைப் பெற்றுள்ளனர்.

இதுகுறித்து சம பாலின ஆய்வில் ஈடுபட்டு வரும் சமூகவியல் அறிஞரான ரேஜானே சேனக் கூறுகையில், ஆண் பெண் பங்கீடு குறிப்பிடத்தக்க விடயமாக தற்போது அணுகப்படுகிறது, என்று தெரிவித்தார்.

கடந்த 2007ஆம் ஆண்டில் நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட போது 107 பெண்களே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவும் இந்தியாவும் உடன்படிக்கைகளுக்கு தயார்



இந்தியா-சீனா இடையே இராணுவ பாதுகாப்பு விடயத்தில் இருநாடுகளும் ஒத்துழைத்து செயற்படுவது என்றும், 2015ஆம் ஆண்டில் மற்றும் 100 பில்லியன் டொலர் அளவுக்கு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது என்றும் இரு நாட்டுத் தலைவர்களும் மெக்சிகோவில் நடைபெற்ற பேச்சுக்களில் உடன்பட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக இந்திய பிரதமர் மன்மோகன்சிங், சீனா பிரதமர் வென்ஜியாபோ ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். மெக்சிகோவின், லொஸ் கெபோஸ் நகரில் நடந்த, 'ஜி20' உச்சி மாநாட்டில் பங்கேற்ற, பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பிரேசிலில் நடக்கும், 'ரியோ பிளஸ் 20' மாநாட்டில் பங்கேற்பதற்காக, ரியோடி ஜெனிரோ சென்றடைந்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும், தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசடைதலைக் குறைப்பது குறித்தும், இந்த மாநாட்டில் பங்கேற்கும் பன்னாட்டுத் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர். இதற் கிடையில் இந்தியா- சீனா பிரதமர்கள் இருவரும் சுமார் 40 நிமிடம் தனியாகச் சந்தித் துப் பேச்சு நடத்தினர். இந்தப்பேச்சில் இரு நாடுகளும் இராணுவ ரீதியிலான உறவை வலுப்படுத்துவது என்றும், 2015 இல் 100 பில்லியன் டொலர் வரை வர்த்தகம் செய்து கொள்வது என்றும், தீர்மானிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன்மாத்தாய் கூறுகையில், இந்தியா-சீனா இடையே எல்லைப்பிரச்சினை, நதிநீர் பங்கீடு ஆகியன பற்றி விவாதிக்கப்பட்டது. இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இந்திய உள்கட்டமைப்பு துறைகளில் சீனா முதலீடு செய்ய வேண்டும் என மன்மோகன்சிங், வலியுறுத்தினர் - என்றார்.


**J.C.B வாடகைக்கு (பைக்கோ)**



* போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
* குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம்,
பளை (தபாற்கந்தோர் எதிரில்)

தொடர்புகளுக்கு:
077 7712482/ 0779847285

(19408) (6,8,10)



**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை) செவ்வாய் விடுமுறை

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

(19539) (6,7,45)


# 89 இணையத்தளங்களைத் தடை செய்தது சீனா

சீனா, ஜூன் 22

சீனாவில் அரசு நிறுவனங்களின் பெயர்களில் மோசடி வேலைகளில் ஈடுபட்ட 89 இணையத் தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. அரசு நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பெயர்களில் இந்த இணையத்தளங்கள் இயங்கி வந்தன என சீன அரசு தெரிவித்துள்ளது.

ஊழலுக்கு எதிரானதாகவும், சட்ட புலனாய்வு நிறுவனங்களின் பெயர்களிலும் சில இணையத் தளங்கள் இயங்கி வந்ததாகவும் இணையத் தள தகவல் தொடர்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த இணையத் தளங்கள், சில நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் குறித்துத் தவறான தகவல்களை வெளியிட்டதுடன், போலிப் பத்திரிகையாளர் சான்றிதழ்களையும் ஆயிரக்கணக்கானோருக்கு விற்பனை செய்துள்ளன.

இது போன்ற மோசடியில் ஈடுபட்ட சிலரையும் சீன அரசு கைது செய்ய உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே சீனாவில் பல இணையத் தளங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன.


உ
கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும்
இணுவில் இளந்தொண்டர் சபையின் மாணாக்கனும்
திரு.திருமதி பாலசுந்தரம் தம்பதியரின் புதல்வனுமாகிய
"கலாவித்தகர்" பாலசுந்தரம் ஞானவேல் அவர்களின்

**மிருதங்க இசை அரங்கேற்றம்**



காலம் :- 23.06.2012 சனிக்கிழமை
இடம் :- நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்
நேரம் :- பிற்பகல் 2 மணி
தலைவர் :- திரு.சிற்றம்பலம் சிவஞானராசா
பிரதம விருந்தினர் :- கலாபூஷணம் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், அழகியல்)
சிறப்பு விருந்தினர் :- கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் (முன்னாள் நடனத்துறை விரிவுரையாளர், கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
கௌரவ விருந்தினர் :- முதுகலைமாணி த.சிவஞானசுந்தரம் (முகாமையாளர் இலங்கைவங்கி, ஊர்காவற்றுறை)



கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரங்கிசைக் கலைஞர்கள்
பாட்டு :- இசைமாணி தவநாதன் றொபேட்
வயலின் :- சுருதிவேந்தன் அ.ஜெயராமன்
மிருதங்கம் :- கலாவித்தகர் பா.ஞானவேல்
கடம் :- முதுகத்துவமாணி நா.மாதவன்
கஞ்சிரா :- கலைமாணி நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங் :- கலாவித்தகர் சி.செந்தூரன்
தம்புரா :- இசை[illegible]

48/13, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
திரு.திருமதி பாலசுந்தரம் குடும்பத்தினர்.



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத் தினம் - 2012**

தலைவர்:
திரு. வீரவாகு கணேசராசா

இடம்:
குமாரசாமி மண்டபம்

காலம்: 22.06.2012
வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணி

பிரதம விருந்தினர் :
திரு. வை. சண்முகலிங்கம்
(முன்னாள் தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்)

பரிசு வழங்கல் :
திருமதி சோபனா சண்முகலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மணவர்கள்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(19619) (6,9,10)



**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி தியாகராசா வள்ளிநாயகிதேவி

தோற்றம் 1954*07*05
மறைவு 2009*06*24



அம்மா, எங்கள் அன்புத் தெய்வமே
பாசத்தின் தீபமே அன்பான வார்த்தையும்
கண்டிப்புக் கலந்த நேசமும்
இல்லையென்று வந்தவர்க்கு
அள்ளிக் கொடுக்கும் நற்குணமும்
பிள்ளைகளைப் பெரும் பேறாகக் கருதும் குணமும்
உறவினர், அயலவர்களை அரவணைக்கும்
தன்மையும் கொண்ட உத்தமியே!
பாசம் வைத்து எங்களைப் பண்புடனே
வாழ வைத்து, பாவி அவன் காலனின்
அழைப்பை ஏற்று பாதியில் எம்மிருவரையும்
தவிக்க விட்டு பிரிந்தது ஏனோ அம்மா?
நீங்கள் வாழ்ந்திட்ட காலங்களை
அல்லும் பகலும் விழித்திருந்து எமை
வளர்த்த நேரங்களை எல்லாம் எண்ணி
எம் கண்கள் பனிக்கின்றன
மூன்று ஆண்டுகள் கழிந்தாலும் அம்மா
உங்களை மறக்க முடியாமல் தவிக்கின்றோம் அம்மா!!

தம்மனை, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

ஆறாத்துயரில்
குடும்பத்தினர்.

(19471) (6,9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(10)

எனவே, ஒவ்வோர் இளைஞனும் சாதனை புரியும் சக்தியைத் தன்னுள்ளே கொண்டிருக்கிறான். சாதாரணமாக வெற்றி பெறும் ஒவ்வொருவரும் சில இரண்டாம் நிலைப் பழக்கங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலமாக மட்டும் அதை அடைய முடியாது. ஒருவன் தன் வேலையைச் செய்கின்ற முறையால் மட்டும் அதைப் பெற்றுவிட இயலாது; அவனே ஒட்டுமொத்தமாக அந்தச் சக்தியாக விளங்குகிறான்.

**இர்விங்கின் டச்சுக்காரர்**

வாழ்வில் வரக்கூடிய பல்வேறு வாய்ப்புகளைப் பெறுவதற்காக நாம் ஆற்றல்களை எந்த வழியில் வளர்த்துக் கொண்டாலும், நாமே பயிற்சி பெற்றுக் கொண்டாலும், அது வெறும் பயிற்சி மட்டுமே என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்வு என்பதே நமக்கு வரும் வாய்ப்புகளைச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதுதான். வாஷிங்டன் இர்விங் நமக்குச் சொல்லிய டச்சுக்காரரின் கதையைக் காண்போம். டச்சுக்காரர் ஒரு சாக்கடையைத் தாண்டிச் செல்வதன் பொருட்டு வேகமாக ஓடி வருவதற்காக மூன்று மைல் தூரம் பின்னால் சென்றார். அவர் வேகமாக ஓடி வந்து சாக்கடையை அடைந்தபோது சோர்ந்து களைப் படைந்து மூச்சு விட முடியாமல் திணறினார். அவர் ஓய்வெடுப்பதற்காக ஒரு கரையின் மீது உட்கார அனுமதிக்கப்பட்டார். இது போன்ற சூழ் நிலை, வாய்ப்பைப்



பெறுவதற்காகத் தன்னைப் பல வருடங்கள் தயார் செய்து கொள்ளும் இளைஞனுக்கு ஒத்துவராது. அவன் வேறு எதையும் செய்யாமல் வாய்ப்புப் பெறும்போது அதைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தன்னைத் தயாராக்கிக் கொள்ளப் பல வருடங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் மிகச் சிறந்த பள்ளியில் படித்த ஒரு மாணவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் படிக்கும் சமயத்தில் செய்த குறிப்பிடத்தக்க செயல் எதுவெனக் கேட்கப்பட்டது. ''அவன் அதிகாலையில் எழுந்து விடுபவன்'' என்ற பதில் வந்தது. அவன் நாள் முழுவதும் ஒன்றும் செய்யாமல் இருப்பதற்காக அதிகாலையில் எழுந்து விடுகிறான் என்பதே உண்மையாக இருந்தது.

**ஒரு நல்ல நேரத்தைக் காணும் போது அதை அறிந்து கொள்ள முயல்வீர்களா?**

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மிகச் சிறந்த நேரம் ஒன்று வருகிறது.

ஒரு பகல், ஒரு இரவு, ஒரு காலை, அல்லது ஒரு மதியம், ஒரு மணி நேரம், ஒரு நொடிப் பொழுது வாய்ப்பு, ஒரு வெடிப்பின் மூலமாகப் பிரகாசிக்கும் பேரொளி ஒளிக்கதிர்களுடன் செல்லும் வீதியின் காலத்தின் ஒரு இடைவெளி, வெகு தாமதத்துக்கும் வெகு விரைவுக்கும் இடையே மிச்சமாக எப்போதாவது ஒன்று, கடந்து செல்லும் கணப்பொழுதின் வரத்தைப் பெறுவதற்குத் தயாராக, உறுதியற்ற ஒளிக்கு ஆதரவாக அன்பளிப்பைக் கொடுக்க, ஆ! மகிழ்ச்சியானவன், எவ்விதம் காத்திருக்க வேண்டுமென அறிந்தவன், எவ்விதம் கவனித்து வேலை செய்ய வேண்டுமென அறிபவன், வாழ்வெனும் கப்பலின் மேல் தளத்திலும் முன் பகுதியிலும் விழிப்புடன் நிற்க அறிபவன், விதியுடன் கடந்து செல்லும் பெரிய சமயத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு, வாய்ப்பின் நீண்டிருக்கும் கையிலிருந்து, விதியின் பெரிய கடிகாரம் ஒலிக்கிறது இப்போது!

- மேரி ஏ.டவுன் சண்ட்

*வாய்ப்பைக் கவனத்துடன் கண்டறிவதில் விழிப்புணர்வு:*
*வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் சாமர்த்தியம்*
*துணிச்சல்: வாய்ப்பைப் பயன்படுத்த அதை ஒன்று*
*சேர்த்துக் கொள்வதில் வேகம் உறுதி - இவை யாவும்*
*வெற்றிக்கு உத்தரவிடும் போர்த் திறமைப் பண்புகள்.*

-ஆஸ்டின்ஃபெல்ப்ஸ்

ஒவ்வொரு மனிதனும், வருடங்களின் விதியைத் தொங்க வைத்துக் கொண்டிருக்கும் கணப்பொழுதுகள் உள்ளதை அறிவான். கணப்பொழுதில் மட்டும் சாதகமான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நாம் அதைத் தவற விட்டால், மாதங்கள் மற்றும் வருடங்கள் கழிந்து போகின்றன. நிலத்தில் விதையைப் பரவலாகத் தூவிவிடாமல் ஆழமாக உழுவதால் என்ன பயன் கிடைக்கும்? சரியான நேரத்தில் விதையைப் பரவலாகத் தூவி விடாமல் இருந்தால், அது முளைத்துத் தளிர் விடாது.

ஏராளமான வாய்ப்புகள் உள்ள இளமையின் ஒளிமயமான நாள்கள் விலை மதிப்பிட முடியாதவை ஆகும். அது சுறுசுறுப்பான இளைஞனுக்கு எப்போதும் சரியான நேரமாக இருப்பதில்லையா? அவனது மூளைத் திசுக்களும் நரம்புகளும் பிளாஸ்டிக் போன்றவை. எதையும் மனதில் பதித்துக் கொள்வது மிகவும் எளிதானது.அதனால், வாழ்வின் செயல்களை ஓர் இயந்திர இயக்கத்தின் செயல் ஒழுங்கு அமைப்பைப் போல, உறுதியாக வெற்றி பெறும் விதத்தில் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும்.

**-கண்ணதாசன்**

*(தொடரும்)*

# பிறருக்கும் பயன் கொடுக்கும் வகையில் கல்வி அறிவை பயன்படுத்த வேண்டும்

## பிரதி அதிபர் மோகனதாஸ் கருத்து

கொழும்புத்துறை, ஜூன் 22

கல்வி ஒவ்வொருவருக்கும் பிரதானமான தொன்றாக விளங்குகின்ற போதிலும் அந்தக் கல்வியால் கிடைத்த அறிவு, புலமை என்பன பிறருக்கும் பயன் கொடுக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

நல் விழுமியங்கள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க உழைக்கும் கல்விப்புலமே கல்வியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும் என்று யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் த.மோகனதாஸ் தெரிவித்தார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மாணவர்களில் கடந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற 9 மாணவர்களைக் கௌரவித்து கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே மோகனதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

> நாமும் சேவைகளை மக்களுக்கு வழங்கி கல்வித்துறையை தூக்கிநிறுத்தப் பாடுபடவேண்டும். எந்த இடர் வந்தாலும் ஊக்கமது கைவிடேல் என்ற திடத்துடன் சேவையாற்றத் தயாராக வேண்டும்

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

இவ்வாறான உதவித் திட்டங்கள் மூலம் கல்வி கற்று உயர் நிலையை அடையும் மாணவர்கள் எதிர்காலத்தில் அந்த அமைப்புக்களை மறந்து விடக்கூடாது.

இவற்றினூடாக நாமும் சேவைகளை மக்களுக்கு வழங்கி கல்வித்துறையை தூக்கிநிறுத்த பாடுபடவேண்டும். எந்த இடர் வந்தாலும் ஊக்கமது கைவிடேல் என்ற திடத்துடன் சேவையாற்றத் தயாராக வேண்டும் - என்றார்.

(எ-135)

# தமிழ்த் தின குழு நிலை போட்டிகளில் வென்றோர்

வலி.வடக்கு, ஜூன் 22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டிக் குழு நிலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு

**சிந்து நடைக் கூத்து**

முதலாமிடம்- பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**வடமோடிக் கூத்து**

முதலாமிடம்- பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், இரண்டாமிடம்-இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாமிடம் - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**விசேட கூத்து**

முதலாமிடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம்-மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**இசை நாடகம்**

முதலாமிடம்-மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, இரண்டாமிடம்-பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**வில்லுப்பாட்டு**

முதலாமிடம்- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**விவாதம்**

முதலாமிடம்- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாமிடம்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- இணுவில் இந்துக் கல்லூரி.

**தமிழறிவு வினா விடை**

முதலாமிடம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம் - மல்லாகம் மகா வித்தியாலயம்.

(எ-86)

# மாணவர்கள் இணைபாடத்தில் ஈடுபடும்போது அதைத் தடுப்பவர்களாக பெற்றோர் இருக்கக் கூடாது

## உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் உரை

பண்டத்தரிப்பு, ஜூன் 22

மாணவர்க இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடும்போது பெற்றோர் அதனைத் தடுப்பவர்களாக இருக்கக்கூடாது என வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா தெரிவித்தார்.

நேபாளத்தில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்ட ஆசிய உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணியில் இடம்பிடித்து நேபாளம் சென்ற புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் ஞா.அன்ரனிராஜைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நடராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

வடபகுதியிலிருந்து கடந்த 40 [illegible] பிறகு அன்ரனிராஜ் முதல் வீரனாக நேபாளம் சென்றுள்ளார். இவரைப் பின்பற்றி சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டு மாணவர்கள் சாதிக்க வேண்டும். கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டவேண்டும். வேலைவாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வுகளில் இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

> கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டவேண்டும்.

எனவே மாணவர்களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்கு பெற்றோர் தடைக்கல்லாக இராமல் ஊக்கப்படுத்துபவர்களாய் இருக்க வேண்டும்- என்றார்.

(எ-130)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

வலி-வடக்கு, ஜூன் 22

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அரியாலை மத்தி மேற்கு கிராம அலுவலர் பிரிவு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - அ.மாதுரி, செயலாளர்- சு.நாகதீபா,பொருளாளர்- இ.கஜனி, உபதலைவர் -தோ.நிரோஷன், உப செயலாளர்- சே.நிருபரன், அமைப்பாளர் - நிரோஷ் சாந், விளையாட்டு செயலாளர் - இ.யசிந்தன், கலாசார செயலாளர்- சி.சிவனையா, தொழில் முயற்சி செயலாளர்- ச.பிரதீபன், ஊடகமும் தகவலும் செயலாளர்- ஜெ. சங்கீதா, தேசிய சேவைகள் மன்ற செயலாளர்- கு. அர்ச்சனா, கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டல்செயலாளர்- பே. லியானி, கணக்குப் பரிசோதகர் - தே. சஜீந்திரன்.

மேலும் ஒழுக்காற்றுக் குழுவுக்கு- ஜெ.செல்வக்கண்ணன், ச.பிரதீபன், து. சஞ்சீவன், ஆலோசனைக் குழுவுக்கு - ஜெ. இளமாறன், த.சீர்மாறன், ப.லயன், ச.கோபிகிருஷ்ணா, ம.கஜீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-86)

* * *

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/ 116 கோண்டாவில் தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான தேசிய இளைஞர் சங்க தொடக்கக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- த.ஞானதீபன், செயலாளர் - ப.சசிஸ்காந், பொருளாளர்- ப.நிஜந்தன், உபதலைவர்- உ.வதனராஜ், உபசெயலாளர்- த.ஞானகீரன், கணக்குப் பரிசோதகர்- யோ.சுகந்தன், விளையாட்டுச் செயலாளர்- சா.ரஜீவன், கலாசார செயலாளர்- ச.நிரோசன், தொழில் முயற்சி செயலாளர்- கி.சுரேந்தர், ஊடகமும் தகவலும் செயலாளர்- ப.சிந்துஜன், தேசிய சேவைகள் செயலாளர்- சி.பார்த்தீபன், கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டல் செயலாளர்-ச.கபீசன், கணக்குப் பரிசோதகர்- ச.கஜந்தரூபி.

மேலும் ஒழுங்காற்று குழுவுக்கு- த.அபிராமி, ச.கஜந்தரூபி, உ.வினோஜா, ஆலோசனைக் குழுவுக்கு- ச.சஜீபன், சா.ராகீதன், கு.ராதிகா, சி.யசிந்தா, ச.தாட்சாயினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எல்லக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தீராத் துயரம்

கடந்த 20 ஆம் திகதி உலக அகதிகள் தினம் ஐக்கிய நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் உலக அகதிகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஐ.நா. பொதுச் சபையில் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவின்படியே, அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி முதல் உலக அகதிகள் தினமாக வருடா வருடம் கொண்டாடப்படுகிறது.

1951ஆம் ஆண்டு அகதிகள் தொடர்பில் ஐ.நாவால் பிரகடனம் வெளியிடப்பட்டு, 50 வருடங்கள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், 2001ஆம் ஆண்டு முதல் அந்தத் தினம் உலக அகதிகள் தினமாக்கப்பட்டது.

அதற்கு முன்னர், 2000ஆம் ஆண்டு வரையும் ஜூன் 20ஆம் திகதியை ஆபிரிக்க நாடுகள் அகதிகள் தினமாகக் கடைப்பிடித்து வந்தன. அவர்களுடன் பேசி அந்தத் தினத்தையே உலக அகதிகள் தினமாகவும் ஐ.நா. அறிவித்தது.

போர், இயற்கை அழிவுகள் மற்றும் மானுட நடத்தைகள் காரணமாக மக்கள் அகதிகளாக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே அகதிகள் தினம் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அதன் பின்னர் வந்த ஆண்டுகளில் உலக நாடுகள் பலவற்றிலும், பல்வேறு காரணங்களால் அகதிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது.

இந்த ஆண்டு ஐ.நா. அறிக்கைகளின்படி உலக நாடுகள் பலவற்றிலும் 44 மில்லியன் மக்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். இதில் கணிசமானவர்கள் தமிழர்கள். 54 நாடுகளில் தமிழர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள் என்கிறது ஐ.நா. உலகிலேயே அதிக நாடுகளில் அகதிகளாக வாழும் ஒரே இனம் என்ற பெருமையையும் சேர்த்தே தமிழர்களுக்கு வழங்கியிருக்கிறது ஐ.நா.

இந்தத் தினத்தில், மக்கள் அகதிகளாக்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி ஐ.நா. விவாதித்துக் கொண்டிருக்கையிலேயே இலங்கையில் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகிய தமிழர்கள் தமது நிலங்களுக்காகவும், காணிகளுக்காவும் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அதே காலத்திலேயே வலி. வடக்கிலும், வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் மக்களின் காணி நிலங்களைக் கையகப்படுத்தி, அவர்களை நிரந்தர அகதிகளாக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசும், அதன் படைகளும் மேற்கொண்டிருந்தன.

போர் முடிந்து 3 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் இன்னமும் சுமார் 25,000க்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இலங்கை நாட்டுக்கு உள்ளே முகாம்களில் அகதிகளாக இருக்கிறார்கள். இவர்களைவிட மேலும் 25,000 பேர் தமது சொந்த பந்தங்களின் வீடுகளில் அல்லது வாடகை வீடுகளில் வாழ்கிறார்கள்.

ஊனமுற்ற படையினருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வீடுகளை அமைத்துக்கொடுத்து அவர்களை வடக்கில் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வரும் அரசு, அகதிகளாகிப் பல வருடங்களாகத் தவிக்கும் தமிழ் மக்களின் துயர் துடைப்பதில் பாராமுகமாகவே இன்னும் இருக்கிறது. போதாததற்கு சொந்த இடம் திரும்பக் கேட்கும் மக்களை மிரட்டியும், விரட்டித் தாக்கிக் கழிவு ஒயில் ஊற்றியும் வருகிறது. இந்த நிலையில் அகதிகள் தினத்தின் பெறுமதி இலங்கையில் என்ன என்ற கேள்வியே மிஞ்சி நிற்கிறது.

# திருகோணமலை இரத்தக் கண்ணீர்

■ *வியெஸ்ரி*

தாம் தினமும் வைத்திய சாலைக்குப் பயணிக்கையில் கடந்து செல்லும் அந்த ஆல மரத்தடியில், தமது மகன் உட்பட ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்படுவர் என்று மருத்துவர் மனோகரன் ஒருபோதும் எண்ணியிருக்கமாட்டார்.

2006 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல், திருகோணமலை நகரத்தின் பாதுகாப்பு, விசேட அதிரடிப் படையினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டுமே அவர் கேள்விப்பட்டிருந்தார்.

ஆனால் அந்த ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதியன்று மாலை 7 மணியளவில், தமது மகனது கைத்தொலைபேசியிலிருந்து தமது கைத்தொலைபேசிக்கு அனுப்பப்பட்டிருந்த குறுந்தகவலொன்றை வாசித்தபோது அந்தத் தந்தை பெரும் அதிர்ச்சிக்கும், அச்சத்துக்கும் உள்ளானார். ''எங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்ய முயற்சிக்கின்றனர். எங்களைக் கொலை செய்து விட வேண்டாம் என்று நாம் அவர்களை மன்றாடிக் கொண்டிருக்கிறோம்,'' மேற்கண்டவாறான குறுந்தகவலை வாசிக்க நேர்ந்த எந்தத் தந்தையால்தான் பதற்றமும் அச்சமும் அடையாதிருக்க இயலும்?

இற்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதி மாலை 7 மணியளவில் திருகோணமலை கடற்கரையை அண்மித்த கோணேஸ்வரம் கோயிலுக்குத் திரும்பும் முக்கிய சந்தியில் வைத்து, ஐந்து நிராயுதபாணிகளான தமிழ் மாணவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பான தரப்பினரால் அவை குறித்து ஒப்புதல் வாக்குமூலம் வெளியிடப்பட்டதாக உலகின் பரபரப்பான செய்திகளை வெளிக்கொண்டு வரும் 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

குறிப்பிட்ட படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற சமயம் மருத்துவர் மனோகரன் அந்த இடத்துக்கு அண்மைய இடமொன்றிலேயே இருந்துள்ளார். அந்தவேளையில் திருகோணமலை நகர்ப் புறத்தில் வீதி விளக்குகள் யாவும் இயங்காது நிறுத்தப்பட்டிருந்தன. மருத்துவர் மனோகரன் படுகொலை இடம்பெற்ற இடத்துக்குச் செல்ல முயன்ற போதிலும் படையினர் அதற்கு அனுமதிக்கவில்லை. குறிப்பிட்ட அந்த மரத்தின் அருகிலிருந்து அழுகுரலைத் தொடர்ந்து இயந்திரத் துப்பாக்கி ஒலித்து ஓய்ந்தது. தொடர்ந்து நிலவிய பயங்கர அமைதியிலும் மருத்துவர் மனோகரனின் மனதில் தமது மகனது நிலை குறித்த அச்சமும் சோகமும் நிலவியது.

இன்றைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்குடனான சந்திப்பொன்றில், மொரட்டுவ பல்கலைக்கழக மாணவரொருவர் மற்றும் திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்கள் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தியிருந்தார்.

அந்த வேளையில் திருகோணமலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரே அதற்குப் பொறுப்பேற்க வேண்டியிருப்பினும், அதனை உறுதிப்படுத்த, சாட்சியமளிக்க எவரும் முன்வரவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

குறிப்பிட்ட சம்பவத்தில் மருத்துவர் மனோகரனின் மகன்மார் மூவரில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், அதற்கு ஒரு மாதகாலம் கடந்து மூதூரில் ஏ.சி.எவ். தொண்டு நிறுவன ஊழியர்கள் 21 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் அவரது மூத்த மகனும் உயிரிழந்துள்ளார்.

> நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் திருகோணமலையில் ஒரேவேளையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. குறித்த அறிக்கையை நடைமுறைப்படுத்தக் கோரிய மேற்கின் அழுத்தத்தால் இலங்கை அரசு திருகோணமலை மாணவர் படுகொலைக்கான விசாரணைகளை மீண்டும் நடத்தவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தது. ஆனால் அதற்கான எந்த நடவடிகைகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று சம்பவ இடத்துக்கு அண்மையில் குண்டு வெடிப்புச் சத்தமொன்றைக் கேட்டு அந்த இடத்துக்குச் செல்ல முயன்ற மருத்துவர் மனோகரன் இராணுவத்தால் தடுக்கப்பட்டு அவர்களது தாக்குதலுக்கும் உள்ளாக நேர்ந்தது.

கொல்லப்பட்ட மாணவர்களின் உடல்கள் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட போதே, அவரால் தமது மகனது உடலை அடையாளம் காணமுடிந்தது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெறுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் அந்த இடத்துக்கு வந்த ஓட்டோ ஒன்றிலிருந்த நபரொருவர் வீசிச் சென்ற கைக்குண்டு வெடித்ததன் தொடர்ச்சியாகவே குறிப்பிட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

விசாரணையின்போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மாணவர்கள் விசேட அதிரடிப் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள முயன்றதை அடுத்தே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக திருகோணமலைப் பிரதேச இராணுவ அதிகாரியும், அரச தரப்பினரும் தெரிவித்திருந்தனர். ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறுபட்டதே.

உலகில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும், மனித இரத்தம் சிவப்பு நிறம் கொண்டதே. மனிதர்களின் கண்களிலிருந்து கசியும் கண்ணீருக்கு, அவர்களது இனத்துக்கேற்ப நிறவேறுபாடு கிடையாது. பசி பட்டினி மற்றும் மரணம் தொடர்பான மனிதர்களது கவலைகள், துக்கங்கள் இனத்துக்கு இனம் வேறுபாடு கொண்டவையல்ல.

இந்த மாணவர் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு மறுநாள் திருகோணமலை நகரமே சோகத்தில் மூழ்கியது. குறிப்பிட்ட படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒருபுறம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்பவற்றில் ஈடுபட, மறுபுறம் அவற்றை அடக்கும் முயற்சிகளும் அரசால் முடுக்கி விடப்பட்டன.

சம்பவத்தை நேரில் கண்ணால் கண்ட ஒரு சிலர் இருந்த போதிலும், இராணுவத்தினர் அவர்களை அச்சுறுத்தி சாட்சியமளிக்க முன்வராது தடுத்தனர். அச்சம் காரணமாக மருத்துவர் மனோகரனைத் தவிர வேறெவரும் சம்பவம் குறித்துச் சாட்சியமளிக்க முன்வரவில்லை. சம்பவத்தில் படுகாயமுற்று அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்த மாணவரொருவரும், மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படுதற்கு முன்னர் அவரிடமிருந்து பொலிஸாரால் வாக்கு மூலம் பெறப்பட்டது. எனினும், அவரது வாக்குமூலம் பதியப்பட்ட பொலிஸாரின் வாக்கு மூலக் குறிப்பு ஏடு ஒரு சில மணி நேரத்துக்குள் காணாமல் போகச்செய்யப்பட்டது. குறிப்பிட்ட கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி வேண்டுமென்றே மாற்றப்பட்டு வேறு துப்பாக்கி இரசாயனப் பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்டது. உயிரிழந்த மாணவர்களது உடல்களிலிருந்து அகற்றப்பட்ட துப்பாக்கி ரவைகள், கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சமர்ப்பிக்கப்பட்ட துப்பாக்கிக்குப் பொருந்தாது வேறுபட்டிருந்தன.

அத்தோடு மோதல் ஒன்றின் போது குறிப்பிட்ட மாணவர்கள் சுடப்பட்டார்கள் என இராணுவத் தரப்பு தெரிவித்தமை போலன்றி, மிக அருகில் இருந்தே அந்த மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்பது அந்தப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்தப் படுகொலை வழக்கு, சந்தேகநபர்களை அடையாளம் காட்டத்தக்க சாட்சிகள் எவரும் இல்லாததால் விசாரணைகளை மேற்கொண்டு தொட இயலாதெனத் தெரிவித்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆயினும் இந்தச் சம்பவம் குறித்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் காரணமாக இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ள ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன்னால் உயிர் அச்சம் காரணமாக எவரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை. கடைசியில் ஆணைக்குழு விசாரணையாலும் பயனேதும் கிட்டவில்லை.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் சடலங்கள் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த வேளை, அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாகச் செயற்பட்டு வந்திருந்தனர் என அந்த மாணவர்களின் பெற்றோர் ஒப்புக் கொள்ள வேண்டுமென இராணுவத்தினரும், அரச தரப்பும் வலியுறுத்தி வந்தன.

கடைசியில் கடற்கரையை அண்டியிருந்த இந்து மயானத்தில் அந்த மாணவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டதோடு, அந்த இடத்தில் நினைவுச் சின்னம் எதுவும் அமைக்கப்படக் கூடாதென ஆயுதக்குழுவொன்று அந்தமாணவர்களின்பெற்றோருக்கு அச்சுறுத்தல் விடுத்து வந்தது.

எல்லாம் முடிந்து கடைசியில் சம்பவத்தில் படுகாயமுற்று உயிர்தப்பிப் பிழைத்த அந்த ஒரு மாணவனும் திடீரென தலைமறைவாகி விட்டதுடன், அந்த மாணவனின் குடும்பத்தவர் அனைவரும் வெளிநாட்டுக்குச் சென்று வாழும் அளவுக்கு, அந்தக் குடும்பத்தின் மீதான இராணுவத்தினரின் அச்சுறுத்தல் வலுப்பெற்றிருந்தது.

இதற்கு எட்டு மாதங்களுக்குப் பின்னர், குறிப்பிட்ட படுகொலைகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார்.

மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டு, அதனைத் தாமாகவே வெளிப்படுத்தி ஏற்று, ஏகாதிபத்தியவாதத்தின் வீட்டுக் கோடிப்பக்கத்தில் இருந்து கொண்டு நாட்டுப்பற்றுக் குறித்து போதனை செய்து அரசியல் நடத்துவோர் யார் என்பதனை நாட்டு மக்கள் இன்னமும் இனம் காணாதிருப்பதே இந்த விடயத்தில் கவலை தரும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவில் நிற்கும் முதுமை

ப.புவிதா
எம்.ஆர்.ரி.சி.

விழுதுகள் வளர்ந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினால், வேர்களின் வலு குறைவடைந்து விடும். இதைப் போலத்தான் யாழ்ப்பாணத்தில் இன்று முதியோரின் நிலையும்.

பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களையே முதியோர் என வரையறுத்தாலும் கூட, முதுமையானது பிறப்பிலிருந்தே தொடங்குகின்றது. மனிதனுக்கு பிறப்பிலிருந்து ஒவ்வொரு கணத்திலும் முதுமை ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றது. முதுமையும் இறப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் தவிர்க்க முடியாத ஒன்றே.

இலங்கையைப் பொறுத்த வரையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், கூடிய முதியோர்களைக் கொண்ட நாடு என்றே குறிப்பிட வேண்டியுள்ளது. 2031 ஆம் ஆண்டு 50 லட்சமான முதியோர்கள் காணப்படுவார்கள் என ஆய்வொன்று தெரிவித்திருக்கும் அதேவேளை, இங்கு வாழ்கின்ற 70 வீதமான முதியவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. வறுமை வீதத்தை அதிகமாக கொண்டிருக்கின்ற முதியோர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயமே.

இன்றைய சமூக அமைப்பு பெரும்பாலும் கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து விலகி தன்னிச்சையாக இயங்குவதைக் காணக் கூடியதாக உள்ளது. இது ஒரு விதத்தில் நன்மையாக இருப்பினும், பாதிப்பை முதியவர்கள் தான் சந்திக்கின்றனர். முன்னைய யாழ்ப்பாண வாழ்வியலில் முதியோர் இல்லம் என்றால் என்னவென்றே தெரியாத நிலையிருந்தது. ஆனால் தற்போதைய நவநாகரிக வளர்ச்சியினால் நல்லூர், புத்தூர், பண்ணாகம், கைதடி, பாசையூர், தெல்லிப்பழை எனப் பல இடங்களில் முதியோர் இல்லங்கள் விரிவடைந்து கொண்டே செல்வது தான் கவலைக்கிடமாக உள்ளது.

வெளியிலிருந்து பார்க்கின்ற போது எமக்கு முதியோர் தனிமைப்படுத்தப்படுவதன் காரணம் தெரிவதில்லை. எனவே குற்றத்தை யார் மீதும் சுமத்தவும் முடியாது. எது எவ்வாறு இருப்பினும் பண்டைய யாழ்ப்பாணத்தின் வாழ்வியலில் இருந்த கூட்டுக் குடும்பம் எங்கே? அறிவுரை கூற மூத்தோர் எங்கே? என மனச்சாட்சி உறுத்துகின்றது.

இன்றைய காலத்தில் ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குச் செல்கின்றனர். ஆற அமர இருந்து நான்கு வார்த்தைகள் பகிர்ந்து கொள்ளக் கூட யாருக்கும் நேரம் கிடையாது. இன்றைய சமுதாயத்தின் தேவை பணம், கௌரவம், பதவி.

இது பற்றி சில முதியவர்கள் தம் எண்ணத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர். நல்லூர் சிவன் வீதியில் மகளோடு வாழ்ந்து வருகின்ற நமசிவாயம் பால சுப்பிரமணியம் எனும் முதியவர் இப்படிக் கூறுகின்றார்,

''என்னுடைய மகள் வேலைக்குப் போறவா. மருமகன் வெளிநாட்டில இருக்கிறார். ஒரு பேரப்பிள்ள. அதுவும் படிக்கப் போட்டுது. சந்தோஷம் எங்க? பேப்பர் படிக்கிறதும் ரீ.வி பாக்கிறதுமா பொழுது போகுது'' என்கின்றார்.

முதுமையில் சந்தோஷம் என்பது மழலைகளுடன் இருக்கும் போதுதான் கிடைக்கின்றது, என்பதை உறுதிப்படுத்துகின்றார். ''இப்ப பிள்ளைகள் பெத்தவங்கள திரும்பிப் பார்க்காத காலத்திலும் என்ர மருமகள், மகன் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல்லோருடனும் சந்தோஷமா இருக்கிறன். இது கடவுள் தந்த வாழ்க்கை'' எனப் பூரிப்படைகிறார்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் முதியோர்களின் பிரச்சினை பல விதமாக பிளவுபட்டுள்ளது. பிள்ளைகள் இல்லாத காரணத்தால் தனிமை, திருமணமாகாமல் இருப்பதால் தனிமை, போரால் கணவனையோ, மனைவியையோ அல்லது உறவுகளையோ இழந்த காரணத்தால் தனிமைப்படுத்தப்படுதல், மனநிலைகுன்றுதல், ஆண், பெண் என இருபாலாரும் வேலைக்குச் செல்வதாலும், வெளிநாட்டு மோகத்தாலும் பிள்ளைகள் பெற்றோரைத் தனிமையில் விட்டுச் செல்லல் பிறப்பிலிருந்து மனநிலை குன்றியதால் அவர்களை உறவுகள் விட்டு செல்லல் எனப் பல்வேறுபட்ட காரணங்களில் பலர் முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுகின்றனர். இத்தகையோரைத் தேடி நாம் பாசையூர் முதியோர் இல்லத்திற்குச் சென்றோம். அங்கு தங்கியுள்ள திருநெல்வேலியைச் சொந்த இடமாகக் கொண்ட சண்முகலிங்கம், '' எனக்கு மனைவியும், பிள்ளையும் இருக்கிறார்கள். 2 வருடத்துக்கு முன்னர் என்னை விட்டு மன்னார் சென்றுவிட்டனர். என்னைப் பார்த்துக்கொள்ள யாருமேயில்ல. அதால இங்க வந்திருக்கன்'' என்கிறார் கவலையுடன். கரவெட்டியைச் சேர்ந்த 74 வயதான சர்வேஸ்வரன், ''திருமணமாகாத நான் காலம் போகத் தனிமைப்படுத்தப்பட்டு விட்டேன். சொந்த பந்தங்களெல்லாம் இருக்கினம். பார்க்கிறதில்லை. எனக்கு அவங்களோட இருக்கத்தான் விருப்பம்'' எனக் கண் கலங்கினார்.



தனது பெயரைக் கூற விரும்பாத 56 வயதுடைய முதியவர், ''எனக்கு ஒரு பொம்பிளைப் பிள்ளதான். என்ர மனைவி, பிள்ள சின்னதா இருக்கேக்க இறந்திட்டா. என்ர பிள்ள கொழும்பில திருமணம் செய்தது. எனக்கு நீரிழிவு நோய். குழாய் மூலம்தான் சிறுநீர் வெளியேற்றப்படுகின்றது. நான் வீட்டில இருந்தா மணக்குமாம் எண்டு என்ன பேசினாப் போல நான் இங்க வந்திட்டன்'' என்றார்.

பாசையூர் முதியோர் இல்லத்தில் 6 வருடங்களாகச் சேவை புரிந்து வருகின்ற அருட்சகோதரி பெனிற்றா கூறுகையில், ''இங்க இருக்கிறவங்களில் 18பேர் தந்தைமார். 29 தாய்மார். இந்தத் தொகை கூடிக் குறையும்'' என்றார். மேலும் அவர் ''தனிமைப்படுத்தப்படுவதற்கு காரணம் பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றோரும்தான். நாம் எந்தச் சூழலில் வாழ்ந்து வருகின்றோம் என்பதை பெற்றோர் உணர வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் வேலைக்குச் செல்வதாலும் வெளிநாட்டிற்குச் செல்வதாலும் பணமிருந்தும் பெற்றோரை பார்க்க முடியாத நிலையுள்ளது. சில முதியோர் தங்கள் பிள்ளைகள் பாவம்; அவர்களுக்கு கஷ்டம் கொடுக்கக் கூடாது என்றும் இங்கு வந்திருக்கிறார்கள். வடக்கு, கிழக்கு போரால் மனநிலை குன்றியவர்களும் இருக்கின்றனர். இவர்களுக்கு கோபம் அதிகமாக இருக்கும். பிடிவாதமும் உண்டு. சண்டையும் போடுவார்கள். இந்த முதியோர்களின் வைத்திய செலவிலிருந்து இறுதிக் கிரியைவரை நாமே பார்க்கிறோம். இவர்கள் இறந்தால் எமது இல்ல செலவிலேயே எரிக்கின்றோம், புதைக்கின்றோம். சில பிள்ளைகள் இறந்த உடலைப் பெற்று வீட்டிற்கு கொண்டு செல்வதும் உண்டு. பிள்ளைகள் இறுதிக் காலத்தில் பெற்றோரைத் தம்முடன் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். சில முதியோரும், பிள்ளைகளும் இதை விரும்புவதில்லை. இப்போது யார் மீதுதான் குற்றம் கூற முடியும்?'' என வினாவோடு முடிக்கிறார்.

உலகமயமாக்கலினால் இளைய சமூகத்தவரின் தேவை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதனால் சிரமங்கள் வந்தாலும் கூட இவற்றை நடுநிலைப்படுத்திக் கொள்ளக்கூடிய அளவில் எம்மை பக்குவப்படுத்திக் கொள்ளாதவிடத்து முதியோராகப் போகும் உங்கள் நிலையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

# தொண்டர் ஆசிரியம் - சொல்லி அடங்கா அவலம்

வீ.எஸ்.தியாகராசா,
ஓய்வுபெற்ற தபாலதிபர்,
மருதங்கேணி.

**இவர்கள் தலைமுடி நரை விழுந்தவர்களாகவும், எறிகணை சிதறல்களைத் தமது உடலில் தாங்கிக் கொண்டு மிகவும் கவலையுடன் கடமை செய்கின்றனர். அவர்களின் முகத்தைப் பார்த்தால் எதையோ இழந்து விட்டவர்கள் போன்று எந்நேரமும் கவலை தோய்ந்த முகத்துடன் வாழ்கின்றனர்.**

வடமராட்சி கிழக்கின் தென் திசையிலுள்ள மாமுனை, செம்பியன் பற்று, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேரவில் ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக 40 இற்கும் மேற்பட்டோர் கடமையாற்றுகின்றனர். இவர்கள் கடந்த 2003 ஆம் ஆண்டு அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்படுத்திக் கொண்ட சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் வன்னியிலிருந்து மீளக்குடியேறியவர்கள். மிகவும் கஷ்டப் பிரதேசமாகக் கருதப்படும் இந்தப் பாடசாலைகளுக்கு நகரப் புறங்களிலிருந்து ஆசிரியர் வருவதற்குப் பின்னடித்ததால் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் மூலம் தேவையான பாடங்களுக்கேற்ப வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு சேவையாற்றினர்.

இவை கல்வித் திணைக்களத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் நன்றாகவே தெரியும். இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றிய வேளையிலே 2004 மார்கழி 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியிலே பலர் இறந்துவிட்டனர். எஞ்சியோர் கடமையாற்றிய போது மீண்டும் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வன்னி செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. வன்னியில் தமது சேவையைத் தொடர்ந்தவர்கள், 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து வன்னியின் நிலவரம் மோசமடையவே, இவர்கள் தத்தமது உயிர்களைக் காப்பாற்றினால் போதுமென்றளவில் நாளுக்கு நாள், நேரத்துக்கு நேரம் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் வரை ஓடினர்.

ஓடியவர்களில் பலர் இறக்கவும், பலர் எறிகணை வீச்சில் காயமடைந்தும் காயத்துக்குச் சிகிச்சையளிக்கக் கூட வழியின்றி நலன்புரி முகாம்களில் அடைபட்டனர். தமது குடும்ப உறுப்பினர்களின் இறப்புக்கள், தமக்கு ஏற்பட்ட காயங்களுடன் நலன்புரி முகாம்களிலும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தனர். 2010 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடக்கம் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து இவர்கள் தத்தமது பாடசாலைகளில் தமது சேவையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் பலர் வெளிவாரிப் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களாகவுமுள்ளனர். இவர்கள் நிரந்தர ஆசிரியர்கள் வெற்றிடமுள்ள உயர்தர வகுப்புகளுக்கும் தமது சேவையைச் செய்கின்றனர். இது மட்டுமன்றி நிரந்தர ஆசிரியர்கள் தினமும் பஸ்ஸில் பிரயாணம் செய்வதால், பாடசாலையின் முக்கிய பொறுப்புக்கள் யாவும் தொண்டர் ஆசிரியர்களிடமே வழங்கப்பட்டுள்ளன. கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் ஆகியவற்றில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, திரும்ப அழைத்து வந்து மாணவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்கும் பொறுப்புக்களும் இந்தத் தொண்டர் ஆசிரியர்களிடமே வழங்கப்பட்டுள்ளன. அதிபர்கள் மூலமாகவோ அல்லது திணைக்களங்கள் மூலமாகவோ பணிக்கப்படும் பணிகள் அனைத்தையும் மனங்கோணாமல் திறம்படச் செய்கின்றனர். ஆனால் இவர்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை எந்தவித ஊதியமோ உபகாரமோ வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கின் வடபுறத்தேயுள்ள அம்பன், குடத்தனைப் பகுதிகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு 2009 ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்ததால் நியமனம் வழங்கப்படவில்லை. இவர்கள் தமக்கு நியமனம் வழங்கும்படி கல்வித் திணைக்களத்திடமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், மாகாண ஆளுநரிடமும் மிகவும் உருக்கமாக, தமது நிலையைத் தெரிவித்து வேண்டுகோள் விடுத்தனர்.

இவர்களில் அனேகர் குடும்பஸ்தராகி இவர்களின் பிள்ளைகளும் பாடசாலை செல்ல ஆரம்பித்து விட்டனர். பல பெண் தொண்டர் ஆசிரியர்கள் திருமணம் செய்வதற்கு வழியின்றி கவலையுடன் கடமையாற்றுகின்றனர்.

குடும்பஸ்தர்கள் தமது மனைவியாரின் நகைகளை அடகு வைத்தும், விற்றும் சீவிக்கின்றனர். மீளக்குடியேறியுள்ளமையால் இவர்களும் அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு நியமனம் தருவதாக வாக்குறுதியளித்தவர்கள் ஏன் இதுவரை இவர்கள் மீது அனுதாபப்படவில்லை?

இவர்கள் தலைமுடி நரை விழுந்தவர்களாகவும், எறிகணை சிதறல்களைத் தமது உடலில் தாங்கிக் கொண்டு மிகவும் கவலையுடன் கடமை செய்கின்றனர். அவர்களின் முகத்தைப் பார்த்தால் எதையோ இழந்து விட்டவர்கள் போன்று எந்நேரமும் கவலை தோய்ந்த முகத்துடன் வாழ்கின்றனர். ஏனைய பிரதேசங்களின் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கிய நியமனத்தை இவர்களுக்கு மட்டும் ஏன் வழங்கப்படவில்லை? இவ்வளவு காலமும் ஊதியமின்றி சேவையாற்றியவர்களுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கி நியமனம் வழங்க வேண்டிய அரசு ஏன் பின்னடிக்கின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் சந்திரர்

புகழ்பெற்ற பங்களாதேஷ் நாவலாசிரியர் சரத்சந்திரர். அவரிடம் நண்பர் ஒருவர் வந்தார். அவர் சரத்சந்திரரிடம் "நீங்கள் எழுத்துத் துறைக்கு எப்படி வந்தீர்கள்?" என்று வினவினார்.

"இது வழக்கமாக எழுத்தாளர்கள் எல்லோரிடமும் கேட்கப்படும் ஒரு கேள்விதான். அதைத்தெரிந்து கொண்டு என்ன பயன்?" என்று கேட்டார் சரத்சந்திரர். "சும்மா சொல்லுங்கள்.. தெரிந்து கொள்கிறேன்" என்றார் வந்தவர்.

"சரி, சொல்கிறேன்.." என்று கூறிச் சரத் சந்திரர் சொல்ல ஆரம்பித்தார்:

"நான் ரங்கூனில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பளம் போதவில்லை. 'வேலையும் பார்த்துக் கொண்டு, ஒரு பலசரக்குக் கடையும் வைக்கலாம்' என்று நினைத்தேன். 'இவரால் மளிகைக்கடை வைத்து சரியாக நடத்த முடியுமா?' என்ற சந்தேகம் என் மனைவிக்கு வந்தது. அதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக அவர்கள் சில பொருள்களின் அளவு.. அவற்றின் விலை... இப்படி சிலவற்றை என்னிடம் சொல்லி எல்லாவற்றையும் மனக் கணக்காகக் கூட்டிச் சொல்லச் சொன்னார்கள்.. என்னால் சரியாகக் கூட்டிச் சொல்ல முடியவில்லை. அதனால் அவர்கள், 'உங்களால் மளிகைக்கடை நடத்த முடியாது'' என்று சொல்லிவிட்டார்கள்.. என்ன செய்வது.. வேறு வழியில்லை.. கதை எழுத ஆரம்பித்துவிட்டேன்" என்றார்.

கேட்டவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. சரத்சந்திரர் ஒரு பக்கம் மிகவும் உண்மைத்தன்மை நிறைந்த நாவல்கள், சிறுகதைகள், எழுதியிருந்தாலும் அவருடைய இன்னொரு பக்கம் நகைச்சுவை நிரம்பியது.

சரத்சந்திரர் நண்பர்களிடம் பேசும்போதும் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதும்போதும் கேலியும் கிண்டலும் நகைச்சுவை உணர்வும் அதிகமாக இருக்கும்.

காந்திஜி ஒரு சமயம் கொல்கத்தாவுக்கு வந்திருந்தார். அவரிடம் தேச பக்தர்கள் பலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு சரத்சந்திரரும் இருந்தார். கிரண்சங்கர்ராய் என்பவரும் அங்கே இருந்தார். அவர், "காந்திஜியுடன் பழகிய முதல் வங்காளி நான்தான். போயர் யுத்த சமயத்தில் இவர் லண்டனுக்கு வந்திருந்தபோது என்னிடம்தான் வங்காள மொழி கற்றுக்கொண்டார்'' என்று கூறினார்.

உடனே சரத்சந்திரர் காந்திஜியைப் பார்த்து, "இவர் உங்களுக்கு வங்காளி மொழியைக் கற்றுக்கொடுத்தது உண்மைதானா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் காந்திஜி. "அதனால்தான் உங்களால் வங்காளி மொழியைக் கற்றுக்கொள்ள முடியவில்லை" என்றார் சரத்சந்திரர்.

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். சரத்சந்திரர் 'சாம்தாபேர்' என்ற ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்த ஓர் இலக்கிய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பொருட்டு கொல்கத்தாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அதற்காகப் புறப்பட்டார். அந்தச் சமயத்தில் பின்னால் இருந்து யாரோ ஒருவர் அவரைக் கூப்பிட்டார். கூப்பிட்டவரைப் பார்த்து யாரோ இன்னொருவர், "போகிறவரை ஏன் கூப்பிட்டீர்கள்?"என்று கேட்டு அதட்டினார்.


"ஏன் கூப்பிட்டால் என்ன?" என்று சரத்சந்திரர் கேட்டார். அதற்கு இன்னொருவர், "புறப்படுகிறவர்களைப் பின்னால் இருந்து கூப்பிடுவது அபசகுணம். அதனால் போகிற இடத்தில் ஏதாவது ஆபத்து வரலாம்" என்று விளக்கம் கூறினார்.

உடனே சரத்சந்திரர், "இதோ.. இவர்கள் என்னை இலக்கியக் கூட்டத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார்களே.. இதைவிட வேறு என்ன ஆபத்து வந்துவிடப் போகிறது" என்று கேட்டிருக்கிறார்.

இப்படி சரத் சந்திரர் இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டவர்.

அவருடைய நண்பர் ஒருவர் இவரைத் தன் வீட்டுக்குக் கூப்பிட்டிருந்தார். அங்கே ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சரத்சந்திரருக்கு இயல்பாகவே கச்சேரியில் நீண்ட ஆலாபனை எல்லாம் கேட்பதற்குப் பொறுமை இருக்காது. அதனால் அவர் மெதுவாக.. "பாடப் போகிறவர் எப்படி?" என்று கேட்டிருக்கிறார். "அவருக்கு மிகவும் நன்றாகப் பாடத் தெரியும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு சரத்சந்திரர், "அவருக்கு பாடத்தெரியும் என்பது சரி.. பாட்டை நிறுத்தத் தெரியுமா? அதை முதலில் சொல்லுங்கள்" என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வரலாற்றுச் சிறப்பு மிக்க நவாலி கதிர்காம முருகன்





■ ரமேஷ்

வடமாகாணத்தில்- வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக நவாலி ஸ்ரீ.கதிர்காம முருகன் ஆலயம் விளங்குகின்றது.

இலங்கையில் அம்பாந்தோட்டையில் கதிர்காம முருகன் எவ்வாறு அடியவர்களுக்கு அருள் பாலிக்கின்றாரோ, அதே போன்று நவாலி கதிர்காம முருகனும் வடபால் பிரதேச மக்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அதனால் மக்கள் அவரைப் போற்றி வணங்குகின்றனர்.

வரலாற்று சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் இரு விடயங்களில் நவாலி கதிர்காம முருகன் ஆலயம் வெளியுலகிற்கு புடமிட்டுத் தெரிகின்றது.

இறை தொண்டில் அருளாட்சி புரிந்து மகாசமாதி அடைந்த திருமதி சண்முகம் இராசமணி அதில் முதல்வர்.அடியவர்களாலும், பக்தர்களாலும், தொண்டர்களாலும் அப்பன், முருகன் என அழைக்கப்பட்ட அவர் குருமுருகனாகவே காட்சியளித்து சமாதியடைந்தவர். இந்த ஆலயத்தை குருமுருகன் என்ற திருமதி சண்முகம் இராசமணி என்ற அம்மையாரே நீண்ட காலமாக ஆதரித்து பல அற்புதங் களை வழங்கி வந்தார்.

இந்த நிலையில் பல்வேறு திசைகளிலும் படையெடுத்து வந்த மக்கள் அம்மையாரை முருகன் என்றும்- அப்பன் என்றும் அழைக்க முற்பட்டனர்.

இவ்வாறு அழைக்கப்பட்ட 'அப்பன்' பின்னர் 'குருமுருகன்' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டார்.

இவரது பணிவு- அடக்கம்- அமைதி, இறைதியானம், சொல்லாட்சி என்பன மக்களை நல்வழிக்கு இட்டுச் சென்றன. இவ்வாறு இறைபணி- அருள் பணி-முருகன் பணி ஆற்றி வந்த குருமுருகன்-சண்முகம் இராசமணி 26.05.1982 இல் சமாதியடைந்தார்.

இந்த இறைவனின் சமாதி இறுதிச் சடங்கு நிகழ்வில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கண்ணீர்மல்கக் கலந்து கொண்டிருந்தனர். ஆலயம் 09.07.1995 இல் விமானத் தாக்குதலுக்கு இலக்காகியது. இடம் பெயர்ந்து ஆறி அமர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களில் 147 இற்கும் மேற்பட்ட மக்கள் ஆலயச் சூழலிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயச் சூழலிலும் மடிந்த வரலாறும் இந்த ஆலயத்திற்கு உண்டு.

> ஆலயம் 09.07.1995 இல் விமானத்தாக்குதலுக்கு இலக்காகியது. இடம் பெயர்ந்து வந்து ஆலயத்தில் ஆறி அமர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களில் 147 இற்கும் மேற்பட்டோர் ஆலயச் சூழலிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயச் சூழலிலும் மடிந்தனர்.

இந்தச் செய்தி உலகம் முழுவதும் பரவியது, நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயமும் தாக்கப்பட்டதும் அழிவடைந்ததும் எல்லோர் அன்புள்ளங்களையும் வெகுவாக பாதிப்படையச் செய்தது. இவ்வாறு நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு-பெருமை கொண்டது.

சமாதியடைந்த குருமுருகன் திருமதி சண்முகம் இராசமணி அவர்களது சிலை குருமுருகன் வடிவில் செய்யப்பட்டு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு கடந்தமாதம் 24 ஆம் திகதி நூதன உற்சவம் இடம்பெற்றது. சிறப்பு கொடுக்கப்பட்டதுடன் -குருமுருகன் ஞாபகார்த்தமாக "குரு முருகன் அருளமுதம்" என்னும் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இன்று இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும்- அபிவிருத்திக்குமாக ஆலயத்தின் பிரதம குருவான சிவத்திரு மா.பத்மநாதன் கிரியை முறைகளுக்கு ஏற்ப தமது பூஜைகளையும், கும்பாபிஷேகங்களையும் முறையாகச் செய்து வருகின்றார்.

அத்துடன் திருமதி ம.பத் மநாதன் இறை தொண்டில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருவதுடன் குடும்பமே முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

அத்துடன் வலி.தென்மேற்கு பிரதேச செயலகம், இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு பெருந்தன்மையுடன் உதவி வருகின்றனர்.

இன்று நவாலி கதிர்காம ஆலயத்திற்கு வடபால் பிரதேசத்தில் இருந்து மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

அயற்பிரதேச ஆலயங்களும் கைகொடுத்து உதவி வருகின்றன. இவ்வாறாக வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயம் வரலாற்றுப் பெரு மையை தன்னகத்தே கொண்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் சூழல் காற்று; பறந்தன கூரைகள்



நுவரெலியா, கந்தப்பளை தோட்டத்தில் திடீரென ஏற்பட்ட சுழல்காற்றால் 12 வீடுகள் சேதமாகியுள்ளதுடன் 10 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தோட்டத்தின் 8 ஆம் இலக்கக் குடியிருப்புத் தொகுதியின் கூரைத் தகரங்கள் காற்றில் அள்ளுண்டு சென்றதுடன் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் தோட்ட வைத்தியசாலைக் கட்டடமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் நிவாரணப்பொருள்கள், உலர் உணவுப் பொருள்கள் என்பனவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்து நிலையத்தின் இணைப்பாளர் ஹேரந்தன ஹேமவர்த்தன தெரிவித்தார். (ச)

# தமிழ்ப் பிரதேச விருத்திக்கு அம்பாறையில் நிதி ஒதுக்கீடு

## இது முதல்கட்டமே என்கிறார் முதல்வர்

அம்பாறை, ஜூன் 22

கல்முனை மாநகர சபைப் பிரிவுக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு இருபத்தைந்து லட்சம் ரூபா நிதியைக் கல்முனை மாநகர சபை ஒதுக்கியுள்ளது.

இந்த வருடத்தில் மாநகர சபை நிதியிலிருந்து கல்முனை மாநகரப் பிரிவு தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள முதற்கட்ட நிதியே இதுவென கல்முனை மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாதாந்தக் கூட்ட அமர்வில் தமிழரசுக் கட்சி உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான ஏ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் தெரித்ததாவது:-

நமது சபை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை எட்டு

**இந்த வருட அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென மாநகர சபை நிதியில் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.**

மாதங்கள் கடந்துள்ள நிலையில் எமது தமிழ்ப் பிரதேசங்களில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

முதல்வர் பதவியேற்றதும் முதன் முதலாக அவரை அழைத்துச் சென்று பல தமிழ்ப் பிரதேசங்களின் முக்கிய பிரச்சினைகளை நேரில் தெரிவித்தோம்.

ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. எமது தமிழ்ப் பிரதேசங்களில் மாநகர சபையால் செய்யப்பட்ட அபிவிருத்திகளின் விகிதாசாரம் என்னவென்பதை அறிய விரும்புகின்றேன்.

இந்தச் சபை முரண்படும் இடமல்ல, உடன்படும் இடமாகவே கருதி முதல்வருடன் சுமுகமான உறவையே நாம் வளர்த்து வருகின்றோம்.

சிலர் முதல்வருக்கும், எமக்குமிடையிலான சுமுக நிலையைக் குலைக்க முற்படுவதுடன், இங்கு முஸ்லிம் காங்கிரஸுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்க முற்படுகின்றனரோ எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எந்த விடயத்திலும் நேர்மை நடுநிலமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் தான் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையைத் தொடர்ந்தும் பேணலாம் - என்றார்.

இதனையடுத்து முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நமது மாநகர சபையின் அபிவிருத்திப் பணிகள் தற்பொழுதுதான் ஆரம்பமாகவுள்ளது. இதுவரை எந்தப் பிரதேசமும் புறக்கணிக்கப்படவுமில்லை. அத்தகைய நிலைப்பாடுகளும் எம்மிடமில்லை. கல்முனை மாநகர சபைக்குட்பட்ட எந்தப் பிரதேசமும் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படமாட்டாது.

இந்த வருட அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென மாநகர சபை நிதியில் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் கல்முனை மாநகர சபைப் பிரிவுக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கென முதற்கட்டமாக இருபத்தைந்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளேன். இதேபோல் காலக்கிரமத்தில் மேலும் ஒதுக்கீடு செய்யவும் தயங்கமாட்டேன்.

இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை எல்லோரும் சேர்ந்து இனம் காண்போம் - என்றார். (ச-30)

# திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத் திட்டம்

எருவில், ஜூன் 22

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்காக ஒதுக்கப்பட்ட காணியை பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சரித்த ஹேரத் மற்றும் நகர சபைத் தலைவர் எஸ்.எச். அஷ்பர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிதியுதவி வழங்கியுள்ளது என பிரதியமைச்சரின் ஊடக இணைப்பாளர் தெரிவித்தார். (ச)



பதவிக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதர் பற்றீசியா ஏ. புட்டேன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திருகோணமலைக்குச் சென்று கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து குறிப்பேட்டிலும் கையெழுத்திட்டார்.

# வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் ரேடியோ தொலைத்தொடர்பு நிலையம்

## அமைத்துத்தரக் கோருகிறார் ஹிஸ்புல்லா

மட்டக்களப்பு,ஜூன் 22

வாழைச்சேனை ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு வசதியாக வாழைச்சேனை மீனவத் துறைமுகத்தில் ரேடியோ தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை அமைத்துத்தருமாறு பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கடற்றொழில்வள அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

கடற்றொழில் நீரியல் வளம் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவுற்றதைத் தொடர்ந்து கிழக்கில் கடற்றொழிலை மேம்படுத்த கடற்றொழில் அமைச்சர் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் அவரிடம் முன்



வைத்த பல கோரிக்கைகளை அவர் நிறைவேற்றித் தந்திருக்கின்றார்.

இதுபோல் இன்னும் பல பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 500 படகுகள் ஆழ்கடல் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. ஆழ்கடல் செல்லும்போது மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான கருவிகள் இல்லாததால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆழ்கடலில் வைத்து மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவார்களானால், அவர்களைக் காப்பாற்றுவது சாத்தியமற்றதொன்று. ஆகவே, இந்த மீனவர்களின் நன்மை கருதி வாழைச்சேனை துறைமுகத்தில் ரேடியோ தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை அமைக்க கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு, பூநொச்சி முனையில் 600 படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. இங்கு மிதக்கும் இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கான வசதிகள் இருக்கின்றன. ஆகவே அங்கு மிதக்கும் இறங்குதுறையை அமைத்துத்தர அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

# இருவருக்கு அபராதம்

அக்கரைப்பற்று,ஜூன் 22

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியில் ஆற்று மணல் ஏற்றினர். அவர்களை அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ச)

# டெங்கை கட்டுப்படுத்த இன்று நுவரெலியாவில் சிரமதானம்

நுவரெலியா,ஜூன் 22

நுவரெலியா மாவட்டத்திலுள்ள சகல அரச நிறுவனங்களினதும் சுற்றுச் சூழலில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை விசேட சிரமதானப்பணிகள் இடம்பெறவுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஹேரந்தன ஹேமவர்தன தெரிவித்தார்.

இந்த வருடத்தில் நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை டெங்கு நோயாளர்கள் 130 பேர் இனங் காணப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்டப் பொதுச்சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

அம்பகமுவ, ஹங்குரன்கெத்த, கொத்மலை போன்ற பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே இவ்வாறு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய்க்கு உட்பட்டவர்களின் பெரும்பாலானோர் கொழும்பு, கண்டி போன்ற வெளி மாவட்டங்களிலிருந்து [illegible] (ச)

# பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன் 22

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை பிரதேச வீடொன்றில் இருந்து தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனை பாடசாலை வீதியைச் சேர்ந்த ரசீகரன் விணோதினி (வயது-21) என்ற இளம் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கணவர் வழங்கிய தகவலின் அடிப்படையில், சென்ற பொலிஸார் குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் மாவடிவேம்பு வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த மரணத்தில் சந்தேகம் நிலவுவதனால், மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-31)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியும். கவனம் தேவை. வியாபாரிகளுக்கு, கடன் மிகுதிகள் வருவது தள்ளிப்போகும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலை அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படும். ஓய்வெடுக்கக்கூட நேரமில்லாத அளவுக்கு, கடும் வேலைப்பளுவைச் சந்திப்பீர்கள்.

**இடபம்:** உறவினர்களை நம்பி உங்களின் வேலை ஒன்றை ஒப்படைப்பீர்கள். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமைந்தாலும், அது நல்லவிதமாகவே நடக்கும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து பெருமிதம் அடைவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு அகன்று பாசம் அதிகரிக்கும். கடன் பெறுவதில் முயற்சிகளில் பலன் உண்டு. தொழில் ரீதியாக சிலர், உங்களைப் பாராட்டுவார்கள். நீண்ட நாள் இழுபறியான காரியம் ஒன்றை, முடித்த திருப்தி காணப்படும். பல மணிநேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று, சில மணி நேரங்களில் முடிந்துவிடும்.

**கடகம்:** பெருமைக்காக சில காரியங்களைச் செய்து அவதிப்படுவீர்கள். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறை ஏற்படும். உத்தியோகத்தர்கள் தொழிலில், அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று பயம் கொள்வீர்கள்.

**சிங்கம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஒரு வேலையை முடிக்க, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடலாம். உடல் உபாதைகளால் பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்க நேரிடும். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**கன்னி:** வழக்கத்திற்கு மாறாக நீண்ட நேரம் ஓய்வெடுப்பீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை நாளை செய்யலாம் எனப் பிற்போடுவீர்கள். சிலருக்கு வாக்குக்கொடுத்து விட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடும். பயணங்களில் தடை, தாமதங்கள் நேரும்.

**நாளை**

ஆனி 09 சனிக்கிழமை 23.06.2012
திதி: துதியை மு.ப 10.15 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மரண பி.ப 12.59 வரை
சுபநேரம்: 03.01 - 04.31 வரை
ராகு காலம்: 09.01 - 10.31 வரை

**துலாம்:** இனிமையான அனுபவங்களைப் பெறுவீர்கள். சிரமங்கள் இருந்தாலும், திட்டமிட்ட வேலைகள் இனிதே முடிவுக்கு வரும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்ப விடயங்களில் மேன்மை காணும் நாள். கடன் மிகுதி ஒன்றைத் திருப்பிக் கொடுக்கலாம்.

**விருச்சிகம்:** நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடும். வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும். உறவினர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திப்பீர்கள்.

**தனுசு:** புத்துணர்ச்சியுடன் செயற்படும் நாள். முடியுமோ, முடியாதோ என்று நினைத்த வேலை ஒன்று சுமுகமாக முடிவடைவதால், மகிழ்ச்சி அடையலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். உடன்பிறப்புகள் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**மகரம்:** வீண் செலவுகள் ஏற்படும். அரசியல் தொடர்புடையவர்கள் வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வியாபாரிகள் போட்டிகளை முறியடித்து, கணிசமான வருமானம் பெறுவீர்கள். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படும்.

**கும்பம்:** சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரியளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள் சிலர், தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை உங்களிடம் ஒப்படைக்கலாம். எதிலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல், அமைதியாகச் செயற்பட வேண்டும். சிலரிடம் ஆரம்பத்தில் வாக்குக் கொடுத்துவிட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்குவீர்கள்.

**மீனம்:** மலைபோல் குவிந்த வேலைகளை உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களைப் பற்றி பேசுவீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பற்றாக்குறை தீரும் வகையில் பணவரவுகளைப் பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | 8 | | | |
| | 1 | 3 | 9 | | 6 | | 7 | 5 |
| | 7 | 2 | | | | | | 8 |
| | 9 | | 6 | 4 | 5 | | | 1 |
| | | | 2 | | 9 | | | |
| 3 | | | 8 | 7 | 1 | | 9 | |
| 1 | | | | | | 7 | 8 | |
| 9 | 8 | | 1 | | 3 | 5 | 4 | |
| | | | 4 | | | | | 9 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 6 | 7 | 5 | 9 | 8 | 2 |
| 7 | 2 | 8 | 9 | 1 | 4 | 5 | 3 | 6 |
| 9 | 6 | 5 | 3 | 8 | 2 | 7 | 4 | 1 |
| 8 | 3 | 7 | 2 | 5 | 6 | 1 | 9 | 4 |
| 5 | 9 | 1 | 8 | 4 | 7 | 2 | 6 | 3 |
| 2 | 4 | 6 | 1 | 9 | 3 | 8 | 7 | 5 |
| 6 | 7 | 2 | 5 | 3 | 9 | 4 | 1 | 8 |
| 1 | 5 | 9 | 4 | 6 | 8 | 3 | 2 | 7 |
| 3 | 8 | 4 | 7 | 2 | 1 | 6 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


வாசித்துவிட்டீர்களா....?






வேள்வி என்ற பெயரில் மிருகபலி

...மனிதப் பிறவிகளிலிருந்து ஓரறிவு குறைந்த ஐந்தறிவு படைத்த ஜீவராசிகள் தான் மிருகப்பிறவிகள். அவை உயிருடன் வைத்து கழுத்தறுத்து பலியிடப்படுவது எத்தகைய கொடுமையான செயல். ஒன்றா? இரண்டா?? நூற்றுக்கணக்கான மிருகங்கள் ஒரேநேரத்தில் கடவுளின் பெயரால் ஆலயச் சூழலில் வைத்து பலியிடப்படுவது எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒரு விடயம்தான். உண்மையில் இது குறிப்பிட்ட ஆலயங்களின் நிர்வாகத்திலுள்ள ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவுகளே... இதன் நிமிர்த்தமாக ஒருசிலர் தங்களது சேட் பொக்கற்றுகளை நிறைத்துக் கொள்வதுவும் உண்மையே....

- ஜனநாயகத்தை ஒடுக்கும் அராஜகம்
- காலிமுகத்திடலில் காணாமல்போன பனைமரங்கள்



இந்திய ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி...?



அப்துல் கலாமின் கனவை நிறைவேற்றத் துடிக்கும் விவேக்

(சி/927) (1.6.9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு மறை மாவட்ட ஆயர் அதி வண. மல்கம் ரஞ்சித்தை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

## வெலிக்கடை சிறைச்சாலையில் அலுவலர்களுக்கும் சோதனை

கொழும்பு, ஜூன் 22

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களைச் சோதனை செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலையில் கடமையாற்றிவரும் உயர் அதிகாரிகள் முதல் சாதாரண உத்தியோகத்தர்கள் வரையில் அனைவரும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாதணிகளைக்கூடக் கழற்றி சோதனை நடத்தப்பட்டுள்ளது. நீண்டகாலம் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களைக் கூட பயிலுனர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டனர் என்று உத்தியோகத்தர்கள் கூறினர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் அண்மையில் தப்பிச் செல்ல முற்பட்டதனைத் தொடர்ந்தே இவ்வாறான சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சிறைச்சாலை உயரதிகாரிகள் மற்றும் நலன்புரி உத்தியோகத்தர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படாமை அதிருப்தி அளிப்பதாக சில அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

## அமைதி காக்கும் பணிக்கு படையினர் லெபனானுக்கு

கொழும்பு,ஜூன்22

அமைதி காக்கும் பணிகளுக்காக 150 இலங்கைப் படையினர் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

அமைதி காக்கும் பணிகளுக்குத் தேவையான பயிற்சிகள் இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்து அதிகாரிகளும் 140 உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 25ஆம் திகதி லெபனான் செல்லவுள்ளதாக அவர் கூறினார்.

ஹெய்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட 7 இராணுவ அதிகாரிகள் மற்றும் 111 படையினரும் அடுத்த மாதம் அங்கு செல்லவுள்ளனர். வெளிநாடுகளில் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 12000 படையினர் கடமையாற்றி வருவதாக அவர் தெரிவித்தார். (ச)

**பத்து அதிகாரிகளும் 140 உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 25ஆம் திகதி லெபனான் செல்லவுள்ளனர்**

## டெங்கு ஒழிப்புத் திட்டம் தோல்வி

கொழும்பு,ஜூன்22

அரசு முன்னெடுத்துவரும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் தோல்வியடைந்துள்ளது என்று பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சில் முறையான வேலைத்திட்டம் இல்லாததால் வருடாந்தம் டெங்கு நோயினால் உயிரிழக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கை பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் டெங்கு ஒழிப்பு திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியபோதும் அதன் அறிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று அவர் கூறினார். (ச)

# தீர்வை முன்வைப்பதில் அரசுக்குள் முரண்பாடு

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு



**மாலபே தனியார் மருத்துவ பல்கலைக் கழகம் தொடர்பில் அரசுக்குள்ளேயே முரண்பாடுகள் இருக்கின்றன.**

கொழும்பு,ஜூன் 22

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பது தொடர்பிலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் அரசுக்குள் ஒற்றுமை இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மாலபே தனியார் மருத்துவ பல்கலைக்கழகம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாலபே தனியார் மருத்துவ பல்கலைக்கழகம் தொடர்பில் அரசுக்குள்ளேயே முரண்பாடுகள் இருக்கின்றன. அமைச்சர் தினேஸ் குணவர்தன இந்த விடயம் தொடர்பில் ஒரு வகையான கருத்தையும், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றுமொரு நிலைப்பாட்டையும், அத்துரெலிய தேரர் வேறுவிதமான கருத்தையும் கொண்ட நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணும் விடயமாக இருந்தாலும் சரி, நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடாக இருந்தாலும் சரி இந்த விடயங்கள் தொடர்பில் அரசிடம் ஒற்றுமை இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாவதற்கு முன்னர் அறிக்கையில் பரிந்துரைக்கப்படுபவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அரசு கூறியது. ஆனால், தற்போது அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், ஒரு பகுதியையே நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறுகின்றது.

மாலபேயில் தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முதலீட்டு சபையின் அனுமதியோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியோ கிடைக்கப்பெறவில்லை.-என்றார். (ச-சி)

## பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தாத விவசாயிகள் உடன் கைதுசெய்யப்படுவர்

### வர்த்தகத்துறை அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 22

பொருளாதார மத்திய நிலையங்களுக்கு பிளாஸ்ரிக்கூடைகளைப் பயன்படுத்தி மரக்கறி வகைகளைக் கொண்டு வராத விவசாயிகள் கைது செய்யப்படுவர் என்று கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சு நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, பிளாஸ்ரிக்கூடைப் பாவனைச் சட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான் முதன் முதலில் பிலாஸ்ரிக் கூடைப் பாவனைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் கூடைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிளாஸ்ரிக்கூடைப் பாவனைச் சட்டம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சு 2011 ஜனவரி மாதமே வெளியிட்டது.

பிளாஸ்ரிக்கூடைகளைப் பாவிக்காது சாக்குப் பைகள் மூலம் மரக்கறி வகைகளை கொண்டுவருவதால் பணம் வீண்விரயமாவதுடன், மரக்கறியும் பழுதடைகின்றது. இதன் காரணமாகத்தான் நாம் குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

மெனிங் பொதுச்சந்தை உட்பட கொழும்பில் உள்ள பிரதான சந்தைகளுக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் சாக்குப்பைகளில் மரக்கறி வகைகளை எடுத்துவரும் விவசாயிகள் கைதுசெய்யப்படுவர். பிளாஸ்ரிக்கூடைப் பாவனை அவசியமாகும். கிராமங்களிலுள்ள சந்தைகளுக்கு சாக்குப்பைகளில் மரக்கறி வகைகளை எடுத்துச் செல்லும் விவசாயிகள் கைதுசெய்யப்படமாட்டார்கள். அதுமட்டுமன்றி, தடித்த கடதாசிப்பெட்டி, பல கைப்பெட்டி ஆகியன மூலமாகவும் விவசாயிகள் மரக்கறிகளை எடுத்துச் செல்ல முடியும்- என்றார். (ச-சி)

## அம்பாந்தோட்டைச் சம்பவம்; ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு,ஜூன்22

ஹம்பாந்தோட்டை, கட்டுவான பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக தேசிய மொழிகள்அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டியது அவசியமானது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கும் சட்டம், ஒழுங்குக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, குற்றச் செயல் தொடர்பில் விசாரணை நடத்தி, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் மீண்டும் அரசியல் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்படக்கூடாது என்று அவர் கூறியுள்ளார். (ச)

## புகையிலை கடத்தியவர் கைது

கொழும்பு,ஜூன்22

சுவையூட்டப்பட்ட புகையிலையை இலங்கைக்கு கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் இலங்கைப் பயணி ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் விட்டுச்செல்லப்பட்ட கடத்தல் பொருள் அடங்கிய பை ஒன்றை தன்னுடையது எனக் கூறி பெறச் சென்றபோதே இவர் கைது செய்யப்பட்டனர் எனச் சுங்க அதிகாரிகள் கூறினர். குறித்த சந்தேகநபர் கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர் ஆவார். இவரிடம் இருந்து சுமார் [illegible].5 மில்லியன் ரூபா பெறுமதியான 2,400 பொதிகளைக் கொண்ட புகையிலையை கைப்பற்றியுள்ளதாக சுங்க அதிகாரிகள் கூறினர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

வீட்டுடன் கூடிய பின்வரும் காணிகள் விற்பனைக்குண்டு.

- AV றோட், கொழும்புத்துறையில் 1 ½ பரப்புக் காணி வீட்டுடன்.
- அராலி வீதி, ஓட்டுமடம் 2 பரப்புக் காணி வீட்டுடன்.
- மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி ¾ பரப்பு காணி

தொடர்பு: 077 9435 088

(சி/934) (45.6.9)

# இரண்டு கோடி ரூபா செலவில் நூலகம்

காரைநகர் புது வீதி சந்தியில் சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் நூலகம் ஒன்று அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் காரைநகரைச்சேர்ந்த மக்களால் நிதி சேகரிக்கப்பட்டு இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடமாக நவீன வசதிகளுடன் இந்த நூலகம் அமைக்கப்படவுள்ளது. கடந்த வருடம் இதற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு அடிக்கல் நடப்பட்டது நூலகம் அமைக்கும் பணி தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. (ம-60)

## தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஜூன்22

உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தென்மராட்சி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சுன்னாகம் உடுவில் ஆர்க் வீதியைச் சேர்ந்த அல்பிரட் அந்தோனிப்பிள்ளை (வயது-55) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

**A⁺ சிறுநீரகம் தேவை**

A+ (A Positive) blood group உள்ள ஒருவருக்கு மாற்று சிறுநீரகம் ஒன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது. 30-50 வயதுக்கிடைப்பட்டவர்கள் தானம் செய்ய விரும்பினால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களூடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 132 8706, 078 579 3415, 077 711 1003

(சி/936) (5.6.9)

# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03.07.1940



ஆண்டவன் அடியில் 28.06.2006

## அமரர் செல்லத்துரை செல்வநாயகம்

(ஜே.பி.யூ.எம். உயர் நீதிமன்ற சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் – காரைநகர்)

**திதி: 22.06.2012**

என்றுமே தாள் இட்டு அடைத்திடாத வாயில்
உந்தன் உள்ளமோ கள்ளமற்று ஒளி பரப்பிடும்
சுற்றமோ என்றும் உமைச்சூழ்ந்திட உள்ளம் மகிழ்ந்திடும்
எவர் வந்திடினும் இன் முகம் காட்டி வரவேற்று
அவர் தம் குறிப்பறிந்து ஆவன செய்து மகிழ்ந்திடுவீர்
அன்று நீங்கள் இட்ட அரணடி மலரும் அறச்செயலும்
இன்று எனக்குத் தோன்றாத் துணையாய்
நின்று வழிநடத்திச் செல்கின்றன. இன்று
அவ்வழி அடியொற்றி வாழ்கின்றேன்.
எனை விட்டுப்பிரிந்து இன்றுடன் ஆறாண்டென்ன
நூறாண்டு ஆனாலும் ஆறுமோ என் மனம்
இன்று ஆவன செய்து உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாருதி கோட்
37/1– 2/1, ஹம்டன் லேன்,
கொழும்பு– 06
தொ.பே. 011 2366379

மனைவி

(சி/910) (45.6.9)

## வீதி புனரமைப்பு

காரைநகர்,ஜூன் 22

காரைநகர் வேம்படிச் சந்தியில் இருந்து சுப்பிரமணியம் வீதியை இணைக்கும் 1.7 கிலோ மீற்றர் நீளமான வீதி அகலமாக்கப்பட்டு புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபை ஊடாக புனரமைக்கப்படவுள்ள இந்த வீதிக்கு புறநெகும திட்டத்தின் கீழ் ஒரு கோடி 42 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் திட்டத்தின் ஊடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு செல்லும் நடுத்தர வீதியும் 20 மில்லியன் ரூபா செலவில் அகலிக்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது என்று கூறப்பட்டது. (ம-250)

## பாம்பை மிதித்தவர் கடியுண்டார்

தென்மராட்சி,ஜூன்22

வீதியின் குறுக்கே படுத்திருந்த பாம்பினை மிதித்தவர் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு பூநகரி நாலாங்கட்டையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் அல்வின் (வயது-50) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## சொற்பொழிவு


யாழ்.சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மற்றும் தலைமைத்துவத்தையுடைய பெண்களுக்கான ஆன்மிக சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், மீசாலை ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் ஆன்மிக சொற்பொழிவு காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகரின் குருபூசை தினத்தை முன்னிட்டு "மாணிக்கவாசகரின் சிந்தனைகள்" எனும் தலைப்பிலும், மீசாலையில் இடம்பெறும் ஆன்மிக சொற்பொழிவு பிற்பகல் 3 மணிக்கும், பிற்பகல் 4.30 மணிக்கும் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

ஆன்மிக சொற்பொழிவை சின்மயா மிஷன் பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்துவார். (ம-14)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 28.11.1926

மறைவு 24.05.2012

## அமரர் கந்தையா இராசையா

(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்)

எமது குடும்பத் தலைவர் 24.05.2012 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அந்தியேட்டிக் கிரியை நாளை (23.06.2012) சனிக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்த்தி கீரிமலை தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இடம்பெறும். அழைப்புக் கிடைக்காதவர்களும் இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உபதபாற்கந்தோர்,
துன்னாலை மத்தி, கரவெட்டி.
0779919532

குடும்பத்தினர்.

(18698)




உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

(சீ/858)

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16.11.1939



மறைவு 24.05.2012

அமரர்

## தம்பாப்பிள்ளை இராமநாதன் (யோகர்)

கடந்த 24.05.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தம்பாப்பிள்ளை இராமநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று [22.06.2012] வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அவரது மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(19575) (9-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிதான் முக்கியம்

தொல்லிப்பழையில் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் கண்டிப்பாக எனது பங்களிப்பும் இருக்க வேண்டும் என்று கடந்த செவ்வாய்க்கிழமை நானும் சென்றிருந்தேன். வலி. வடக்கு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிப்பவர்களும் மினி பஸ்களில் வந்திருந் தார்கள். கூட்டம் அலை மோதியது. நில அபகரிப்பை நிறுத்துமாறு கோரி வசனங்கள் எழுதிய அட்டைகளைத் தாங்கியவாறும் ஒருவர் பின் ஒருவராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கே கலகமடக்கும் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு துப்பாக்கியுடன் குவிக்கப்பட்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் நானும் ஒருவனாக நிற்கிறேன். எனது பார்வையோ பொலிஸாரின் பக்கம் போகிறது...... 2006 ஆம் ஆண்டு காலப்பகுதி வீதிகள் எங்கும் ரயர்களைப் போட்டுக் கொழுத்தி படையினரை எழும்பச் சொல்லி போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.அதேபோலத்தான் இந்த நில அபகரிப்புக்கு எதிரான போராட்டமும் அமையப் போகிறதோ என நினைத்துக் கொண்டிருந்தேன்.

இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட வயது போன ஒருவர், அவரை யார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர் மயிலிட்டி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பல பிரதேசங்களில் வசித்து வந்தவர் என்றும் கடைசியாக வடமராட்சிப் பகுதியில் வசித்து வருகிறார் என்றும் அவர் கதைப்பதில் இருந்து தெரிந்து கொண்டேன். ''22 வருடங்களாச்சு இடம் பெயர்ந்து இன்னும் வீட்டை விடுகிறாங்கள் இல்லை'' என்று கூறியபடி கண்கலங்கினார். அவரைப் பார்த்தேன்......

நீண்டநாள் எதிர்பார்ப்புக்களும் விடா முயற்சியும் பளிச்சிடுவது போல அவரின் முகத்தில் ஆயுள்ரேகை ஓடுகிறது. ''மீண்டும் ஆரம்பத்தில் இருந்தா'' என்று அவரிடம் கேட்டேன். அவரோ, ''ஓம் தம்பி ஆரம்பம்தான். ஆனால் தமிழர் போராட்டம் எந்த வடிவத்திலெண்டாலும் தொடர்ந்து நடக்கிறது என்பதுதான் முக்கியமானது. அப்பொழுதுதான் தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும். இல்லாது போனால் சிங்களவர் எங்களை வாழ விட மாட்டாங்கள். எமது உரிமைக்கான போராட்டம் என்பது எவ்வளவு பெரியது, எத்தனை காலம் எடுக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தப் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். மக்கள் சலிப்படையாது தொடர்ந்து இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்த வேண்டும்'' என்று சொன்ன அந்தப் பெரியவர் திடீரென பொலிஸ் நின்ற பக்கத்தைப் பார்க்கிறார்..........

அந்தப் பக்கம் நானும் பார்க்கிறேன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கும் பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெறுகிறது. போராட்டத்தை நடத்த விடாமல் தடுக்கும் முயற்சியில் பொலிஸ் அதிகாரி களத்தில் இறங்கிவிட்டார்.

மாவை சேனாதிராஜாவோ விட்ட பாடில்லை தொடர்ந்து இருவருக்கும் இடையில் வாக்குவாதம் பலப்படுகிறது..... இதற்கிடையில் போராட்டதில் பங்கு கொள்ள அங்கு சேனாதிராஜாவின் பின் அணி வகுத்து நின்ற மக்கள் பொலிஸ் அதிகாரியை சுற்றி வளைத்தனர். உரிமையை கேட்க எங்களுக்கு உரிமையில்லையா என்று அந்த மக்கள் துணிந்து கொண்டனர்.

மீண்டும் கலகமடக்கும் கண்ணீர் புகைக் குண்டுப் பொலிஸாரைப் பார்க்கிறேன். முகத்தில் மூடியிருந்த முகமூடியைச் சரி செய்து கொண்டு கையில் இருக்கும் புகைக்குண்டுத் துப்பாக்கியையும் இறுக்கிப் பிடிக்கிறார்கள். மெல்ல நழுவி விடுவோமோ என்று தோன்றுகிறது.சுற்றும் முற்றும் பார்க்கிறேன். என்னைப் போல் அங்கே ஒருத்தரும் இல்லைப் போலும்.எல்லோரும் பொலிஸாருடன் முட்டுப்படும் மும்முரத்தில் நிற்கிறார்களே தவிர நழுவி ஓடக் காணோம்!நான் மட்டும் ஓடினால் பிறகு என்னில சந்தேகம் வந்திடும்.அதால வாறது வரட்டும் என்று நானும் அங்கேயே நின்றிட்டன்.

அப்பாவி பொது மக்களின் அமைதி வழிப் போராட்டத்துக்கு இத்தனை பொலிஸார் தேவையா அதுவும் கலகம் அடக்கும் பொலிஸார் தேவையா என்று எனக்குள்ளே ஆதங்கப்பட்டுக்கொண்டு நிற்கிறேன்.

எனக்குப் பக்கத்தில் நின்ற அந்தப் பெரியவரைப் பார்க்கிறேன். அவரை பக்கத்தில் காணவில்லை. சுற்றும் முற்றும் பார்க்கிறேன் அந்தக் கூட்டத்துக்குள்ளும் அந்தப் பெரியவரைக் காணவில்லை. போராட்டம் முடிய முதல் எங்கே போயிருப்பார் என்று எனக்குள்ளே கேள்வி எழுப்பிக் கொண்டு, அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே வந்து பார்க்கிறேன். ஒரு மர நிழலின் கீழ் ஆறுதலாக அமர்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தார்.இதுதான் சந்தர்ப்பம் என்று அவர் பக்கம் சென்றேன். களைப்பு அவரை எந்தப் பக்கமும் பார்க்க விடாமல் இருத்திவிட்டது.

''என்ன ஐயா, பேசாமல் வந்து இப்படி இருக்கிறியள்'' என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அந்தப் பெரியவர் ''என்னால முடியாது, வயது போட்டுது எண்டாலும் என்னால் முடிந்த இந்தப் பங்களிப்பையாவது செய்து போட்டு கட்டேலை போவம் என்று வந்தன். எதிர் வரும் சந்ததிகளுக்கு நான் என்ன செய்தேன் என்று கேட்க முடியாத அளவுக்கு செய்தால்தான் என்னை மதிப்பாங்கள். இல்லாவிட்டால் என்னையும் தமிழர்களுடைய எதிரியாகத்தான் பார்ப்பார்கள்.

இப்போது இருக்கும் வீடு போய் சேருவேனோ தெரியாது, ஆனால் என்னுடைய நிலத்தினை பறி போகாமல் தடுப்பதற்கான போராட்டத்தில் கலந்துகொண்டேன் என்ற நம்பிகையோடும் கண்டிப்பாக ஒருநாள் எனது சொந்த நிலத்திலுள்ள வீட்டுக்கு எனது பேரப்பிள்ளையளாவது போய்ச் சேருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் தம்பியளே உங்களைப் போல பெடியள் கண்டிப்பாக இப்படிப்பட்ட போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் எமது நிலம் எமக்குக் கிடைக்கும். இல்லாது போயின் நாடற்றவராக சிங்கள அரசு எம்மை இந்த மண்ணை விட்டு துரத்தி விடுவதற்கான முயற்சிகளில் இறங்கி விடும்''என்று அந்தாள் ஆலோசனைகளை அள்ளிவிட்டார்.

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

ஆயுதப் போராட்டம் நடக்கும் போது எமக்கு ஒரு நம்பிக்கை இருந்தது சகல இடங்களும் விடுவிக்கப்படும் என்று. அந்தப் போராட்டத்துக்கு உறுதுணையாக நின்று கணக்கிட முடியாத உதவிகளைச் செய்தோம், உயிர்களைக் கொடுத்தோம். இப்பொழுது அந்தப் போராட்ட உழைப்புதான் ஐக்கிய நாடுகள் சபை வரை சென்றுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு இடையூறு விளைவிக்க முடியாத அளவுக்குத் தடை ஏற்பட்டுள்ளது. கல்லெறியவும் கழிவு ஒயில் ஊற்ற மட்டும்தான் இவர்களால் முடியும். வேறு ஒன்றும் இவர்களால் இனிமேல் செய்ய'முடியாதுஎன்று யோசித்தபடியே மீண்டும் போய் போராட்டத்தில் இணைந்துகொண்டேன்.

## ஈழத்து நூல் கண்காட்சியும் நூல் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

கொழும்பு காயத்திரி பப்ளிக்கேஷன் நிறுவனத்தால் ஈழத்து நூல் கண்காட்சியும், நூல் விற்பனையும், புலமைப் பரிசில் கருத்தரங்கும் எதிர்வரும் ஜூலை முதலாம் வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

புலமைப்பரிசில் கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள், அற நெறிப் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் 0777-892028 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். சிறுகதைகள், நாவல்கள் குறுநாவல்கள், சிறுவர் கதைகள், கவிதைகள் , புதுமுக எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான கல்வி சார்ந்த நூல்கள், உளவியல் நூல்கள், கணினி நூல்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்த விரும்பும் ஈழத்து எழுத்தாளர்கள் " நூல் தரப்படுத்தல் ", வி. நவமோகன், காயத்திரிபப்ளிக்கேஷன்63, டீ.சில்வா றோட் களுபோவில, தெஹிவளை என்னும் முகவரிக்கு நூல்களை அனுப்பி வைக்கலாம்.(வ-14)

**VACANCY**

IT EXECUTIVES
COUNTER CASHIER

**REQUIREMENTS**

Good Knowledge in Accounting Computer and English is necessary for Account and IT Executives

**WALK IN INTERVIEW**

From : (24.06.2012) Sunday
Time: 9 a.m. to 4 p.m.

**ANNAI NAGA FOOD CITY**
175, K.K.S. Road,
Tel: 077 601 0485 Jaffna.

(C/931)(6-9)

## ஆங்கில தின பேச்சுப் போட்டி

யாழ்.வலயமட்ட ஆங்கிலதினபேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ந-14)

**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

" எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு-
மீளாத்துயில் கொண்ட எம் குல விளக்கே''



தாய் மடியில்:
13-01-1964

இறை மடியில்:
20-06-2004

திருமதி சிவபாலசுப்பிரமணியம் வசந்தராணி

திதி:- திருதியை (22.06.2012)

ஆண்டு எட்டாகி விட்டது. ஆனாலும்
உன் மரணத்தின் வலிகள் மாறவில்லை
தாய்மடி தேடி ஏங்குகின்றோம்
உன்மடியில் தலைசாய்க்கோமோ என்று
உங்கள் அன்புக்கடன் தீர்க்க இந்த ஜென்மம் போதவில்லை
மீண்டும் ஒரு ஜென்மம் இருப்பின் பிறப்போம் உன் கருவறையில்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மாதகல் வடக்கு,
மாதகல்.

(19480) (6,9)

குடும்பத்தினர்.

**காணி விற்பனைக்குண்டு**

கச்சாய் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு
அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு
என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட
தென்னை பயிரிடக்கூடிய காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 5227 107

**தவறிவிட்டது**

பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த வன்னியசிங்கம் சுரேஷ்குமார் என்பவருடைய தே.அ.அட்டை (711400265V), சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:0770260022, 0213211130 (19621)

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் மெயின் றோட்டில் உள்ள
ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில்
12 அடி ஒழுங்கையில் அமைந்துள்ள
பொளி கல்லு கிணற்றுடன் கூடிய
தென்னை, பனை மரங்கள் உட்பட
3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6618 920

(19498) (45,6,9)

**மேடையில் இருந்து திரைக்கு**

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக...



நடிப்பு மற்றும் குறும்படம்
தயாரிப்பு பயிற்சி

மேடை நடிப்பு
திரை நடிப்பு
எழுத்துரு
கமெரா
எடிட்டிங்

நாடகம் மற்றும் குறுந்திரைப்படத்துறையில் பட்டறிவும் தேர்ச்சியும் உள்ளவர்களால் நடத்தப்படும்

பயிற்சி முடிவில், ஒவ்வொருவரும் தயாரிக்கும் குறுந் திரைப்படங்கள். ஒழுங்குபடுத்தப்படும் திரைப்பட விழா ஒன்றில் திரையிடப்படும்.

6 மாத கால
சனி, ஞாயிறு

ACTIVE THEATER MOVEMENT
(in front of palaly teacher's training college)
'Arulagam', Adiyapatham Road, Thirunelveli, Jaffna
0213216222, 0773112692, activetheatre@gmail.com


அனுமதி மட்டுப்பட்டது. முடிவு திகதி: 30/06/2012

(C/933)

Indra graphics, 0718731754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உல்லாசப் பயணிகளுக்கு ஒரு வீடியோ பதிகருவி



விடுமுறைகாலங்களில் நீண்ட தூரங்களாக சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்பவர்கள் அந்தப் பயணத்தின் நினைவாக வீடியோ, புகைப்படங்களை எடுக்கத்தவறுவதில்லை.

தற்போது சுற்றுலாப் பயணங்களை பதிவு செய்யக்கூடிய அதிநவீன பதி கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. Road trip Video Recorder எனும் இந்தப்பதிகருவியை பயணிக்கும் வாகனங்களின் முற்பகுதியில் பொருத்திவிட்டால் போதும் அது தானாகவே முழுமையான பயணத்தினையும் பதிவுசெய்துவிடும்.

இந்தக்கருவியானது 8 x உருப்பெருக்கம், 120 டிகிரி கோணத்தை உள்ளடக்கக் கூடிய வில்லையைக் கொண்டிருப்பதுடன் 270 டிகிரியில் காட்சிகளைப் பதிவு செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் 640 x 480 ரெசொலூசனில் காட்சிகளை பதிவுசெய்யும் திறனைக் கொண்டுள்ளது. அதேநேரம் வாகனத்தில் ஏற்படும் திருப்பங்களுக்கு ஏற்ப தனது நிலையையும் மாற்றக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'யாமர்' யாருக்கு?

பேஸ்புக்கைப் போன்றதொரு சமூக வலைத்தளமானது தான் யாமர். இது அமெரிக்காவில் மிகவும் பிரபலமானது. இதனை வாங்க மைக்ரோசப்ட் நிறுவனம் முடிவு செய்துள்ளதாம். 2008ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள டேவிட் சாக்ஸ் என்பவரால் தொடங்கப்பட்டது யாமர் சமூக தளம். தற்போது யாமர் சமூக தளத்தை 2 லட்சத்துக்கும் அதிகமான நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன.

யாமரை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்க மைக்ரோசாப்ட் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.


அதனால் விரைவில் யாமர் மைக்ரோசாப்டின் கைகளுக்குள் வந்துவிடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


சமூக வலைத் தளச் சந்தையில் யாமரோடு ஜைவ், சாட்டர் மற்றும் அசனா போன்ற வலைத் தளங்களும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் மைக்ரோசாப்டின் கையில் யாமர் வந்தால் மேலும் பிரபலமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

கணினிகளுள் சிறிதானதாகக் காணப்படும் அப்பிள் நிறுவனத்தின் உயர்தொழில்நுட்பத் தயாரிப்பான iPad ஐ பயன்படுத்தும்போது, அவற்றைப் பாதுகாப்பானதாக வைத்திருப்பதற்குரிய நவீன தாங்கி (Stand) உருவாக்கப்பட்டுள்ளது.

Tablift Stand எனப்படும் இப்புதிய தாங்கியின் மூலம் எந்தவொரு நிலையிலிருந்தும் iPad ஐ பாதுகாப்பாகவும், இலகுவாகவும் பயன்படுத்த முடியும்.








## அப்பிளின் புதிய 'மெக்புக் புரோ'

அப்பிள் சென்பிரான்சிஸ்கோவில் நடத்திய தனது வருடாந்த டெவலப்பர் மாநாட்டில் (Worldwide Developers Conference) புதிய மெக்புக் புரோ மற்றும் ஐ.ஓ.எஸ். இன் புதிய தொகுப்பு உட்பட சிலவற்றை அறிமுகப்படுத்தியது.

இந்தப்புதிய மெக்புக் புரோவின் சிறப்பம்சம் அதன் திரையாகும். அப்பிளின் ஐ போன் மற்றும் ஐ பேட் சாதனங்கள் கொண்டுள்ள 'ரெடினா' திரையை புதிய மெக்புக் புரோ கொண்டுள்ளது. இதன் அளவு 15.4 அங்குலமாகும். மேலும் இது 0.71 அங்குலம் தடிப்பானது. இதனைவிட குவாட்கோர் புரசசர், 16 ஜிபி வரையான ரம், 768 ஜிபி பிலாஸ் ஸ்டோரேஜ் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது.

இதன் பற்றரி சுமார் 7 மணித்தியாலங்கள் நீடிக்கக்கூடியதாகும். எனினும் இதன் ஆரம்ப விலை 2,199 அமெரிக்க டொலர்களாகும். பல மேம்படுத்தப்பட்ட மற்றும் புதிய வசதிகளுடன் IOS6 வெளியாகியுள்ளது.

சுமார் 200 இற்கும் அதிகமான புதிய வசதிகளை இது உள்ளடக்கியுள்ளதாக அப்பிள் தெரிவித்துள்ளது. அவையாவன. அப்பிளின் குரல் கட்டளைக்கு ஏற்ப செயற்படும் 'சைரி' வசதியானது நன்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. ஐபேட் 2 மற்றும் 3 இலும் ஐ சைரி இனிமேல் செயற்படும்.

'சைரி' கன்டோனீஸ், கொரியன், கனேடியன் போன்ற மொழிகளிலும் செயற்படும் டுவிட்டரில் டுவிட் செய்ய, பேஸ்புக்கில் ஸ்டேடஸ் அப்டேட் செய்ய, முன்பதிவுகளை மேற்கொள்ளவும் சைரி இனிமேல் உதவி செய்யும்.

பேஸ்புக் முற்றிலுமாக இணைக்கப்பட்டுள்ளது. அப்ளிகேசன், சைரி ஊடாகவும் பேஸ்புக்கினுள் நுழையமுடியும். தியேட்டர் மற்றும் விமான டிக்கெட்டுக்களை கையாள்வதற்கென 'பாஸ்புக்' எனும் விசேட அப்ளிகேசன் முற்றிலும் புதிய தோற்றத்துடன் கூடிய 'மெப்' அப்ளிகேசன் என்பனவும் உள்ளன.

''தொந்தரவு செய்யாதீர்'' எனும் உள்வரும் அழைப்புகளுக்கு குறுஞ்செய்தி மூலமாக பதில் வழங்கக்கூடிய வசதி, மேம்படுத்தப்பட்ட மின்னஞ்சல் அப்ளிகேசன் மற்றும் சபாரி அப்ளிகேசன் ஆகியனவும் உண்டு.

## விளம்பரங்களை அறிமுகப்படுத்தும் 'ஸ்கைப்'





இணையத்தள வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கு மில்லியன் கணக்கான பயனர்களைத் தன்னகத்தே கொண்டு ஸ்கைப்[Skype] முன்னணியில் திகழ்கிறது.

ஸ்கைப் இலவசமான அழைப்புக்களை ஏற்படுத்தும் வசதிகளைக் கொண்டுள்ள போதிலும், கைபேசிகளுக்கு அழைப்பை ஏற்படுத்தும் போது ஸ்கைப் கணக்கில் பணம் அவசியம் காணப்படுதல் வேண்டும்.

இவ்வாறு ஸ்கைப் கணக்கைக் கொண்டிராதவர்கள் குறித்த ஒரு நேரத்தில் ஒரு நபருக்கான அழைப்பை மேற்கொள்ளும்போது[தொடர்பாடல் அழைப்பு தவிர்ந்த] தமது விளம்பரங்களை இடம்பெறச் செய்யும் முயற்சியில் ஸ்கைப் நிறுவனம் இறங்கியுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் அறிமுகமாகவுள்ள Conversation Ads எனப் பெயரிடப்பட்டுள்ள இப்புதிய வசதியில் தமது விளம்பரங்களை இடம்பெறச் செய்வதற்கென இதுவரையில் 55 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



## உங்கள் கோப்புகளை பாதுகாக்க

கணினியில் காணப்படும் சேமிப்புக் கருவிக ளில் சேமிக்கப்படும் கோப்புக்களை சில சமயங்களில் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்காக அன்றாடம் சேமிக்கப்படும் கோப்புக்களை பிரத்தியேக சேமிப்புச் சாதனம் ஒன்றில் சேமித்தல் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

இதற்கு பல்வேறு 'பக் அப்' சாதனங்கள் பயன்படுகின்றன. அவற்றின் அடிப்படையில் தற்போது Seagate எனப்படும் இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமானது 500GB, 750GB, 1TB, 4TB கொள்ளளவுகளைக் கொண்ட நவீன பக் அப் சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சம்பிக்கவின் கருத்தால் இலங்கை அரசின் கோரமுகம் அம்பலம்

## வைகோ காட்டம்



இலங்கையில் லட்சக் கணக்கான ஈழத்தமிழர்களைக் கொடூரமாகப் படுகொலை செய்த இலங்கை அரசின் உண்மையான கோர முகம் அமைச்சர் சம்பிக்கவின் கருத்தினூடாக மீண்டும் அம்பலத்திற்கு வந்துவிட்டது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் இனத்தின் தாய்மார்களும், குழந்தைகளும், வயது முதிர்ந்த வர்களும், ஆயுதம் ஏந்தாதவர்களும் விமானக் குண்டு வீச்சுக்களாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகத்தின் பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற, கொலைக் களங்களை அந்தப்பெயர்கள்நினைவூட்டுவதைப்போல, முள்ளிவாய்க்கால் என்று சொன்னாலே, தமிழர்களின் நெஞ்சைப் பிளக்கின்ற வார்த்தை ஆயிற்று.

இலங்கை இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்தவரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க ''தமிழர்களுக்கு ஒரு முள்ளிவாய்க்கால் போதும் என்று நினைக்கிறோம். இன்னும் நூறு முள்ளிவாய்க்கால்களை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்'' என்று கொக்கரித்துள்ளார்.

அமைச்சரின் ஆணவத் திமிர்ப்பேச்சு இலங்கை அரசின் குரூரமான எண்ணத்தின் வெளிப்பாடே ஆகும். இந்திய அரசு தந்துவரும் உதவியாலும், ஆதரவாலும்தான் இலங்கை அமைச்சர் வாய்க்கொழுப்போடு பேசியுள்ளார்.

வேதனையில் வெந்து போன தமிழர் நெஞ்சில் சூட்டுக்கோலைத் திணிக்க அமைச்சர் வெறியாட்டம் போடுகிறார். இதற்கெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாகப் பெரும்பான்மையினர் பதிலும் விலையும் தர வேண்டிய காலம் வந்தே தீரும்.

தமிழர்கள் சிந்திய இரத்தத் துளிகளும், தந்த உயிர்களும் சிங்களவர் கொட்டத்தை அடியோடு ஒடுக்கி விடுதலை வெள்ளி முளைக்கும் களங்களாக அமையும்.

அகங்காரத்தோடு தமிழர்களை இழிவுபடுத்திப் பேசிய அமைச்சருக்கும், அந்த அரசுக்கும் கண்டனத்தையும் எச்சரிக்கையையும் இந்திய அரசு செய்யத் தவறுமானால், தமிழ் இனத்துக்குத்தொடர்ந்து இந்திய அரசு துரோகம் இழைக்கும் பாவத்திற்கே ஆளாகும் என்று எச்சரிக்கின்றேன்- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)



காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழாவின் போது பக்தர்கள் புடைசூழ சுவாமி தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி கொடுக்கின்றார். (வ-250)



வண்ணைநகர் அங்குசபாசப்பிள்ளையார் (கீரிப் பிள்ளையார்) ஆலய அலங்காரத்திருவிழாவின் 12 ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவின்போது தீர்த்தமாடியதைத் தொடர்ந்து பெருமான் வெளிவீதியுலா வருகிறார். (வ)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் ஜுலை மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)

* * *

நுணாவில் மேற்கு காளியாமூலை ஸ்ரீ முத்துமாரி (பேச்சி) அம்மன் ஆலயப் பெருந் திருவிழா கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் ஜுலைமாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)

* * *

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் விழாக்கள் வரிசையில், எதிர்வரும் ஜுலை மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந)

* * *

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)


# இலங்கைப் பெண்ணுக்கு பிரிட்டனில் 6 மாதச் சிறை

இலங்கையைச் சொந்த இடமாகக் கொண்ட பொறியியலாளரான ஜானகி விக்ரமசிங்க என்ற பெண்ணுக்கு பிரிட்டன் நீதிமன்றம் 6 மாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளது. 44 வயதான இலங்கைப் பெண்ணுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தபெண் இலத்திரனியல் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருவதுடன், அவர் பணியாற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் நபர் ஒருவர் தன்னுடன் இரகசியமான உறவை வைத்துள்ளதாக பொய்யான தகவல்களை மின்னஞ்சல் மூலம் பரப்பியுள்ளார். அத்துடன் தன்னுடன் பழகும் நபர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான நபர் என்றும் அவர் தனது அஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

ஜானகி விக்ரமசிங்க, குறித்த நபர் தன்னுடன் தொடர்பு வைத்துள்ளதாக தெரிவித்து, அதிகளவான மின்னஞ்சல்களை அந்த நபரின் மனைவிக்கு அனுப்பியுள்ளதாகவும் இதனால் அந்த நபரின் மனைவியின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட நபர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த பெண்ணுக்கும் தனக்கு எந்த தொடர்பும் இல்லை எனவும், அந்த பெண்ணின் நடவடிக்கையால், தானும் மன தளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் சம்பந்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். (வ)



திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

# டிப்ளோமாக் கற்கை நெறி

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம்-1 இற்கான வகுப்புக்கள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ம-14)

## ஒன்றுபட்டு உண்டு வாழ்க

உனக்கு உயர்வும் ,மதிப்பும்,அழகும் எப்போது உண்டாகும்? உன் இனத்துடன் நீ ஒற்றுமையாக இருக்கும்போதுதான். உன் இனத்தை விட்டு நீ பிரிந்துவிட்டால் எல்லோராலும் வெறுக்கப்படுவாய். தலையிலே இருக்கும்போது முடியானது அழகாக இருக்கிறது. வாசனை பூசிக்கப்படுகின்றது. தன் இனத்தைவிட்டு தனியே விழுந்து விடுமானால் அது இழக்கப்படுகிறது. அருவருப்பாகக் கருதப்படுகிறது. இதனை எண்ணிப் பார்த்து நீங்கள் எல்லோருடனும் ஒற்றுமையாக இருப்பீர்களாக.

நன்றி:- ஞானச்சுடர்

ஞானக்கதிர்

# இலங்கைக்கு ஹெரோயின் கடத்தவிருந்த நால்வர் கைது

தமிழ்நாட்டின் நாக பட்டிணம், வேதராண்யம் பகுதியில் இருந்து இலங்கைக்கு ஒரு கிலோகிராம் ஹெரோயினை கடத்த முற்பட்ட சம்பவம் தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று கைதான அவர்களுள் இலங்கையர் ஒருவரும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக [illegible] பிரிவு பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் படி, அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது காஞ்சிபுரத்தில் வைத்து விசாரணை செய்யப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள்களின் சந்தைப் பெறுமதி 2 கோடி இந்திய ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ)



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தில் குருமுருகன் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றன. கதிர்காம முறைப்படி ஆலய பூசகர் சிவத்திரு. மா. பத்மநாதன் வாய்கட்டி பூசை செய்கின்றார். (வ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 19 வயதுப் பிரிவு ஆண்கள்

# வடமாகாண கபடிப்போட்டியில் சொல்லியடித்தது ஹென்றிஸ்

பண்டத்தரிப்பு, ஜூன் 22


19 வயதிற்குட்பட்ட மாகாண மட்ட பாடசாலைக் கபடிப்போட்டியில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகியுள்ளது.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கபடிப் போட்டிகள் நேற்றும், நேற்று முன்தினமும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இதில் 19 வயதிற்குட்பட்ட பிரிவிலேயே புனித ஹென்றியரசர் கல்லூரி மாகாண மட்ட சம்பியனாகியுள்ளது. போட்டியில் பங்குபற்றிய ஏனைய பாடசாலைகளால் ஹென்றியரசர் கல்லூரி வீரர்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

முன்னதாக நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையுடன் மோதிய புனித ஹென்றியரசர் கல்லூரி 49 : 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவான வெற்றியைப் பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது.

அரையிறுதியில் வவுனியா பரகும்பா மகாவித்தியாலயத்தை எதிர்கொண்ட ஹென்றியரசர் கல்லூரி 41:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இறுதிப்போட்டி நேற்றைய தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் களமிறங்கியது. முன்னைய போட்டிகளைப்போல இதில் பெருமளவு புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற ஹென்றியரசர் கல்லூரியால் முடியவில்லை. வேலாயுதம் மகா வித்தியாலய வீரர்கள் கடும் சவாலை வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் உத்வேகத்துடன் விளையாடிய புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் 21:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகினர். (ங-130)



## வீனஸ், ஆதவன், யூப்பிற்றர்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன் 22

பாஷையூர் பிரான்ஸ் அபிவிருத்திச் சங்கத்தின் 10 ஆவது நிறைவை முன்னிட்டு பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் உள்ளூர் அணிகளுக்கிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து கொக்கோக்கோலா அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் வீனஸ் அணி 3 :1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆதவன் ''ஏ '' அணியை எதிர்த்து பிளண்டிஸ் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் ஆதவன் ''ஏ'' அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

தொடர்ந்து இடம் பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் யூப்பிற்றர்ஸ் அணியை எதிர்த்து ஆதவன் ''பி'' அணி மோதிக் கொண்டது.இதில் யூப்பிற்றர்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ங-23)

## அரவிந்த டீ சில்வா நிதியத்தின் பயிற்சி முகாம் இன்று யாழில்




யாழ்ப்பாணம்,ஜூன் 22

கொக்கக்கோலா நிறுவனத்தின் அனுசரணையுடன்,அரவிந்த டீ சில்வா நிதியம் நடத்தும் கிரிக்கெட் பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. இன்று ஆரம்பமாகும் பயிற்சி முகாம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது .

மேற்படி பயிற்சி முகாமுக்கு திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம்,பொலநறுவை மாவட்டம், அனுராதபுர மாவட்டங்களிலிருந்து 5 பேரும்,

யாழ்.மாவட்டத்தில் இருந்து 40 பேரும், கிளிநொச்சி மாவட்டம்,முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களிலிருந்து இரண்டு பேரும் வவுனியா மாவட்டத்திலிருந்து 5 பேரும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி பயிற்சி முகாமின் ஆரம்ப நிகழ்வுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் அரவிந்த டீ சில்வாவும் மற்றும் கொக்கோக்கோலா நிறுவனத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். 2009 ஆம் ஆண்டும் இதேபோன்ற பயிற்சி முகாம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ங-23)

## 'தீவுகளுக்கான வெற்றிக்கிண்ணம்' உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பம்

வேலணை, ஜூன் 22

தீவகப்பிரதேச கழகங்களுக்கிடையிலான 'தீவுகளுக்கான வெற்றிக் கிண்ண' மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று காலை 9 மணியளவில் வேலணைத் துறையூரில் ஆரம்பமாகியது.

வேலணைத் துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் ஐயனார் சனசமூக நிலையம், ஐயனார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டே இந்த ''தீவுகளுக்கான கிண்ணம்'' மாபெரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

கடந்த ஆண்டு சம்பியனான ஐயனார் விளையாட்டுக் கழக அணிக்கு புதிய சீருடைகள் நேற்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வின் போது வழங்கப்பட்டன.

போட்டி ஆரம்ப நிகழ்வில் வேலணைப் பிரதேச சபை உபதலைவர், ஐயனார் விளையாட்டுக் கழகத் தலைவர், தீவுப்பகுதிக்கு பொறுப்பான கடற்படைத்தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ங-23)



கடந்த வருடம் சம்பியனான ஐயனார் அணிக்கு சீருடை வழங்கும் மத வைபவத்தின்போது...

## 20/20 போட்டிக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழா நிறைவை ஒட்டி நெற்கொளு கழுகு விளையாட்டுக்கழகம் வடமராட்சி பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ள இருக்கும் பாடசாலைகள் தங்களுக்குரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அதனை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் நெற்கொளு கழுகு விளையாட்டுக்கழகத் தலைவரிடம் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (23)

# வடமாகாண பூப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்ட மட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பூப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் மோதவுள்ள அணிகளின் விவரம்

### 15 வயதுப் பிரிவு ஆண்கள்

*உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி அக்கராயன்குளம் மகா வித்தியாலயம்.

*வவுனியா குளவிசுட்டான் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி.

* வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

*முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி.

*வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

*மன்னார் பெரிய மடு மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் மன்னார்கருங்கண்டல் மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து கனகபுரம் மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

### 15 வயதுப் பிரிவு பெண்கள்

முல்லைத்தீவு பாரதி வித்தி. எதிர் வவுனியா முஸ்லிம் ம.வி.

மன்னார் சென்.மேரிஸ் பெண்கள் கல்லூரி எதிர் முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை.

வவுனியா அல் இக்பால் ம.வி. எதிர் கிளிநொச்சி ம.வி.

வுவனியா இறம்பைக்குளம் பெண்கள் ம.வி. எதிர் மன்னார் பெரிய மடு ம.வி.

கிளிநொச்சி கனகபுரம் ம.வி. எதிர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.


மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையும் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் மோதவுள்ளன.

### 19 வயதுப் பிரிவு பெண்கள்

*வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி.எதிர் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

*கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம். எதிர் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.



*வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி எதிர் முல்லைத்தீவு பெரியமடு மகா வித்தியாலயம்.

*முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

*மன்னார் சித்தி விநாயகா வித்தியாலயம் எதிர் வவுனியா [illegible]பிரகாச மகளிர் கல்லூரி.

*மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி எதிர் முல்லைத்தீவு ஒலுமடு மகா வித்தியாலயம்

இரண்டாம் சுற்றில் இருந்து கடந்தாண்டு முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

### 19 வயதுப் பிரிவு ஆண்கள்

உடுவில் மாண்ஸ் ம.வி. எதிர் கிளிநொச்சி கனகபுரம் ம.வி.

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி எதிர் வவுனியா தமிழ் ம.ம.வி.

வவுனியா குளவிசுட்டான் ம.வி. எதிர் மன்னார் பெரிய மடு ம.வி.

முல்லைத்தீவு செம்மலை ம.வி. எதிர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியாணந்தாக் கல்லூரி எதிர் கிளிநொச்சி ம.வி.

வவுனியா அல் இக்பால் ம.வி. எதிர் மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி.

கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர் முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை.

மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாம் சுற்றில் இருந்து மோதவுள்ளது.

(ங-23-86-400-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயிடம் அடிவாங்கிய ஆபிரிக்கா

சிம்பாப்வேயுடன் இடம்பெற்ற 'ரி-20' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 29 ஓட்டங்களால் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்துள்ளது. சகல துறைகளிலும் அசத்திய சிம்பாப்வே அணி தனது சொந்த மண்ணில் இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

சிம்பாப்வேயில் 'ரி-20' முக்கோண கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் ஹராரே விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் 20 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிபண்டா, மஸகஷ்டா இருவரும் அரைச் சதம் அடித்து அசத்தினர். இந்த ஜோடி முதலாவது இலக்குக்காக 13.3 பந்துப் பரிமாற்றங்களில் 114 ஓட்டங்களைப் பகிர்ந்தது. சிபண்டா 50 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மஸகஷ்டா 39 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் அணித் தலைவர் ரெயிலர் 21 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க சிம்பாப்வே 176 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கடின இலக்காயினும் பலமான அணியான தென்னாபிரிக்க அணி இலக்கை விரட்டத் தொடங்கியது. துடுப்பாட்டத்தில் அசத்திய சிம்பாப்வே பந்து வீச்சிலும் தனது இலக்கு வேட்டையை நடத்தியது. மொப்வூவின் பந்து வீச்சில் ஆபிரிக்காவின் முன் வரிசை



இலக்குகள் மெல்ல மெல்ல சரிய தோல்வியை நோக்கி ஆபிரிக்கா நகர்ந்தது. லெவி 28 பந்துகளில் 40, இங்கிராம் 39 பந்துகளில் 48 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். இதனால் தென்னாபிரிக்க அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 29 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக பந்து வீச்சில் அசத்திய மொப்வூ தெரிவானார். (5)

# நான் ரெடி

எனது உடல் நிலை தற்போது தேறிவிட்டது. இதனால் இலங்கையில் நடைபெறவுள்ள 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றுபவதற்கு எதிர்பார்ப்பதாக இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

டுபாயில் ஐ.சி.சி கிரிக்கெட் 360 என்ற ஆட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு புற்றுநோயாளியால், புற்று நோயிலிருந்து மீள்வது என்றால் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. மேலும் நான் உடல் நிலை தேறிவிட்டதாக உணர்கின்றேன். இதனால் இலங்கையில் நடைபெறும் 'ரி-20' உலகக் கிண்ண தொடரில் பங்குபற்றுவதற்கு தயாராகவே இருக்கின்றேன்.

இந்தியாவுக்கு விளையாடுவது என்பது மிகப்பெரிய சவால், ஏனெனில் உடல் நிறைய அதிர்ச்சியை சந்தித்து விட்டது அதனை என்னைத் தவிர வேறு யாரும் உணர முடியாது. நான் எப்போது திரும்புவேன் என்பதற்கு சரியான காலத்தைக் குறிப்பிட முடியாது என்றாலும் 75% உடல் தகுதியுடன் நான் விளையாட விரும்பவில்லை. 100% உடற்தகுதி அவசியம்.

இதற்கு 6 மாத ஆகலாம், 2 மாதகாலமாகலாம். ஆனால் 100% உடற்தகுதி பெற்று விட்டேன் என்று உணர்ந்தால் நான் நிச்சயம் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என்றார். (5)




# மிரட்டல் விடுக்கும் வீரர்கள் சூடு பிடிக்கும் ரென்னிஸ் களம்



லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் குறித்த விவகாரத்தில், இந்திய ரென்னிஸ் கழகத்திற்கு லியண்டர் பயஸ் மிரட்டல் விடுத்துள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இரட்டையர் ரென்னிஸ் போட்டியில் இளைய வீரர்களுடன் விளையாடுவதாக இருந்தால் தான் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலக உள்ளதாக இந்திய ரென்னிஸ் கழகத்திற்கு லியண்டர் பயஸ் மிரட்டல் விடுத்துள்ளார்.

மகேஷ் பூபதி மற்றும் ரோஹன் போபன்னா ஆகியோர் பயஸூடன் இணைந்து விளையாட மறுப்பு தெரிவித்துள்ளதால் இந்திய ரென்னிஸ் கழகம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ள நிலையில் இளைய வீரர்களுடன் விளையாட பயஸூம் மறுத்துள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்களின் பெயர்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாள் என்பதால் வீரர்களை தெரிவு செய்யும் நெருக்கடியில் இந்திய ரென்னிஸ் கழகம் (ஏ.ஐ.டி.ஏ) உள்ளது. (5)

# தண்டனையால் தவறவிடப்படும் ஆட்டம்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹகிற்கு ஒரு ஆட்டத்தில் விளையாடுவதற்கான தடையை சர்வதேசக் கிரிக்கெட் சபை விதித்துள்ளமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற 5 ஆவதும், இறுதியுமான ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வழங்கப்பட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காமை காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 ஆவது ஆட்டத்தில் வழங்கப்பட்ட நேரத்திற்குள் பாகிஸ்தான் அணி 3 பந்துப் பரிமாற்றங்கள் தாமதமாகப் பந்துவீசியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையினாலேயே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அணி வீரர்கள் அனைவருக்கும் அவர்களது போட்டி ஊதியத்தின் 40 சதவீதப் பணம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஆட்டத்தில் ஏற்பட்ட நேர விரயங்கள் அனைத்தையும் கருத்திற் கொண்ட பின்பும் பாகிஸ்தான் அணி 3 பந்துப் பரிமாற்றங்கள் தாமதமாகப் பந்துவீசியிருந்தது எனவும், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நடைமுறைகளின் படி இது பாரதூரமான குற்றம் என்பதால் மிஸ்பா உல் ஹகிற்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் தலைவராகத் தொடர்ச்சியாகப் பதினைந்து டெஸ்ட் ஆட்டங்களில் அணித்தலைவராகப் பணியாற்றியிருந்த மிஸ்பா உல் ஹக், 23 ஆட்டங்களில் தலைவராகக் கடமையாற்றியிருந்த அப்துல் காதரின் பாகிஸ்தான் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை இதன் மூலம் இழந்துள்ளார். (5)

# அப்ரிடி அதிரடி ஓய்வு




இளைஞர்களுக்கு வழி விடும் வகையில் ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வு பெறப் போவதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும், சகல துறை வீரருமான சயிட் அப்ரிடி அறிவித்துள்ளார்.

தற்போது இலங்கைக்கெதிரான ஒரு நாள் தொடரில் விளையாடிய பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ள அப்ரிடி, இதுவரை விளையாடிய 4 ஆட்டங்களில் வெறும் 28 ஓட்டங்கள் மற்றும் 3 இலக்குகளையே கைப்பற்றியுள்ளார். அத்துடன் இந்த ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 1-3 என்ற கணக்கில் இழந்தது.

தனது மோசமான ஆட்டம் பற்றிப் பேசிய அப்ரிடி, நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பாக விளையாடவில்லை. மோசமான திறன் காரணமாக நான் ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வுபெற உள்ளேன். இது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறேன். விரைவில் ஓய்வு முடிவை வெளியிடுவேன்.

இளைஞர்களுக்கு வழிவிடுவதற்காகவே நான் ஓய்வுபெற உள்ளேன். அப்போதுதான் 2015 இல் நடக்க உள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு சிறந்த பாகிஸ்தான் அணியை அனுப்ப முடியும் என்றார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த இஜாஸ்பட்டுடன் ஏற்பட்ட மோதலால், அனைத்து வடிவிலான கிரிக்கெட்டிலிருந்தும் தான் ஓய்வு பெறுவதாக கடந்த வருடம் அப்ரிடி அறிவித்தார். ஆனால் இஜாஸ்பட் மாற்றப்பட்டு சகா அஷ்ரப் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டதும் தனது முடிவை மாற்றிக்கொண்ட அப்ரிடி, மீண்டும் சர்வதேச தொடரில் விளையாடிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# இங்கிலாந்து செல்லும் சிங்


இந்திய அணியில் தற்போதைக்கு இடம் கிடைக்கும் வாய்ப்பு இல்லாத ஹர்பஜன் சிங் இங்கிலாந்து கழக அணியான எசெக்ஸ் அணியில் இணைந்து ஆடும் வாய்ப்புகள் பிரகாசமாகியுள்ளன.

31 வயதாகும் ஹர்பஜன் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலே இந்திய அணியில் இடம்பெற முடியாமல் தவித்து வருகிறார். அவரது இடத்திற்கு தற்போது அஸ்வின் வந்து விட்டதால் ஹர்பஜனுக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

98 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 406 இலக்குகளை வீழ்த்தியவர் ஹர்பஜன். அதேபோல 229 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி 259 இலக்குகளைச் சாய்த்துள்ளார்.

கடைசியாக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை - ஓகஸ்ட்டில் இங்கிலாந்துக்கெதிராக நடந்த டெஸ்ட் தொடரில்தான் ஹர்பஜன் கலந்துகொண்டார். அதே போல 2011 ஜூன் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒரு நாள் ஆட்டம்தான் அவர் கடைசியாக ஆடிய ஒரு நாள் ஆட்டமாகும்.

அண்மையில் நடந்த ஐ.பி.எல். தொடரில் தனது மாயாஜாலப் பந்து வீச்சை வெளிப்படுத்த ஹர்பஜன் தவறியதால் அவருக்கு இந்திய அணியில் இடம் கிடைப்பது என்பது இயலாத காரியமாகி விட்டது. இதனால் தற்போது இங்கிலாந்து பிராந்திய அணியான எசெக்ஸ் அணியில் இணைந்து விளையாடும் வாய்ப்புகள் பிரகாசமாகியுள்ளன. தற்போது ஹர்பஜனுடன் எசெக்ஸ் அணி நிர்வாகம் பேசி வருகிற[illegible]கும் இடையே [illegible] வுள்ளது.



எசெக்ஸ் அணியில் இரண்டு வெளிநாட்டு வீரர்கள் விலகிச் சென்றால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தற்போது ஹர்பஜனை பேசி வருகிறார்கள். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பீட்டர் சிடில் காயம் காரணமாக திரும்பி விட்டார். பங்களாதேஷின் சகிப் அல் ஹசன் அணியில் சேர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஹர்பஜன் அணியில் இணைவதன் மூலம் எசெக்ஸ் அணியில் நான்கு சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெறும் நிலை உருவாகும். மேலும் ஹர்பஜன் சிங், எதிர்வரும் இலங்கை மற்றும் நியூசிலாந்து தொடரிலும், 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரிலும் இந்தியா சார்பில் விளையாட தீவிர அக்கறை செலுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சானியாவுடன் விளையாட அனுமதிப்பாரா பூபதி

ஒலிம்பிக் போட்டி ரென்னிசில் முதல் முறையாக கலப்பு இரட்டையர் பிரிவு, இந்த முறை சேர்க்கப்பட்டுள்ளது. கலப்பு இரட்டையரில் இந்தியா சார்பில் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவுடன் யாரை ஜோடியாக சேர்ப்பது என்பதிலும் குழப்பம் ஏற்படும் என்று தெரிகிறது.

சானியா மிர்சா, தற்போது மகேஷ் பூபதியுடன் இணைந்து விளையாடி வருகிறார். இவர்கள் அண்மையில் பிரெஞ்ச் திறந்த கலப்பு இரட்டையரில் பட்டம் வென்று அசத்தினர். ஒலிம்பிக்கிலும் பூபதியுடன் தொடர்ந்து சேர்ந்து விளையாட விரும்புவதாக அப்போது சானியா தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் சானியாவுடன் பயஸ், ஜோடி சேர ஆசைப்படுகிறார். இந்திய ரென்னிஸ் சங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த விடயத்தையும் அவர் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார்.

பயஸ் அனுப்பிய கடிதத்தில் கூறியதாவது, பூபதி மற்றும் போபண்ணாவும் என்னுடன் விளையாட மறுக்கும் இத்தகைய சூழலில் இந்திய ரென்னிஸூக்காகவும், அணியை தெரிவு செய்வதில் அகில இந்திய ரென்னிஸ் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்கவும் எனக்கு ஒலிம்பிக் தொடரில் இருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த முடிவை எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பூபதி-போபண்ணாவால் நடத்தப்படும் இந்த நாடகத்திற்கு அவர்களுக்கு பரிசோ அல்லது மன்னிப்போ அளிக்க முடியாது. ஆனால் இது நம் நாட்டில் இப்போதும் எதிர்கால வீரர்களுக்கும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விடும்.

மகேஷ் பூபதி அல்லது ரோகன் போபண்ணா ஆகியோரில் ஒருவருடன் இணைந்து விளையாட இப்போதும் தயாராக இருக்கிறேன். உலக இரட்டையர் தரவரிசையில் 7 ஆவது இடத்தில் இருக்கும் நான், இன்னொரு விடயத்தையும் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

நானும், சானியாமிர்சாவும் இணைந்து இரட்டையர் தரவரிசையில் ஏறக்குறைய 19 ஆவது இடத்தை பெற்றிருக்கிறோம். இந்த தரவரிசைப்படி, நாங்கள் லண்டன் ஒலிம்பிக் கலப்பு இரட்டையருக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## ஓய்வு பெற்றவர் மீண்டும் களத்தில்



நியூசிலாந்து அணி சார்பாக மீண்டும் 'ரி-20' சர்வதேச தொடர்களில் பங்கு பற்றுவதற்குத் தயாராக இருப்பதாக நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரரும், முன்னாள் தலைவருமான டானியல் விட்டோரி தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு சர்வதேச தொடரிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்த அவர், தற்போது மீண்டும் ஆட்டங்களில் பங்குபற்றத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண தொடரை அடுத்து டெஸ்ட் தொடரில் முழுமையாகக் கவனம் செலுத்தும் முகமாகவும், தனது உடலுக்கு ஓய்வினை வழங்குவதற்காகவும் 'ரி-20' சர்வதேச ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறுவதாகவும், ஒரு நாள் ஆட்டங்களிலிருந்து நிரந்தர ஓய்வினைப் பெற்றுக்கொள்ளாத போதிலும், ஓய்வினை அறிவிப்பதாகவும் டானியல் விட்டோரி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 'ரி-20' தொடருக்கு 3 மாதங்களுக்கும் குறைவான நாள்களே உள்ள நிலையில் 'ரி-20' சர்வதேச தொடரில் ஆடுவதற்குத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இது நியூசிலாந்து அணிக்கு சிறந்த வாய்ப்புக்களை வழங்கும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

'ரி-20' ஆட்டங்களை டானியல் விட்டோரி விரும்பி விளையாடும் ஒருவர் எனத் தெரிவித்த நியூசிலாந்துக் கிரிக்கெட் சபையின் தேசிய தேர்வுக் குழு முகாமையாளர் கிம் லிட்டில்ஜோன், டானியல் விட்டோரின் மீள்வருகையை நியூசிலாந்து வீரர்கள், பயிற்றுவிப்பு அதிகாரிகள் மற்றும் நியூசிலாந்துக் கிரிக்கெட் சபை ஆகியோர் முழுமையான மனதுடன் வரவேற்பதாகத் தெரிவித்தார். அவரது அனுபவம் நியூசிலாந்து அணிக்கு முக்கியமானதாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி இலங்கையில் ஆரம்பிக்கவுள்ள 'ரி-20' உலகத் தொடருக்கான நியூசிலாந்துத் தற்காலிக அணி எதிர்வரும் ஜூலை 18 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)


| இலங்கை வங்கி | SLAS |
|---|---|
| போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 10 மணி தொடக்கம் 5 மணிவரை | போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு இன்று, நாளை, நாளை மறுதினம் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை |

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி, கொமர்ஷல் வங்கி அருகில்)

அனைத்து கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
23.06.2012
25.06.2012
காலை 10.00 மணி
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

BIT Degree
தொடர்ந்து 10 வருடங்களாக BIT பட்டக்கற்கை நெறியில் முன்னணியில்...
Earn IT Degree from University of Colombo
By R.Kumaran-B.Sc.
TP: 0776577359
(19438)
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன்
74, சபாபதி லேன், யாழ்ப்பாணம்
பல்கலைக்கழக வீதியிலிருந்து 200 m
MIS BIT Academy


## தேர்தல் முடிவுக்காக பயிற்சியைத் தள்ளிப் போட்ட வீரர்கள்

ஜேர்மன் அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்துக்குத் தயாராவதை விட, கிரீஸ் தேர்தல் முடிவுகளை தெரிந்து கொள்வதில் கிரீஸ் அணி வீரர்கள் அதிக அக்கறை செலுத்தி உள்ளனர்.

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றிருந்த கிரீஸ் அணி, ரஷ்யா, போலந்து அணிகளை பின்னுக்குத் தள்ளி காலிறுதிக்கு முன்னேறியது. இதனால் காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியை இன்று எதிர்கொள்கிறது.

இதனிடையே கிரீஸில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் 17 ஆம் திகதி வெளியாகின. ஜேர்மனிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்துக்குத் தயாராவதை விட, தேர்தல் முடிவுகளைத் தெரிந்து கொள்ளத் தான் கிரீஸ் வீரர்கள் அதிக நேரம் ஒதுக்கியுள்ளனர்.

இது குறித்து கிரீஸ் வீரர் கிளானிஸ் மனியாடிஸ் கூறுகையில், எங்களைப் பொறுத்தவரை கால்பந்து குறித்து தான் பேசுவோம். தேர்தல் முடிவுகள் எங்கள் அணியில் எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது. கிரீஸ் மக்களுக்கு எங்களால் முடிந்த வரை மகிழ்ச்சியை கொடுக்க வேண்டும், அவ்வளவு தான் என்று தெரிவித்தார். (5)


## மரண அறிவித்தல்

### திருமதி றோகினி தர்மசீலன்



கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடி யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றோகினி தர்மசீலன் நேற்றுமுன்தினம் (20.06.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதன் - சுப்புலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் தர்மசீலனின் அன்பு மனைவியும் சங்கரின் அன்புத் தாயாரும் குலசேகரம் (குலம் - ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கிளி- நோர்வே), நந்தினி (றஞ்சி - லண்டன்), சுதர்மன் (சோமன் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, தமயந்தி, பத்மநாதன், குசலகுமாரி (குசலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வாணுவி, றேஜீனா, விஜய், பரதன், லக்ஸ்மன், லக்மி, லக்சிகா ஆகியோரின் மாமியும் பவீசன், நர்மதா, தேனுகா ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2012) வெள்ளிக்கிழமை கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப ஒரு மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குலம் - ஜேர்மனி - +495204887278,
கிளி - நோர்வே - +4721384081,
றஞ்சி - பிரித்தானியா - +442082050389,
சோமன் - பிரித்தானியா - +442088383384

தகவல்
(19664)(6.34) குடும்பத்தினர்

# Mora E-Tamil 2014

Mora E Tamil 2014

## Model Exam-2012

மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் நாடளாவிய ரீதியான தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மாபெரும் முன்னோடிப் பரீட்சை.

பரீட்சைக்கான அனுமதிகள் பரீட்சை மண்டபங்களில் முதல் நாள் பரீட்சை அன்று (23.06.2012) பெற்றுக்கொள்ளலாம்

| DISTRICT | CENTERS |
|---|---|
| JAFFNA | 1. JAFFNA HINDU COLEEGE(BOYS)<br>2. JAFFNA HINDU LADIES COLLEGE(GIRLS)<br>3. JAFFNA HARTLY COLLEGE<br>4. CHAVAKACHERI HINDU COLLEGE |
| TRINCOMALEE | 1. ST.MARY'S COLLEGE |
| BATTICALOA | CENTERS FOR BOYS<br>1. ST.MICHAEL'S COLLEGE<br>2. BT/SHIVANANDA NATONAL SCHOOL<br>3. BT/METHODIST CENTRAL COLLEGE<br>4. BT/ARAYAMPATHY SCHOOL<br>5. BT/CHENKALADY SCHOOL<br>6. BT/ALIGAR CENTRAL COLLEGE<br>7. BT/KATTANKUDY CENTRAL COLLEGE<br>CENTERS FOR GIRLS<br>1. VINCENT GIRLS HIGH SCHOOL<br>2. ST.CECILIA'S CONVENT<br>3. BT/VIVEKANANDA GIRLS SCHOOL<br>OTHER CENTERS<br>1. KALUTHAVALAI MAHA VIDYALAYAM<br>2. PADDIRUPU MAHA VIDYALAYAM<br>3. PERIYA KALLAR CENTRAL COLLEGE |
| COLOMBO | 1. BAMPALAPITIYA HINDU COLLEGE(BOYS)<br>2. RAMANATHAN HINDU LADIES COLLEGE(GIRLS) |

| DISTRICT | CENTERS |
|---|---|
| AMPARAI | KALMUNAI CENTERS<br>1. KALMUNAI FATHIMA COLLEGE<br>2. WESLEY HIGH SCHOOL<br>3. KARAITHIVU VIVEKANANDA SCHOOL<br>4. THURAINEELAVANAI MAHA VIDYALAYAM<br>5. SAMS CENTRAL COLLEGE<br>6. ZAHIRA NATIONAL SCHOOL<br>7. MAHMOOD BALIKA GIRLS SCHOOL<br>AKKARAIPATTU CENTERS<br>1. AKKARAIPATTU SRI RAMA KRISHNA COLLEGE<br>2. THAMBILUVIL MATHYA MAHA VIDYALAYAM<br>3. AYSA BALIKA GIRLS SCHOOL<br>4. AS-SIRAJ MAHA VIDYALAYAM<br>5. AKKARAIPATTU CENTRAL COLLEGE |
| MULLAITIVU | 1. M/VIDYANANDA COLLEGE<br>2. M/PUTHUKKUDIYIRUPPU COLLEGE |
| POLONNARUWA | 1. P/MUSLIM CENTRAL COLLEGE |
| VAVUNIYA | 1. V/TAMIL MADHYA MAHA VIDYALAYAM<br>2. SIVAPIRAKASA GIRLS SCHOOL<br>3. VIPULANANTHA SCHOOL<br>4. RAMBAIKULAM GIRLS SCHOOL VAVUNIYA |

### MODEL EXAM TIMETABLE

| DATE | SUBJECT | DATE | SUBJECT |
|---|---|---|---|
| 23.06.2012 | BIOLOGY I | 01.07.2012 | PHYSICS I |
| | COMBINED MATHS I | 07.07.2012 | PHYSICS II |
| 30.06.2012 | BIOLOGY II | 08.07.2012 | CHEMISTRY I |
| | COMBINED MATHS II | 08.07.2012 | CHEMISTRY II |

மேலதிக விபரங்களுக்கு எமது உத்தியோகபூர்வ இணையத்தளமான
www.moramodelexams.com
பார்வையிடவும்

பிரதான அனுசரணை
www.harikanan.com, e-mail: print@harikanan.com
HARIKANAN (PVT) LTD.
PRINTERS OF THE NORTH
(19661)(6.34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.